# சிவப்புச் சிந்தனைகள்

கவிச்சித்தர்
**க. பொ. இளம்வழுதி**

**மீனா புத்தகப் பண்ணை**
269, கிழக்கு புதுவைச் சாலை
விழுப்புரம்-605602

## நூலாக்கம்

- நூல் : சிவப்புச் சிந்தனைகள் (கவிதைத் தொகுப்பு)
- ஆசிரியர் : கவிச்சித்தர் க. பொ. இளம்வழுதி
- முதற்பதிப்பு : டிசம்பர் 1985
- உரிமை : ஆசிரியர்க்கு
- வெளியீடு : மீனா புத்தகப் பண்ணை<br>269, கிழக்குப் புதுவைச் சாலை<br>விழுப்புரம்-605602
- அச்சு எழுத்து : 10 pt
- பக்கம் : XII + 152 = 164
- விலை : ரூ 14-50
- அச்சுத்தாள் : 11. 6 கி. கி.
- ஓவியர் : P. N. ஆனந்தன், சென்னை-5
- அச்சும் அமைப்பும் : ஸ்ரீ கோமதி அச்சகம்<br>41, சூரப்ப முதலித் தெரு<br>சென்னை-600005
- கட்டமைப்பு : உமாபதி கட்டமைப்புப் பணியாகும், சென்னை-14.

திருக்குறள் மணி,
திருக்குறள் சித்தர், குறள்நெறித் தோன்றல்
டாக்டர் க. த. திருநாவுக்கரசு M. A. (Tamil),
M. A. (Hist), M. Litt, Ph. D., Dip-In-Ling.

# அணிந்துரை

கலைப் பூங்காவில், கவிதை ஒரு முல்லைக் கொடி. அக்கொடியில் பூத்துக் குலுங்கும் மலர்கள் வண்ணத்தால், மணத்தால், வடிவத்தால் வேறு பட்டவை? முல்லை மலர்களில் காண இயலாத இப்புதுமை!

தமிழர் பெற்றுள்ள இலக்கியச் செல்வத்துள் தொன்மையானது கவிதை! தொன்றுதொட்டு பல்வேறு இலக்கிய வகைகளுக்கு ஊடகமாய் நின்று நிலவி வருவது கவிதை.

சங்க காலப் புறப் பாடல்களுக்குப் பிறகு, தன் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளை, அப்படியே கவிதை வடிவில், கவிஞன் வெளியிடும் வழக்கம் இக் காலத்தில்தான் சிறந்து ஓங்கியுள்ளது எனலாம். இடைக் காலத்தின் இடைப்பகுதி முதல் புலவர் பலர், இயற்றிய 'தனிப் பாடல்' கள் ஓரளவிற்கு நமக்குக் கிடைத்துள்ளன. எனினும், அவை உணர்ச்சி வெளியீட்டின் முழுநிறைவைப் பெறவில்லை!

இந்த நூற்றாண்டில், புதிய பாடுபொருள்களைத் தெளிவாக எளிதில் எடுத்துரைப்பதற்கு, ஏற்றதொரு புதுவடிவத்தைப் பாரதியார் முதல் நம் கவிஞர்கள் பயன் படுத்தி வருகின்றனர். மேற்கு நாட்டினரால், 'லிரிக்' (Lyric) எனப் போற்றப்படும் தன்னுணர்ச்சிப் பாடல்

மரபை யொட்டியது நம் நாட்டுக் கவிஞர்கள் பின்பற்றி வரும் இப் புதிய கவிதை வடிவம். 'பாடுபொருளின் புதுமையைப்' புலப்படுத்துவதற்கே, இந்தப் பாவகை பெரிதும் இன்று பயன்படுத்தப் படுகிறது.

தானே பேசும் வகையில் (தன்மை இடத்தில்), கவிஞன் இயற்றும் பாவே தன்னுணர்ச்சிப் பாட்டு. தனி மனிதனுடைய உணர்ச்சியை, அனுபவத்தைப் பெரிதும் குறுகிய வடிவில் வெளிப் படுத்துவதே தன்னுணர்ச்சிப் பாட்டு. அந்த உணர்ச்சி நிலை, கண நேரம் (மெய்ப்பாட்டைப் போன்று) நிலைப்பதாகவோ, நாட்டுப் பற்றைப் போன்று நெடுங்காலம் நிலைத்து நிற்கக் கூடியதாகவோ இருக்கலாம். ஆனால் உணர்ச்சிப் பெருக்கு, உணர்ச்சிக் கனிவு, உணர்ச்சித் துடிப்பு, காட்டாற்று வெள்ளம் போல் திடுமெனத் தோன்றிக் கட்டற்ற நிலையில் பாய்ந்து ஓடுவதாக அமைவதைக் காணலாம்.

இத்தகைய உணர்ச்சிப் பெருக்கோடு சிந்தனை யோட்டமும் உடையதாய் அமைந்ததே கவிஞர் திரு. க. பொ. இளம் வழுதி அவர்களுடைய 'சிவப்புச் சிந்தனைகள்' எனும் இக்கவிதைப் படைப்பாகும்!

நூலின் தலைப்பே, நம்முடைய சிந்தனையை உயரப் பறக்குமாறு தூண்டி விடுகிறது. 'செந் (சிவப்பு) நிறம்' பொதுவாக இந்திய மண்ணில் மட்டும் அல்லாமல், உலகெங்கும் 'அபாய அறிவிப்பை'ச் சுட்டும் வண்ணக் குறியீடாகக் கருதப்படுகிறது.

இன்றைய சமுதாயத்தின் சீர்கேடுகளை, தனிமனிதர்களின் நயவஞ்சகச் செயல்களை, நிறுவனங்களின் சுரண்டல் போக்குகளை ஆளவந்தாரின் ஆதிக்க வெறியினை அடியோடு மாற்றுவதற்கு எழப்போகும் 'புரட்சி' பற்றிய 'அபாய அறிவிப்பை' இந்நூலில் உள்ள பாடல்கள் வெளிப்படுத்துகின்றன எனக் கூறினால், அது தவறாகாது.

பொதுவுடைமைத் தத்துவத்தை அரசியல் அமைப்பு நிலையில் நடைமுறைப் படுத்தி வரும் நாடுகளில் செங்கொடிகள், பாட்டாளிகளின் வெற்றிச் சின்னமாகப் பட்டொளி வீசி பறப்பதைக் காணுகின்றோம். 'எல்லார்க்கும் எல்லாம் எற்றிருப்பதான' அந்தப் பொதுவுடைமைச் சமுதாயத்தைப் படைப்பதற்குத் தூண்டும் சிந்தனை அலைகளைக் கொண்ட இந்த நூலைச் 'சிவப்புச் சிந்தனைகள்' எனச் சுட்டுவதும் பொருத்தமேயாகும்.

இந்நூல் இன்றைய சமுதாய நிலைகளைச் சுட்டி ''சிவப்புச் சிந்தனைகள்'' என்றும், மறக்கப்பட்ட தியாக தீபங்களை நினைவு கூர ''வறதியின் மறுபக்கம் என்றும் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

**1. சிகப்புச் சிந்தனைகள் :**

இந்தப் பகுதியில் அன்றாட வாழ்க்கையில் நாம் காணும் அலங்கோலங்களையும், அவலங்களையும் நாற்பத்தைந்து தலைப்புகளில், கவிஞர் பெருமான், ஓடும் திரைப்படமாக்கிக் காட்டியுள்ளார். குறைகளைச் சாடும் நேரத்தில், போலிகளைக் கண்டு இனம் கொள்ளுமாறு சுட்டிக் காட்டும் சமயத்தில், புதிய உலகை—புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்குரிய வழிவகைகளைக் கவிஞர் இளம்வழுதி எடுத்துரைக்கத் தவறவில்லை! இக்கவிதைகளில் தமிழுணர்வும், அறவேட்கையும், புதிய சமுதாயத்தைப் பார்க்க வேண்டும் எனும் துடிப்பும் இழைந்தும், எழிலோவியங்களாக வெளிப்பட்டுள்ளன.

'மே நாளி'ன் மாட்சியை அறிமுகப்படுத்தும் பாணியைக் காண்போம் :

''நெருப்பு நிலத்தில்
கொழுப்பை விதைத்தவர்
இடிப்பைத் தீய்த்த
இன்பத் திருநாள்''

இவ்வடிகளில், அமைந்துள்ள 'நெருப்பு நிலம்', கொழுப்பு விதை' என்னும் படிமங்கள் (Images) படிப்பவர் கண் முன்னே, பட்டாளி மக்களின் அவல வாழ்க்கையைக் கொண்டு வந்து நிறுத்துகிறது.

மனிதனாகப் பிறந்தவன், இம்மண்ணுலகில் உள்ள உயிர்களுக்குப் பயன் படுமாறு வாழவேண்டும் எனும் எண்ணத்தை ஒவ்வொருவருக்கும் ஊட்ட வேண்டும் எனும் துடிப்பு மிக்கவராகக் கவிஞர் காட்சி தருகிறார்.

> "ஏடா மனிதா! இப்பெரும் உடலால்,
> என்னடா உலகுக்கு லாபம்?"

எனும் வினாவினை எழுப்பி, சிந்திக்குமாறு தூண்டுவது மிகச் சிறந்த கவிதையாகத் தோன்றுகிறது!

இன்றைய மக்கள் வாழ்க்கையை அலைக்கழிப்பன கவர்ச்சிமிகு கலைகள்! அதனை 'நிலைகெடுக்கும் கலைகள்' எனும் தலைப்பில் அமைந்துள்ள கவிதை, நம் சிந்தனைக்கு நல்விருந்தாகும்.

> "பணநோக்கில் பதினாறும் நிரம்பும் பெண்கள்
> படுக்கையறைக் காட்சிகளில் தோன்றும் போது
> மணல்மீது விட்டசிறார் போலே ஆசை
> மனங்கோண ஆடுவதைத் தடுக்கா ஆட்சி
> மணவினைக்கே வயதுவரம் புரைக்கும் சட்ட
> மடைகட்டி என்ன பயன்? கலையின் பேரால்,
> குணம்கெடுப்பார், பணம்பறிப்பார் தொண்டராவார்
> குடிமக்கள் பரிதவிப்பார்; சட்டம் எங்கே?"

எனும் எழுச்சிமிகு கேள்வியில், கவிஞரின் அறமயமான சீற்றம் வெளிப்படுகிறது.

'சிந்தையும் செயலும்' எனும் பாடப்பகுதியில், 'சிந்தனையில் தெளிவு இருந்தால், செயலில் வலிவு இருக்கும்' எனும் உண்மையைக் கவிஞர் தெளிவுறுத்தும் திறன் போற்றத் தக்கதாகும்.

சாதீ எனும் கவிதையில், இன்றைய வாழ்வில், எவ்வெவ் வடிவங்களில் எல்லாம் 'சாதி' வெளிப்படுகிறது என்பதை மன உலைச்சலோடும் எரிச்சலோடும் திரு இளம்வழுதி எடுத்துரைக்கும் முறை, நம்மை எல்லாம் கிளர்ந்தெழச் செய்வதாகும்.

"தீயணைக்க வேண்டுமெனப் பேசிக்கொண்டே

தேடியதில் மண்ணெண்ணெய் வார்ப்பார் போலே
தாயகத்தில் சாதிவெறி கூடா தென்றே

தலைவரெல்லாம் பேசுகிறார்; வீட்டுக் குள்ளே
வாயசைந்துக் கலம்புமணம் காண்பா ரானலே

வரலாறு சாதிக்கு இறந்த காலம்!
ஆயகலை நாமறியோம்; ஊரை ஏய்த்தல்

அக்கலையின் தெருகிளையே போலும் என்னே!"

எனும் கவிதை, நாட்டு நடப்பின் சிறந்ததொரு படப் பிடிப்பாகும்.

ஒவ்வொரு குடும்பத்திலும் வயது முதிர்ந்தோரை, இளையவர்கள் அலட்சியப்படுத்துவதும், சுமையாகக் கருதுவதும், புறக்கணிப்பதும் இன்று காணப்படும் காட்சி. இதனைப் 'பழுப்பும்-பராமரிப்பும்' எனும் கவிதையில் படிப்பவர் மனம் நெகிழத்தக்க வகையில் நம் கவிஞர் தெளிவுறுத்தியுள்ளார்.

இன்று நாடெங்கும் கோரதாண்டவம் புரிகின்றான் 'மது' எனும் அரக்கன்! அவனுக்கு என்று இறப்பு வரும்? எனும் தன்னுடைய பேராவலினை "மதுவுக்கு மரண மிலையோ?" எனும் வெறுப்பு கலந்த குரலில் எழுப்பு கிறார் கவிஞர் இளம்வழுதி.

இரட்டை வேடதாரிகளாக உலகை ஏமாற்றி வாழும் எத்தர்களுக்கு "மாரீச மான்கள்" எனும் கவிதையில் சவுக்கடி தருகிறார் கவிஞர்.

''நாளுக் கொன்றும் மேலுக் கொன்றும்
ஆளுக் கொன்றும் நூலுக் கொன்றும்
வாழ்க்கையில் ஒன்றும், வார்த்தையில் ஒன்றும்
காழ்ப்பி லொன்றும் களிப்பி லொன்றும்
கொள்கையாய்க் கொண்டவர், 'கொல்கை' கொண்டவர்
வெள்ளரிப் பிஞ்சில் விளங்கும் கசப்பினம்''

என மனம் நொந்து பேசுகிறார் கவிஞர்.

கவிஞராக விளங்கும் இளம்வழுதி அவர்கள், தம் இனத்தைச் சேர்ந்த கவிஞர்களின் குறைநிறைகளையும், நோக்கையும் போக்கையும், சாடாமல் விடவில்லை 'யாப்பதிகாரிகளே!' 'யாரடா கவிஞரங்கே?', 'பாடும் பரம்பரையே!' எனும் தலைப்புகளில் அமைந்துள்ள பாடல்களில், 'படைப்புலகச் சிற்பிகளான' கவிஞர்கள், எதிர்காலத்தில் எவ்வாறு எழுத வேண்டும் என்பதைக் கனிந்த அன்போடு இக்கவிஞர் பெருமான் கோடிகாட்டியுள்ளார்.

'சிவப்புச் சிந்தனைகள்' எதிர்காலக் குடிமக்களாகிய இளைஞர்களையும் மாணவர்களையும் மறந்துவிடவில்லை! 'நல்லுரை நான்கு', 'நெஞ்சில் நிறுத்துக' 'இளையோர்க்கு'. 'பணிவு', 'மாணவர்க்கு' என்பன போன்ற தலைப்புகளில் அமைந்துள்ள பாடல்கள், இளைஞரின் இதயத்தைத் தொடக் கூடியன; நல்லதோர் எதிர் காலத்தை அவர்கள் உருவாக்கிக் கொள்ள உந்துதல் சக்தியாக அமைவன.

இக்கவிதைத் தொகுப்பிற்குரிய தனிபெருந் சிறப்பு ஒன்று, பேரொளியுடன் கண்ணைப் பறிக்கின்றது. கருகிய காதலையோ, முறிந்த காதலையோ, நிறைவேறாத காதலையோ, ஏமாற்றமுற்ற காதலையோ, வெற்றி பெற்ற காதலையோ இந்நூலில் காண இயலாது' மொத்தத்தில் 'காதல்-காமம்' பற்றிய கவிதை ஒன்று கூட இந்நூலில் இடம் பெறவில்லை.

'கவிஞனுக்கு அழகு காதலைப் பாடுவது!'' எனும் பழைய கருத்தை நம்பிக்கையை நம் கவிஞர் இளம் வழுதி அடியோடு புறக்கணித்துவிட்டார். 'மனித வாழ்க்கை பரந்து விரிந்த ஒன்று! அதில் பாடுவதற்கும் பல புதிய பொருள்கள் பளிச்சிடுவதைப் பாருங்கள்!' என இளம் வழுதி, தம் நூலின் மூலம் முழக்கமிடுகிறார். இந்த வகையில், வருங்காலக் கவிஞர்களுக்கு, இக்கவிதைத் தொகுப்பு நல்லதொரு வழிக்காட்டியாக அமைந்துள்ளது. இத்தகைய சிந்தனைத் தெளிவும், நன்நோக்கமும், புதுமையைப் போற்றத் துடிக்கும் ஆர்வமும் நிறைந்த கவிஞர் இளம்வழுதி, தமிழுலகில் மற்றொரு மரபுவழி (பரம்பரை) யைத் தொடங்கி வைத்துள்ளார் எனக் கூறுவது— போற்றுவது உயர்வு நவிற்சியாகாது.

உழவர் குடியில் தோன்றியவர் நம் கவிஞர் என்பதை அவர் மிகுதியாகப் பயன்படுத்தியுள்ள சில உவமைகள் தெரிவிக்கின்றன.

''உழவார அப்பர் போல்''

''அறுவடை நாம் இதற்கெல்லாம் காண்போம் என்ற அறிவின்மை''

''விதையை விற்று வெண்ணெய் வாங்கல் போல''

''ஒரு போகம் பொய்த்ததென ஆய்ந்தொா துங்கி
ஒரு போதும் வேளாளன் சோர்வதில்லை''

புதுவகையான உருவகங்களையும், படிமங்களையும், படைத்துப் படிப்பவர் மனத்தில், தாம் சொல்ல விரும்பும் கருத்தை ஆழப் பதியுமாறு செய்வதில் கைதேர்ந்த கலைஞராக, நம் கவிஞர் விளங்குகிறார். 'நினைவின் நிழல்கள்,' 'மங்களமுகாரி (வரதட்சனை), 'தாய் மொழியா? வாய்மொழியா?' என்பன போன்ற கவிதைத் தலைப்புகளே, அவருடைய கவர்ச்சிமிகு கற்பனை ஆற்றலுக்கும் சிறப்புமிகு சான்றுகளாகும்.

கருத்துக்களை எடுத்துரைக்கும் முறைகளில் புதுமையும் கலையழகும் பொலிவுறுகின்றன. ஒவ்வொரு கவிதை தொடக்கமும், முடிவும் ஒவ்வொரு வகையாக அமைந்துள்ளவை கவிஞரின் கலைத்திறம் கருத்தூற்றத்தைக் காட்டுகிறது.

'புதிய கவிதை' இயற்றுவதையே பொழுதுபோக்காகக் கவிஞர் பலர், இக்காலத்தில் கொண்டு ஒழுகுகின்றனர். நம் கவிஞரோ, கருத்தோட்டத்தை நன்கு வெளிப்படுத்துவதற்கு ஏற்ற முறையில் மரபுவழிப்பட்ட ஆசிரியப்பா, வெண்பா, குறட்பா, விருத்தம், கண்ணி போன்ற பாக்களையும், பாவினங்களையும் பதமாகப் பயன்படுத்தியுள்ளார். 'வெண்பா' இவருடைய கவிதைகளில் களிநடம் புரிகிறது.

இத்தகைய ஏரும் எழிலும் வாய்ந்த சிந்தனைக்கு நல் விருந்தாகும் இனிய கவிதைகளைப் படைத்துள்ள பாவலர் இளம்வழுதி, பாவேந்தரின் பரம்பரையிலே தோன்றியவர்; வாணிதாசரின் அரவணைப்பில் வளர்ந்தவர்.

## 2. மறுதியின் மறுபக்கம்

மறதியின் மறுபக்கம் நூலின் இரண்டாம் பகுதியின் தலைப்பு, நம்மைத் திகைக்க வைப்பதாக மலைக்க வைப்பதாக உள்ளது. 'மறதிக்கு மறுபக்கம்' யாதாக இருக்கக்கூடும்? 'நினைவு கூர்தலே மறுபக்கமாகும். ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை மறதியும், நினைவுமாகும். அவற்றைத் தனித்தனியே பிரித்து எடுப்பது அரிய செயல். உளவியலார் கருத்திலிருந்து, நினைவாற்றலும் மறக்கும் திறனும் மூளையினுடைய வலப்பக்கத்தின் அடிப்பகுதியில் பின்னிப் பிணைந்துள்ள 'சொல்களால்' செயற்படுவனவாகத் தெரிகிறது.

இந்நூல், நாட்டு மக்களால் மறக்கப் பட்டுவிட்ட விடுதலைப் போர்வீரர்கள் ஒன்பதுக்கு மேற்பட்டவர்

களின் தியாகத்தையும், சாதனைகளையும், அவர்கள் அடைந்த வேதனைகளையும் சொற்சித்திரங்களாகத் தீட்டிக் காட்டினார்.

விடுதலை வேள்வியில்; தங்கள் உடல், பொருள், ஆவி எனும் மூன்றையும் ஆகுதியாகப் பெய்தவர்கள் பலர் பாரதத் திருநாட்டின் விடுதலையைக் காணாமலேயே அவர்களுள் பலர் உயிர்நீத்தனர். அத்தியாகிகளின் வீர வரலாறு மறக்கப்பட்டதோடு, மறைக்கப்பட்டும் உள்ள அவல நிலையைக் காணுகின்றோம். அண்மையில், பழம் பெரும் தேசபக்தரான திரு T. செங்கல்வராயன் அவர்களால் எழுதப்பட்ட 'காங்கிரஸ் கட்சியின் வரலாற்று ஏட்டில்கூட, இவர்களுள் சிலருடைய பெயர்களே சுட்டப் பட்டுள்ளன.

அண்ணல் காந்தியடிகள் விடுதலைப் போருக்குத் தலைமை ஏற்பதற்குமுன்பே, 'புரட்சி'கள் பல செய் வதற்கு முயன்றவர்கள் மூக்கண்ணாச்சாரியார், வ.உ.சி., செண்பகராமன், ஜமதக்னி, நிவேதிதா அம்மையார், ஜதீந்திரதாஸ், காமா அம்மையார், நீலகண்ட பிரம்மச் சாரி போன்றோராவர். தங்களுடைய குருதியைக் கொட்டி, விடுதலையை வேண்டி இவர்கள் நின்றனர். இவர்களுள் பழம்பெரும் தேசபக்தரும் முதுபெரும் புலவ ரான ஜமதக்னி அவர்கள் ஒருவரே, ஐந்து ஆண்டுகளுக்கு முன்புவரை வாழ்ந்தவராவர்.

இவர்களைப் பற்றி இன்றையப் பேராயக் கட்சித் தலைவர்களுக்குப் போதிய அளவிற்குத் தெரியாது. 'எங்கோ, எப்பொழுதோ கேள்விப்பட்ட பெயர்களாக உள்ளன' என்றே அவர்கள் கூறுவர்.

நம் கவிஞரின் தாய் மொழிப் பற்றும், தமிழ்நாட்டுப் பற்றும், அனைத்து இந்திய தேசியத்திற்கு முரணாக அமையவில்லை; மாறாக அவற்றை மதித்துப் போற்றுவ தோடு, வருங்காலத் தலைமுறையினர் அறிந்து போற்றத் தக்க வகையில், கதைப்பாடல்களைப் போன்று, சுவை

பட தியாகப் பெருஞ் செம்மல்களின் வரலாற்றைப் படைத்துத் தந்துள்ளது எனலாம்.

உலகில் செயற் கருஞ் செயல்கள், சாதனைகள், புதிய கண்டு பிடிப்புகள், சொற்களில் வடித்துக் கூற இயலாத தியாகங்கள் செய்தவர்கள் பலராவர்.

ஆனால், இவர்களுள் ஒருசிலரின் மீதே 'விளம்பரம்,' 'பதவிப் பொறுப்பு' எனும் வெளிச்சம்' படுகிறது. சில நேரங்களில், இந்த 'வெளிச்சம்' தகுதியற்றவர்கள் மீதே பேரளவிற்குப் படுவதையும் காணுகின்றோம். இந்நிலையில், 'மின்னுவது எல்லாம் பொன் அல்ல' எனும் பழமொழியே நினைவிற்கு வருகிறது.

இத்தகைய அவலநிலை, நம் நாட்டில் மட்டும் அன்றி மேற்கு நாடுகளிலும் இருந்து வருகிறது. இங்கிலாந்தின் கவிஞரான தாமஸ் கிரே (Thomas groy) என்பவர் இயற்றியுள்ள 'கல்லறைக் கவிதை' (Elegy written in the country Churchyard) நம் கருத்தைக் கவருவதாகும்.

"பேரொளி வீசாப்பொலிவறு இரத்தினங்கள்
    ஆழ்ந்த குழிகளில் அடைக்கப் பட்டனவே!
வாரொலி சூழ்ந்த வையகந் தன்னில்
    பூவெல்லாம் பூத்துக் குலுங்கும்
பொன்மலர்கள் வாடி வதங்கி
    உலர்ந்து உதிர்ந் தனவே!
தான்பெற்ற நறுமணத்தை வீணாய்ப்
    பாலையில் சிந்திப் பயனற்றுப் போயினவே!"

எனும் கிரேவின் பாடலே, 'மறதியின் மறுபக்கம்' எனும் இக்கவிதைகளைப் படிக்கின்ற பொழுது நினைவிற்கு வருகிறது.

பேராயக் கட்சியின் முதல் கூட்டத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்த மூக்கண்ணாச்சாரி என்பவர், தம்முடைய தீர்மானத்தைத் தமிழிலே அரங்கேற்றிய அரிய செய்தி புதுமையானது; பூரிப்பு அளிப்பதாகும்.

"தடியடி பட்ட போதும்
    தனையிடர் சூழ்ந்த போதும்
குடிதனை வளர்க்குங் கள்ளுக்
    கடையெதிர் மறியல் செய்தே!

இடியென முரடன் கத்தி
இவன்தலை பிளந்த போதும்
முடிந்தது தொண்டு என்றே
முடங்கிட தேச நேசன்!''

என்பது கவிஞர் ஜமதக்னியைப் பற்றிய ஒரு சிற்றோவியம்.

இத்தகைய, படிக்கப் படிக்க இனிக்கும் பாடல்கள் நம் நாடி நரம்புகளில் முறுக்கேற்றி வீரவுணர்வை உந்தும் வரலாறுகள் இந்த நூலை அணி செய்கின்றன.

முன்னோர் மொழி பொருளை மட்டும் அல்லாமல் முன்னோர் வாழ்வையும் வரலாற்றையும் பொன்னே போல் போற்றிப் பரப்பும் கடமையுணர்வு மிக்கவராக இக்கவிஞர் விளங்குகிறார் இத்துறையில் அவருடைய பணி, தொடர்ந்து வளரவேண்டும். சிறக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இந்த நூல் ஒரு புதிய முயற்சி; போற்றி ஆதரிக்க வேண்டிய பெரு முயற்சி! பிற கவிஞர்களுக்கு வழி காட்டக்கூடிய வான்புகழ் தேடித் தரக் கூடிய நன் முயற்சி!

எனவே, அவருடைய கவிதையிலே புதுமை பொங்குவதிலோ, புரட்சி மணம் வீசுவதிலோ, கற்பனை வளம் பெருக்கெடுத்து ஓடுவதிலோ வியப்பிற்கு இடமில்லை!

சமகாலச் சூழலை நன்குணர்ந்து, நல்லதோர் எதிர் காலத்தை உருவாக்கத் துடிக்கும் கவிஞர் இளம்வழுதியின் இந்த நூல், படிப்போரின் எண்ணத்தில் எழுச்சியையும், இதயத்தில் மலர்ச்சியையும் உண்டாக்குவது உறுதி!

**வாழ்க கவிஞர் இளம்வழுதி!**
**வளர்க அவர்தம் தமிழ்த்தொண்டு!**

சென்னை
கார்த். 17-ஆம் நாள் **க. த. திருநாவுக்கரசு**
தி. ஆ. 2019
(2-12-85)

# பதிப்புரை

கவிச்சித்தர் க. பொ. இளம்வழுதி செந்தமிழ் வளர்ச்சிக்கு உழைக்கும் தோழர்; செயல் மறவர்; தென்னார்க்காடு மாவட்டத் தமிழ்க் கவிஞர் மன்றப் பொதுச் செயலாளராக இருந்து கவிதைத் துறையில் ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்.

இவர், தமிழ்க்கவிதைப் பயிர்க்கு வளமூட்டும் வான மழையாக இன்றும் விளங்கி வருபவர், இவருடைய "சிவப்பு நிலா" காவியம் தமிழக அரசின் பரிசு பெற்றுள்ளது.

இவரின் கவிதைப் பணி தமிழுலகுக்கு என்றும் தேவை என்பதால், இவரின் அரிய நூலான "சிவப்புச் சிந்தனைகளை வெளியிடுவதில் பெருமகிழ் வெய்துகிறோம்.

இவர் நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த ஸ்ரீ கோமதி அச்சகத்தார்க்கும் ஓவியர்க்கும் நன்றி உரியதாகுக.

நூலாசிரியர்க்கு என் வாழ்த்துக்கள்!

**மு. இலட்சுமணன்**
பதிப்பகத்தார்

விழுப்புரம்
10-12-85

# என்னைத் தெரியுமா?

கொள்கைச் சட்டைகளை அடிக்கடி அழுக்காக்கிக் கொள்ளும் அரசியல்வாதிகளையும், விளம்பர வெளிச்சத் தால் மனித விட்டில்களை ஈர்க்கும் படத்துறையினரை யும் மட்டுமே அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டும் மக் களுக்கு மத்தியில் வாழ்பவன். மற்றபடி இந்த நூல் என்னை அடையாளம் காட்டும்.

இந்தத் தலைப்பு சித்தாந்தச் செறிவூட்டப் பட்ட தல்ல. நிறத்திற்கும் கொள்கைக் குறிப்புண்டுதான்; ஆனால் இங்கே அது எச்சரிக்கை நிறமாகவே எடுத் தாளப்பட்டுள்ளது.

கவிதை, நயத்திற்காகவும் எழுதப்படுவதுண்டு; நான் நியாயத்திற்காக எழுதியுள்ளேன். அலங்காரச் சொற்களைவிட, அவசியமான கருத்துகளே இன்றைய தேவை.

திறமையை வெளிப்படுத்துவதற்காகக் கவிதையை நான் தேர்ந்தெடுக்கவில்லை. எண்ணங்களை இறக்குமதி செய்யவே இந்தத் துறையில் நான் காலூன்றி யுள்ளேன்.

மறதியின் மறுபக்கத்தில், பூக்களையே புகழ்ந்து கொண்டிருப்பவர்களுக்குச் சில ஆணிவேர்களை அடை யாளங் காட்டியுள்ளேன். இந்த நாட்டின் அடிமை அழுக்கைக் கழுவ, குருதியால் குளிப்பாட்டிய; மனித

மலைகளின் அடிவாரத்திலிருந்து கொண்டே, அண்ணாந்து பார்க்கத் தவறியவர்களின் மனசாட்சியைக் கிள்ளுவதே என் நோக்கம்.

என் கவிதைத் தாவரத்திற்கு நிறத்தையும் நேர்த்தியையும் கொடுத்த இலக்கியச் சூரியன் கவிதைக் காவலர் திரு. தெசிணி. பி. காம் (ஆனர்சு)பி. எல் அவர்கள் இமயம் பனிப்படிவங்களை இழந்து விடலாம். ஆனால் இந்தக் கவிதை நிலவு என் இதயச் சித்திரத்தில் தேய்வின்றித் திகழும், இந்தக் கவிதைக் கங்கையில் தானே என் எழுத்துக்கள் நீராடி அச்சுமையிட்டு அலங்காரம் செய்து கொண்டன.

என் எழுத்தின் கனத்தை, இலக்கிய உலகுக்கு எடை போட்டுக் காட்டியவர் இலக்கியப் புரவலர் திரு உ. பலராமன் அவர்கள், தலைமைக்காகத் தவிப்பவர்கள் உண்டு. இவரோ அதைத் தள்ளிவிடக்கூடிய தைரியம் படைத்தவர். இளங்கோ இலக்கிய மன்றத்தின் குடும்ப அட்டை இவர் பெயரில்தான் எழுதப்பட்டிருக்கிறது. எனது 'சிவப்புநிலா' வை உவப்புடன் உலாவ அழைத்துச் சென்றவர் இவர்தான். இவரை நன்றி நாற்காலியில் அமர்த்திட வேண்டியதென் கடமை.

என் இலக்கிய முயற்சிகளுக்கெல்லாம் துணையெனத் தங்கள் தோள்களைத் தந்துவரும் சென்னை இளங்கோ இலக்கிய மன்றச் செயலர் கவிஞர் செ. பார்த்தசாரதி சேலிய மேட்டுக் குயில் கவிஞரேறு வாணிதாசன் அவர்களின் மருமகன் புலவர் திரு வ. கலியபெருமாள் எம். ஏ புலவர் கி. அரியரன் எம். ஏ பி. லிட், கடலூர் மா. சுதர்சனம், பொன் நடராசன் மற்றும் நெல்லிக் குப்பம் மு. தனராஜ் ஆகியோரும் என் நன்றிக்குரியவர்கள்.

புதுவை மாநில இலக்கிய மூவேந்தர்களான கவிதைச் செல்வர் கல்லாடன் பி. ஏ., சொல்லாய்வுச்செல்வர் சு. வேல்முருகன். எம் ஏ. பிஇட், எழுச்சிப்பாவலர் புலவர்

இலக்கியன் ஆகியோர் தான் எனது சிவப்புச்சிந்தனையை முத்துப் பதிப்பகத்திற்கு அறிமுகப்படுத்தி, அச்சுக்குளிய லுக்கு அழைத்துச் சென்றவர்கள் இந்த நல்ல உள்ளங்களை என் நன்றிக் கழனியில் நட்டு வைக்கிறேன்.

தேவக் கோட்டையிலிருந்து, இலக்கியத்திற்கு இராஜ பாட்டை போட்டிருப்பவர் முத்துப் பதிப்பக உரிமையாளர் திரு இலட்சுமணன். இந்த இளவலின் கைப்பட்டு எத்தனை ஏட்டுச் சுவடுகள் நூல் வடிவம் பெற்றுள்ளன. காகுத்தனுக்கு மட்டுதானா கைவண்ணம்?

பணம் பண்ணுவதே பதிப்பக நெறியான காலத்தில், இந்த லட்சுமணனுக்கு மட்டில் பண்பையும் பராமரிக்கத் தெரிந்திருக்கிறது.

புதுக்கவிதை புயலடித்துக் கொண்டிருக்கும் வேளையில் என் எழுத்துக்களுக்கு அழுத்தமான வேருண்டென்பதால் வீழ்ந்து விடாதென்ற நம்பிக்கையோடு, சிவப்புச் சிந்தனையை நூலாக்கியுள்ளார். பேட்டைகளுக்கு மத்தியில், ஒரு கோட்டையான திரு இலட்சுமணனுக்கென் நன்றி.

திரு.வி.க விருதுக்கும், சாகித்திய அகடாமி பரிசுக்கும் தனது பெயரால் தகுதியைத் தந்தவர் தமிழ்ப் பேரறிஞர் பேராசிரியர்— டாக்டர் க. த. திருநாவுக்கரசு. அவர்கள் இந்தத் தமிழ்ப் பொதிகையில் எனது சிவப்புச் சிந்தனைகள் தங்கிவந்துள்ள என்பதே பெருமைக் குரியதுதானே! அணிந்துரை அளித்த இந்தச் சான்றோர்க்கென் நன்றி.

கடலூர்
1-12-85

**க. பொ. இளம்வழுதி**

# சிந்தனைத் துளிகள்


| எண் | துளிகள் | பக்கம் |
|---|---|---|
| I சிவப்புச் சிந்தனைகள் : | | |
| (1) | எனக்குத் தெரிந்த பாடல் | 9 |
| (2) | சிந்தனைக்கு I | 10 |
| (3) | „ II | 11 |
| (4) | நல்லுரை நான்கு | 12 |
| (5) | யாப்பதிகாரிகளே! | 13 |
| (6) | மாணவர்க்கு | 15 |
| (7) | மேநாள் | 16 |
| (8) | வேண்டுதல் வேண்டாமை | 17 |
| (9) | இதுவோ வாழ்வு? | 19 |
| (10) | அனாதைகள் | 21 |
| (11) | வறியவர்க்குற்ற இன்பம் | 22 |
| (12) | நெஞ்சுக்கு நீதி | 23 |
| (13) | நெஞ்சில் நிறுத்துக | 24 |
| (14) | அந்த நாள் | 25 |
| (15) | ஏடா மனிதா | 27 |
| (16) | நினைவு நிழல்கள் | 29 |
| (17) | தொண்டரே கேளுங்கள்! | 30 |
| (18) | எண்சீர் விருத்தம் | 32 |
| (19) | மாரீச மான்களே! | 34 |

| | | |
|---|---|---|
| (20) | எண்ண ஏழைகள் | 36 |
| (21) | செவ்வாய்ச் சிந்தனை | 38 |
| (22) | நெஞ்சே! நெஞ்சே! | 40 |
| (23) | அறிவு-6-5-4 | 42 |
| (24) | பாடும் பரம்பரையே | 44 |
| (25) | தொண்டும் தொழிலும் | 46 |
| (26) | இளையோர்க்கு | 49 |
| (27) | பணிவு | 51 |
| (28) | பழுப்பும் பராமரிப்பும் | 53 |
| (29) | இன்றைய தேவை | 55 |
| (30) | நிலை கெடுக்கும் கலைகள் | 57 |
| (31) | பத்திரிகை+அதர்மம்=? | 59 |
| (32) | எதிர்காலத்தில் பங்கு | 61 |
| (33) | சாதீ | 63 |
| (34) | நீதி என்ற ஒன்று | 65 |
| (35) | தாய் மொழியா? வாய் மொழியா? | 67 |
| (36) | நல்ல குடும்பம் | 70 |
| (37) | சிதம்பரலிங்கம் | 73 |
| (38) | வேர்ப் புழுக்கள்/ | 75 |
| (39) | மதுவுக்கு மரணமில்லையோ? | 77 |
| (40) | தன்னல மாந்தரே தமிழ்ப்போர்வை நீக்குக | 78 |
| (41) | வாகைக்கு வழி | 80 |
| (42) | பழுதை விதைக்காதீர்! | 82 |
| (43) | சிந்தையும் செயலும் | 85 |
| (44) | வீரம் | 87 |
| (45) | மங்களமுகாரி | 90 |
| (46) | யாரடா கவிஞனிங்கே | 92 |

II மறதியின் மறுபக்கம்


(1) தேசியத்தில் தமிழ் 97
(2) அரசியல் அலையில் இலக்கிய ஏடு 102
(3) பிரட்டனை மிரட்டிய பீரங்கி 106
(4) தழும்பில் பழுத்த தமிழ்க்கனி 112
(5) விடுதலைக் குழைத்த வெள்ளை ரோஜா 119
(6) பசியை ருசித்தவர் 125
(7) விடுதலை வானம்பாடி 131
(8) ஓம்கார் நீலகண்ட பிரமச்சாரி 131
(9) நெருப்பைச் சுட்ட நீல மலர்கள் 149


ooo

# எனக்குத் தெரிந்த பாடல்

எனக்குத் தெரிந்த பாடல்—உலகில்
எவர்க்கும் தெரிந்த பாடல்,
மனத்தை ஈர்த்த பாடல் — அன்னை
மகிழ்ந்தே இசைத்த பாடல்!

எழுதிப் படிக்காப் பாடல் — நெஞ்சில்
எழுந்தே ஒலிக்கும் பாடல்!
மெழுகைப் போன்றே நெஞ்சை — அன்பால்
மிருது வாக்கும் பாடல்!

அரங்க மேறாப் பாடல் — கண்ணை
அயர வைக்கும் பாடல்!
நரம்பு நாடிக் குள்ளே — பாய்ந்து
நம்மை மயக்கும் பாடல்!

அசையும் சீரும் கல்லா — அன்னை
அதரம் புனையும் பாடல்!
இசையுந் தாள மெல்லாம் — தானே
இயைந்து சுருளும் பாடல்!

எண்ணிப் புனையாப் பாடல் — பெண்கள்
இதய மெழுதும் பாடல்!
கண்ணை மூடும் பாடல் — குழந்தை
காதில் நுழையும் பாடல்!

## சிந்தனைக்கு I

1. இனம்வாழ வாழ்வேன் எனவெண்ணும் தொண்டர்
மனம்கண்டே பெய்யும் மழை!

2. அன்பினா லன்றிவெறும் ஆத்திரத்தா லாகாதே
துன்பறு தூய வினை.

3. வேறுபடு சாதிமதம் வீழப் பொறுக்காதே
மாறுபட வாழ்வார் மனம்.

4. குழியாடி போலும் குணமுடையார் நேர்ந்த
பழிசிறிதென் றெண்ணார் பரிந்து.

5. ஆற்று நீ ரானாலும் ஆழ்கடலில் போய்க்கலந்தால்
மாற்றாதோ இன்சுவையை உப்பு.

6. கொள்கைப் பிடிப்பின்றிக் கூச்சலிட்டு வாழ்
வாரைக் கள்ளனும் எள்ளானோ கண்டு.

7. நிழற்குதவா தோங்கும் நெடும்பனையே மாற்றார்
விழக்கண்டு புன்னகைக்கும் நெஞ்சு!

8. வழங்கென தெய்வம் வழிபடும் மாந்தர்
நிழலும் சுயநலம்பேசும்!

9. பால்பிரித் துண்குன்ற பைம்புள்ளாம் அன்னம்
போல் நூல்தேர்ந்து கற்பதே நன்று!

10. தன்னை மிழிதளித்து தாழா துயர்கின்ற
தென்னையென வாழ்வோம் தேர்ந்து.

★

## சிந்தனைக்கு ॥

1. ஓயா அலைப்போல் உளச்சோர்வே இல்லாரைத்
தேயாப் புகழ்செல்வம் தேடும்.

2. வெள்ளியைப் போல்வாரே வேண அறிவுடையார்
கொள்ளியைப் போல்வார் குறை.

3. பங்குனிக்குப் பின்னவள்போல் பாரில் தமிழருக்(கு)
இங்கிதமாய் நாமாதல் என்று?

4. எண்சாண் உடலை இயக்கும் இதயம் போல்
பெண்ணியக்கும் இல்லம் பெரிது.

5. மணிகெட்ட கண்ணொப்பர் மாந்தர்தா மேற்ற
பணிசிறக்கச் செய்யா தொழின்.

6. பசித்தார்முன் வைத்த பழப்பொம்மை போலும்
புசியென்றே சொல்லார் பரிவு.

7. அருளின்றி இல்லை அகத்தூய்மை; போற்றும்
பொருளின்றி இல்லை புகழ்.

8. தழல்படக் கருகும் தளிரும், வெகுண்டார்
நிழல்நின்றார் நெஞ்சும் சுடும்.

9. புத்தர்தம் போதனையைப் போற்றித் துதிப்
போர்க்கே இத்தரையில் ஏனோ படை?

10. நஞ்சும் மருந்தாகும்; நாடொதுக்கும் தீயோரைச்
செஞ்சொற் திருத்தாதோ செப்பு.

## நல்லுரை நான்கு

1. பள்ளிப் பருவத்தில் பாடம் படிக்காமல்
துள்ளித் திரிந்தாய் துயருறுவாய்—எள்ளி
நகையாடும் வாழ்வென்றோ நாளையுனைத் தேடும்
பகையல்ல பாடம் படி.

2. நல்ல உடற்கட்டு, நாவடக்கம், நல்லியல்(பு)
இல்லார்க் குதவும் இயல்புடன்—எல்லார்க்கும்
அன்பனாய் வாழும் அகமுடையான் கண்ணன்றோ
ஒன் றிவரும் ஒலகாப் புகழ்!

3. பெற்றெடுத்த தாம், தந்தை, பேசும் மொழியினோ
டுற்றநல் லாசான்வன் உள்ளங்கொள்—கற்றறிந்த
நல்லார்தம் நூல்களையே நாடி தினம் படித்தால்
அல்லலுனை அண்டா தறி!

4. அஞ்சாமை; நேர்மையோ டாணவத்தைத் தீண்டாமை
துஞ்சாமை, தொண்டோடு தோழமையும்—பஞ்சமின்றிப்
பெற்றார் பெரியார்; பிறப்பின் பயன்பெற்றார்;
மற்றவர்கள் மண்ணோடு மண்.

ooo

## யாப்பதிகாரிகளே...!

1. எழுத்தெண்ணிச் சொல்லாக்கி இலக்க ணத்தின்
இசைநாடி அடியெடுத்தி ரங்க லோடு
வழுத்துவதே நம்கடமை என்ற எண்ணம்
வந்துவிட்டால் அதுகுற்றம்; இந்தநாட்டில்
கொழுத்தவர்கள் மதத்தாலே கொள்ளை யிட்டு,
கொண்டுகுழி புதைத்திட்ட தன்மா னத்தை
இழுத்துவந்தே இருந்தவிடம் சேர்ப்ப தொன்றே
இங்குள்ள கவிஞர்க்குக் கடமை யாகும்!

2. அலகிடுங்கால் தனித்திருக்கும் ஆற்ற லற்றிங்
கடுத்துள்ள உயிருட லோ டொன்றும்மெய்போல்
தளபதியாய்த் தானிருந்து தகைவில் கொள்கை
தனைத்தகர்த்த பெரியாரின் பின்னால் நின்றே
வளமனைத்தும் நாம்பெற்றோம்? வாட்டம் போக்க
வளர்ந்துள்ள அறியாமை தன்னைச் சாடக்
களமமைத்தே ஐயாவின் பணியை ஏற்றுக்
கவிஞரெலாம் போராடல் கடமை யாகும்!

3· ஒன்பதரை பத்தாண்டு வயதில் கூட
ஓய்வெடுக்கா துழைத்தாரே ஐயா! என்று
என்புருகப் பேசிமன இரங்கள் கூறி,
என்னபயன்? இதுபெரியார்க் கேற்ற ஒன்றா?
தென்னையிலே மரநாயைக் குடிவைத் தாற்போல்
திருநாட்டில் குடிபுகுந்த தெய்வம், சாதி,
இன்னபிற இழிவுகளை ஒழித்துக் கட்ட
எழுதுவதே கவிஞர்க்குக் கடமை யாகும்!

4. அஞ்சாத சிங்கமென ஐயா வீரம்
அனைவருமே பேசுகிறோம்! ஆனாலந்த
அஞ்சாமை நம்மனத்தில் அண்டு தற்கும்
அறியாமை தான் கடையாய் உள்ள தென்றே
நெஞ்சாற நாம்நினைத்து நீக்கிவிட்டால்
நிச்சயமாய் நாம்பெரியார் தொண்டர்! அன்றி
பஞ்சாங்கம் உட்புறமும், வெளியே ஐயா
பகுத்தறிவுப் பாசாங்கும் பகல்வே டந்தான்!

5. எண்ணத்தை மறைக்காமல் எடுத்து வைத்த
ஈடில்லா தலைவரென ஏற்றும் போதே,
எண்ணத்தை எதற்காக மறைக்க வேண்டும்
எனவெண்ணி இதயத்தைத் திறக்க வேண்டும்!
கிண்ணத்தில் முகம்பார்த்துச் சூளு ரைத்தே,
கிழக்குவெளுத் திடும்போது மறப்பார் போலே,
அண்ணன்பேர் ஐயாபேர் சொல்வோ ரெல்லாம்
ஆகாம லிருப்பதுதான் நன்றி யாகும்!

## மாணவர்க்கு

1. ஊடா தமிழ்மொழியும், ஊடுகின்ற ஆங்கிலமும்
பீடாம் அவைநீ பெறின்.

2. ஓயா அரசியலில் உப்பாகிப் போகாமல்
தேயா அறிவுநலன் தேடு!

3. கல்லூரி சென்றாலும் கற்பிக்கும் பெற்றோர்தம்
சொல்மீறிச் செல்லா தொழி!

4. போராட்ட மென்றே புலனாட்டம் கண்டேரேல்
வேராட்டம் கண்டு விடும்.

5. ஆசான்தனைமதியா தார்ப்பீரேல் பின்னொருநாள்
கூசா தனசுமப்பீர் கொண்டு.

6. கக்கத்தில் ஏடடக்கிக் காட்சிக்குப் போவார்தம்
பக்க மிருக்கும் பழி.

7. பகைவேறு வேண்டாம் படிப்போர்தம் வாயைப்
புகையளந்து போகின்ற போது.

8. விண்ணேறும் விஞ்ஞான வித்தைதனை நாடாமல்
பெண்ணடியை நத்துவதோ பீடு?

9. செவ்வானம் போலுற்ற சீரிளமை காப்பதற் (கு)
ஒவ்வா தனநீ ஒழி!

10. புழுத்த கலைப்பேச்சால் பொற்காலம் போக்கா
தெழுத்தாற்றல் நாடிடுக ஈண்டு!

## மே நாள்

நெருப்பு நிலத்தில் கொழுப்பை விதைத்தவர்
இருப்பைத் தீய்த்த இன்பத் திருநாள்

அரிவாள், சுத்தி ஆக்கம்; இன்ப
புரிவாழ் வார்க்கே போனதை மாற்றிப்

பாடு படுபவர் பக்கம் சேர்த்த
பீடுடைப் பெருநாள்! உரிமைத் திருநாள்!

உரிமையைப் பறித்து வறுமையைக் கொடுத்தவர்
எரிமுன் பஞ்செனை இருந்த தின்நாள்!

உழைப்பவர் தோள்மேல் உட்கார்ந் துயர்ந்தோர்
இழைத்த கொடுமை அழித்த பொன்னாள்!
ஆக்கம் கண்டவர் ஏக்கம் தவிர்த்தே
ஊக்கம் பிறக்க உதவிய நந்நாள்!

நெற்றி வியர்வை கொற்றம் கொண்டதும்,
எற்றிட உருண்ட கொற்றக் கொடி முடி
நெற்றி வியர்வை நெடிய ஓடையுள்
முற்றும் மறைந்த வெற்றிப் பெருநாள்!
மேநாள் வாழ்க! மேலவர் வாழ்க!
மேநாள் போற்றும் மேதினி வாழ்கவே!

□

## வேண்டுதல் வேண்டாமை

1. இருள்சூழும் பெருவானோ உள்ளம்? பாழும்
இடர்சூழும் கொடுங்கானோ நெஞ்சம்? இல்லை
அருள்மேவும் அறமன்ற மன்றோ! அங்கே
அறியாமை உருவாதல் நன்றோ? மேனி
மருள்மேவும் மண்டபமோ? குகையோ? வாழ்வு
மலர்பூக்கும் இளமரக்கா வன்றோ? மாந்தர்
பொருள்நோக்கால் பெருநோக்குக் கெட்டுப் போற்றும்
பெரியார்தம் அருள்வாக்கை மறக்க லாமோ?

2. ஒளித்தட்டு, சுடர்வட்டம், உருவில் காற்றும்
ஒருசார்பாய்ப் பணிசெய்வ துண்டோ? கொம்பில்
துளிர்க்கின்ற இலைகளிலே, மலர்கட் குள்ளே,
'தூரப்போ' என்கின்ற.பேத முண்டோ?
வெளியண்டப் பயணத்தைத் தொடங்கி விட்ட
விந்தைமிகு மானிடரே! இன்னும் சிந்தை
தெளியாமல் பேதங்கள் பேசிப் பேசித்
திருநாட்டின் பொதுநெறியைப் பழிக்க லாமோ?

3. நெறிக்காட்டும் அன்றிற்புள் கற்பின் மாட்சி!
நிறைகாட்டும் புறவினமோ ஒழுக்கச் சாட்சி!
குறிகாட்டும் தேன்சிட்டோ உழைப்பின் காட்சி!
கொல்லாமைக் கொருசாட்சி கிள்ளை! ஆறாம்
அறிவோடு நாம்வாழு கின்றோம் என்றால்,
அஃறிணையின் தரம்தாழ்ந்து வாழ லாமா?
குறியில்லாக் குருடர்போல் வாழ்ந்து விட்டுக்
குழிபோதல் ஒருபிறப்பா? பிறவி தப்பா?

4. பிறவியெனில் இறப்பின்றி இருக்க வேண்டும்;
பிரிதெல்லாம் வெறும்மாயை; மின்னல் தோற்றம்;
உறவெனிலோ பிரிவின்றி இருக்க வேண்டும்;
உடைவதெல்லாம் பயன்சேர்க்கை! வஞ்சப் போர்வை!
மறதியெனில் பிறர்குறையில் இருக்க வேண்டும்;
மற்றவற்றில் அஃதிருப்பின் மாண்பின் கேடு!
இறவாத எண்ணங்கள் வேண்டும், என்றும்
எவர்நெஞ்சும் உறைகின்ற வாழ்வே வேண்டும்!

○○○

## இதுவோ வாழ்வு?

விட்டெறிந்த தட்டெனவே விண்ணில் ஓடி,
　　விளையாடும் வெண்ணிலவை வெல்லும் மாதே!
பட்டுவிட்டால் தென்னையிலே பொந்து செய்து,
　　பைங்கிளிகள் குடியிருக்கும்; காதல் பேசும்!
கெட்டுவிட்ட பால்தானே மனிதன் மாண்டால்!
　　கேளிர்க்கோ உலகிற்கோ நன்மை யுண்டா?
கட்டுடலை விட்டுயிர்தான் போனால் நாமும்
　　காதறுந்த ஊசியடி இதுவோ வாழ்வு?

அன்பின்றி பண்பின்றி ஆற்ற லின்றி,
　　அழியாத புகழ்தேடும் ஆர்வ மின்றி,
என்புடலை வளர்ப்பதற்கே கால மெல்லாம்
　　எண்ணத்தைச் செலவிட்டு மடிவ தன்றி
ஒன்றேனும் புதுக்கருவி காண்போ மென்றே
　　ஊக்கத்தோ டுழைத்தேற்றம் காணா திங்கே
மின்னல்போல் தோன்றிப்பின் மறைந்தால் யாக்கை
　　எடுத்ததற்குப் பொருளென்ன? இதுவோவாழ்வு?

கதிர்போனால் வானத்தில் மதியிருக்கும்;
கணக்கற்ற விண்மீன்கள் துணையிருக்கும்;
நதிவறண்டு போனாலும் ஊற்றிருக்கும்;
நாவலர்தம் நெஞ்சம்போல் சுனையிருக்கும்;
மதியில்லான் மாண்பில்லான் மாண்டால் பின்னர்
மகனிருப்பான்; பெயரன்வரின் பாட்டன் பேரும்
கொதிநீரின் கொப்புளந்தான் அலைதான், என்றும்
குன்றாத பேரில்லை இதுவோ வாழ்வு?

இல்லாமை இருக்குமிடம் இருண்ட வீடு
இன்கவிதை ஒலிகேட்காத் துன்பக் காடு;
நல்லோராய், வல்லோராய் நாட்டு மாந்தர்,
நடமாட நல்லின்ப வாழ்வு காணப்
பல்பொருள் படைக்கின்ற சக்தி வேண்டும்;
பயிர்வளர்ப்பில் புதுமுறைகள் காண வேண்டும்;
தொல்கருவி தனைவைத்தே தொழில் தொடங்கும்
துயர்நிலைமை மாறவிலை; இதுவோ வாழ்வு?

• •

# அனாதைகள்

சதையை எரிக்கும் சிதையின் ஒளியில்
கதையொன் றெழுதினான் காவலன் சந்திரன்!
அந்தக் கதையின் அசலும் நகலுமே
கந்தலாய் மாறிக் கழிவிடம் சேர்ந்திடத்
தூய்மை அறியாத் தொழுவடைப் பன்றிகள்
வாய்க்கலப்பை கொண்டவண் வந்தே யுழுதன!
போலிக் கரியின் புரட்டில், புழுதியில்
தூலிநேர் உண்மை தவித்த தனாதையாய்!
வீரமே இல்லா விருத்தக் கழுதைகள்
ஊரலைப் போக்கிட உண்மை உருச்சிலை
மேடையில் மோதி மிதிபட வீழ்த்தின!
ஆடை அணிந்திடும் அற்பப் பிராணிகள்,
அந்தச் சிலையை அகற்றியே தங்களின்
சொந்தச் சரக்கின் சுவை, புகழ் பாடின!
பத்தியம் காணாப் பரத்தையர் வீதியில்
பத்தினி போலவே பாபுவும் ஆனாரே!
தன்னல மின்றியே தாழ்ந்தோர்க் குழைத்தவர்
பின்னமாய் வீதியில்! பேசுவோர் மேடையில்!
அண்ணல் அனாதை! அருகதையு மவ்வாறே!
கண்ணியம் எங்கே கறைபடி நெஞ்சமே!
நத்தையின் ஓட்டினில் நன்னீர் கொணர்ந்திவண்
பத்தரை ஏக்கர் பயிர்செய முந்தும்
அறிவிலிக் கெல்லாம் அளவிலா ஏற்றம்!
பொறியியல் மேன்மை புலப்படச் செய்திடும்
பாக்கரா நங்கலைப் பாமரர் எண்ணிடார்!
ஆக்கம் புதுக்கி அரும்பணி யாற்றியோர்
அந்தோ அனாதைகள்! ஆற்றல் அநாதையாம்
விந்தை மனிதர் விழிப்பதும் என்றோ?
தகுதி இலாத தலைமையை மாற்றும்
மிகுமதி பெற்றெழுவ தென்று?

## வறியவர்க் குற்ற இன்பம்

வற்றிய மார்பில் வாயை
  வைத்திடு மொன்று; சேலை
பற்றியே பக்கம் நின்று
  பதறிடும் நிலையி லொன்று;
கற்றிடப் பள்ளி செல்லும்
  கருத்திலா வயதில்(இ)ரண்டு
மற்றது வயிற்றி லாறு
  மாதமாம் என்னே வாழ்வு!

வனப்பிலை; வறுமை சூழ்ந்த
  வாழ்விலே சுகமொன் றில்லை;
கனப்பிலை அடுப்பில்! கஞ்சிக்
  கலயத்தில் கரியு மில்லை!
தனக்கொரு சுகமே இந்தத்
  தரணியி லில்லை என்ற
மனக்குறை தவிர்ப்ப தெல்லாம்
  மாதவன் தந்த இன்பம்!

துய்த்திடு மின்பத் திற்குத்
  துணையென வாய்த்த ஆளன்.
மொய்த்திடும் வண்டைப் போலே
  முன்பனிக் காலந் தன்னில்
மெய்த்துகில் களையும் போது!
  மெய்த்துயில் கொள்வ தெங்கே?
பொய்த்ததே உலக இன்பம்
  புணர்ச்சியில் அதனைப் பெற்றார்.

# நெஞ்சுக்கு நீதி

நற்றா மரைக்குளத்தில் நல்லாம்பல் பூத்தாலும்
பொற்றா மரைதனையே போய்ப்பறிப்பர் —
கற்றுணர்ந்தோர்
ஆளுமொழி வேறாக ஆனாலும் செந்தமிழை
நாளும் படிப்பார் நயந்து.

இல்லாரை வாட்டி இலஞ்சமெனப் பெற்றபொருள்
கொல்லரவுக் கொப்பன்றோ கொள்கையிலீர்—
புல்லறிவால்
வேசிக்குத் தோள்தந்து வேண்டுந்தன் மானத்தைத்
தூசியெனத் தள்ளுவதோ தொண்டு?

ஆர்கலி நீரலை ஆங்காரப் போர்வேகம்
ஓர்நொடியில் ஒன்றிவிடும் ஒற்றுமைபோல்—கார்குழலே!
பார்போற்றும் பண்பாளர் பார்வைதரும் கோபமெலாம்
நீர்க்குமிழ் போலாம் நினை.

கோடிவிண் மீனோடு கோலநிலா வந்தாலும்
சேடியிலாச் செங்கதிரே சீர்விளைக்கும்—நாடிதனில்
எண்ணற்ற கட்சி இருந்தாலும்—தாய்மொழிக்குக்
கண்ணொத்த மாணவரே காப்பு.

○○○

## நெஞ்சில் நிறுத்துக

நம்கடமை நம்முரிமை நாமுணர்ந்த நாளன்றே
செம்மையெலாம் சேராதோ செப்பு.

ஏர்முனையில் நாம்காணும் ஏற்றத்தால் ஏழ்மைதனைப்
போர்முனையில் வெல்வோம் பொருது.

நாவுணர்வால் பண்டத்தை நாசஞ்செய் போக்ககற்றிக்
காவளர்த்துக் காய்பறித்துக் காட்டு.

வெற்றுரையால் காலத்தை வீணாகப் போக்காமல்
நற்றொழிலை நாம்புரிதல் நன்று.

சிற்றெறும்பைப் போல்நாளும் சேமிக்க முந்துவதே
வெற்றிக்கு நாமூன்றும் வித்து.

ஓயா அலைபோலே உள்ளார்வம் என்றென்றும்
மாயாமல் காத்தல் மாண்பு.

பிறர்கையைப் பார்க்காத பெற்றிக்கு வித்தாம்
திறங்கொண்ட நல்லுழைப்பைத் தேடு.

மான மறவர்தம் மாண்புதனைப் பாடாத
ஈனப் பாவலரை ஏற்று.

கொள்ளி பிடித்தகை கோடி கொடுத்தாலும்
எள்ளியதைத் தள்ளுவதே ஏற்பு.

மடிசுரக் காத மலட்டுமா டன்றோ
படிப்புக்கிங் கீயார் பணம்.

## அந்த நாள்?

இரும்பெனும் மேனி, தேன் போல்
இளகிய ஈர நெஞ்சம்,
கரும்பெனும் அன்புப் பேச்சு
கடலலை சுறுசு றுப்பு!
இருந்தென? உழைப்போர் வாழ்வில்
இருளடா, ஏழ்மை, பஞ்சம்!
மருந்தென நலன்கள் பெற்றார்
மகிழ்வுறும் நாளெந் நாளோ?

ஒருதனி மனித னுக்கே
ஊருள சுகங்கள் சொந்தம்!
இருவித நீதி, சட்டம்!
இருப்பவர் உலகம் மேலாம்!
அருளிலார் வாழ, நெஞ்சில்
அழுக்கிலார் தாழப் பார்க்கும்
மருவுடை சமுதா யத்தை
மாற்றுநாள் எந்த நாளோ?

தண்டமிழ் மரபு மீறித்
தகைவிலா உடையு டுத்திப்
பெண்களே மேனி காட்டும்
பிழைபடு போக்கு மாறி,
எண்டிசை வியக்கு மாற்றல்
இயந்திரப் புதுமை கண்டு,
விண்புகழ் கொள்ளப் பெண்கள்
விழித்தெழும் நாளெந் நாளோ?

ஆட்டமும் பாட்டும் நத்தி,
அலைந்திடும் இளைஞர் கூட்டம்
தோட்டமும் தொழிலும் ஓங்கத்
தொடங்குக புது முயற்சி!
தேட்டமும் அறிவும் பெற்றுத்
திறமையால் உலகை வென்று,
காட்டினார் தமிழ ரென்ற
களிப்பினைப் பெறுவ தெந்நாள்?

○○○

## ஏடா மனிதா!

ஏடா மனிதா! இப்பெரும் உடலால்
என்னடா உலகுக்கு லாபம்?
போடாக் குறையைச் சுட்டிக் காட்டினால்
பொக்கென வருதே கோபம்!

பெண்ணையும் பொன்னையும் பெரிதெனத் தேடிப்
பேயாய் அலைந்தாய் தினமும்ஓடி!
எண்ணமும் இதயமும் இரக்கமும் வளர
என்றுநீ முயன்றாய் கருவினைத் தேடி?

பெற்றால் பிள்ளை, அற்றால் இல்லை
பேதையே இதுவுன் மனஎல்லை!
கற்றதோ அகரம்; பெற்றதோ பதவி;
முற்றிய துன்றன் லட்சியமே!

உடையில் புதுமை, நடையில் நளினம்
அடடா எத்தனைப் புரட்சி?
இடையில் கச்சு, இரவில் 'இச்சு'
என்னே நீபெறும் மகிழ்ச்சி!

பெற்றவர் அல்லல் பெரிதிலை உனக்கு!
 பேசுவாய் அவருடன் பிணக்கு!
உற்றவள் மனைவி, உடனுள பிள்ளை
 உறவுக்(கு) இதுவா எல்லை?

உலகம் நினைக்க உதவா உயிரே!
 ஒருநல மறியா தொழிந்தாய்;
உலகில் நீயோ உழன்ற தடயம்
 ஒன்று மிலாமலே அழிந்தாய்!

பட்டமும் கட்டிலும் பெட்டியும் மட்டுமே
 பெரிதென நாளும் அலைந்தாய்;
எட்டடி கொட்டிலில் பட்டதோர் தென்னையாய்
 எல்லா மிழந்தே தொலைந்தாய்!

ооо

# நினைவு நிழல்கள்

கோடிமுழு நிலாக்கண்டும் கோலம் குன்றாக்
குமரிமொழி இலக்கியங்கள் படைத்த முன்னோர்
பாடிவைக்க மறந்ததென ஒன்று மில்லை;
பலதுறையும் பலநெறியும் பயின்ற சான்றோர்
ஊடிவரும் மங்கையங்க நேர்த்தி தொட்டே
உலகளந்த செய்தியெலாம் பாடி விட்டார்
தேடியெதை நாம் படைக்கக் கூடும்? நாடு
திருந்தவென நாமென்ன எழுதக் கூடும்?

சாதியிலை என்றெழுதிப் புரட்சி செய்தோன்
சரித்திரத்தில் சாதிநிலை பெறவே கண்டோம்!
வேதியரைச் சாடியவர் பலபே ரன்னார்
வீட்டுவிவ காரத்தில் சடங்கைப் பார்த்தோம்;
காதினிக்க மெய்ஞ்ஞானம் பேசி னோரும்
காமிகளாய் வாழ்ந்தகதை கேட்டு விட்டோம்!
மேதினியில் இவரைப்போல் வாழ்தல் விட்டு
மிடுக்கோடு சொல், செயலை இணைப்போம்
வாரீர்!

எதையேனும் எழுதிடுவோம்; ஏற்ற தென்றே
எண்ணுவதைப் பேசிடுவோம்; சொந்த வாழ்வில்
அதையேநாம் கடைப்பிடிக்கத் தவறி விட்டால்,
அடுக்கியசொற் கவிகேட்டுத் திருந்தார் யாரும்;
உதையொன்றே நமக்கினிமேல் கிடைக்கக் கூடும்!
உபதேசம் செய்துவிட்டுத் திரிவோ மானால்!
கதையெழுதிக் காசடிப்போர் போலே நாமும்
கவியெழுதிப் பயனில்லை, வாழ்தல் வேண்டும்!

## தொண்டரே கேளுங்கள்!

1. செங்கற்கள் மதிலாகும்; சிந்தை யள்ளும்
 சிங்கார கோபுரமு மாகும்; ஆனால்
அங்குறையும் தெய்வமெனும் சிலையாய் என்றும்
 அக்கற்கள் ஆவதிலை! அதுபோல் தொண்டன்
எங்கணுமே உயர்த்திவிடப் படுவதில்லை!
 இதுமரபு இதிற்கட்சி பேத மில்லை!
இங்கிதமாய்த் தொண்டனையே ஏற்றிப் பேசும்
எத்தனெல்லாம் ~~எத்துகள்தாம்~~ பதவிபெறும் வரைதான் தோழா!

2. கொடிபிடித்துக் கூச்சலிட்டுக் கொள்கை பேசிக்
 கொடுமைபல சுவைத்தவனே! என்ன கண்டாய்?
அடிஇவனை, அறுகொடியை என்றே முன்னர்
 அதட்டியுனை அடித்தவனை அணைத்துக்
 கொண்டு
பிடிபதவி, பெறுஉதவி என்றே ஆள்வோர்
 பெரியவர்க்கே நிறமாற்றம் செய்வர், இங்கே
மடிபெருத்தோர் மட்டுந்தான் உயர்வர். தொண்டன்
 மனநிறைவை மட்டுந்தான் பெறலாம் கண்டீர்!

3. செடிமுளைக்கும் வேளையிலே காற்று போகச்
 செய்கின்ற மண்புழுக்கள் கனியைக் கொய்ய
முடியாது; முற்றியதும் மூக்கைத் தூக்கி
 முனைந்துவரும் வௌவால்கள் அறிவோம்;
 என்றும்
துடிப்பாக நின்றுழைத்துக் கட்சி காத்துத்
 தொல்லைபல அனுபவித்து வாக்குச் சேர்த்துப்
பிடிபதவி என்றவுடன் பணம்ப டைத்தோர்,
 பின்வருவார், முன்னமர்வார் பேசப் போமோ?

4. கதிரவனின் கண்முன்னே பாடு பட்டுக்
கைநீட்டிப் பெறுகின்ற கூலிக் காசில்
நிதியென்றால் கட்சிக்கு நீட்டி நின்றாய்;
நீயதற்குக் கைம்மாறு கேட்ட துண்டா?
மதிமயக்கும் பேச்சூட்டி மாண்பு ஆனோர்,
மதிப்பதெலாம் மாளிகையை மட்டும்; ஏதோ
அதிகாரம் அவர்கையில்; அகிலம் சுற்றும்
அரும்வாய்ப்பு; நினைக்கஉனை நேர மேது!

சதையென்றும், உடன்பிறப்பு ரத்த மென்றும்
சாற்றுகின்ற சத்தங்கள் ஏய்ப்பு நாட்டில்
இதையெல்லாம் நம்புகின்ற எளியோ ரின்றும்
இருப்பதனால் அவர்தேரு முருளு தென்னே!
உதையென்றும், சுடுவென்றும் உரைத்த போதும்
உண்டாகாப் பாசத்தை நம்ப லாமா?
கதையளந்து கனிமொழிகள் உதிர்ப்பார் ஆள்வோர்:
காட்சியின்பம் மக்களுக்குப் போதும் போதும்!

## எண்சீர் வருத்தம்

### (பெரியார் எண்ணம்)

என்னைப் புகழாதீர்! என்னைப் புகழாதீர்!
என்ன விளையுமினி, என்னைப் புகழாதீர்!
மூடுபனிக் கோட்டைக்குள் முத்து விளையுதெனும்
கேடுதிரை கீறிக்கிழக்கு வெளுக்கிறது!
குங்குமக் கோளமது கோபப் புரவியின்மேல்
எங்கும் வெளிச்சத்தீ ஏற்றி வரும்போது
சத்திய சோதனையின் சாம்பல் திருநீற்றை
நித்தம் அணிவோரே! நீங்கள் புகழாதீர்!
சாய்க்கடையைக் கங்கையெனச் சாதிக்க ஊர்கூட்டி,
வாய்விரித்த பின்னரெனை வந்து புகழாதீர்!
நீர்மேக வேர்மின்னல் நின்றொளிரும் என்றுரைத்தே
ஊர்விளக்கை எல்லாமே ஊதி அணைத்துவிட்டுக்
கற்றுத் தெளிகளெனக் கையிலொரு நூல்திணித்தே
வெற்று விளம்பர வேடிக்கை காட்டாதீர்!

ஓலை முதுகெலும்பால் ஊர்கூட்ட லாமென்றேன்;
ஆலை சமைக்க அதுவுதவும் என்கின்றீர்!
நச்சுக் கொடியறுக்க நானழைத்த போதெல்லாம்
மெச்சி அதைவளர்த்து மீசையில்கை வைத்தீர்கள்.
வீம்புக்கு வெள்ளரியை வேண்டா மெனக்கூறி
வேம்பைச் சுவைக்கின்ற வேடிக்கை காட்டியபின்
பொய்மைக்கு நீங்கள் புலமை மெருகிட்டு
மெய்மைக்குப் போட்டியென மேடை அமைத்தீர்கள்.
முப்பாலில் முன்னிரண்டை எப்போது தொட்டாலும்
தப்பாமல் நெஞ்சத்தைத் தான்சுடுதே என்போரே!
நாலடியும் நல்லஅடி, நான்பக்கம் போகேனென்

றாலடியாம் மாபா ரதமேறிக் கொண்டபினும்
எங்கேநாம் போகின்றோம் என்றுணர மாட்டாமல்
இங்கே குழப்பத்தை ஏற்படுத்த எண்ணிதினம்
ஆர்ப்பாட்டம் செய்வீர்கள்; ஆரவாரப்பேச்ச விழ்ப்பீர்!
ஊர்ப்பேட்டை இங்கெல்லாம் உட்பூசல் உண்டாக்கி,
யார்கெட்டுப் போனாலென் யாம்வளர்ந்தால்
போதுமெனும்
சீர்கெட்ட பேர்வழிகாள்! சிந்தை தெளியாமல்
நாட்டைக் கெடுக்காதீர்! நல்வழியை மூடாதீர்!
வேட்டையிலே நாட்டமுடன் வேதனைவித் தூன்றிவிட்டு
என்னைப் புகழாதீர்! என்னைப் புகழாதீர்!
புன்னகையால் பொய்மறைக்கும், போதையிலே
மெய்தடவும்
சின்ன மனத்தாரே! சீமானாய் வாழ்வோரே!
என்னைப் புகழ்வ திழுக்கு!

○○○

## மாரீச மான்களே!

அமெரிக்க ஆர்ம்ஸ்ட்ராங் அச்சக மயர்ந்திட
எமக்கென வாய்த்த இன்பத் தமிழக
நகல்முழு நிலவினை நகர வீதியில்
பகலும் இரவும் பார்வையில் பிடிக்கச்

சூரியக் குஞ்சுகள் சுற்றிய தெல்லாம்
வேரிற் பழுத்து வெடித்த பலாவென
இனித்த காலம் இனிவரா தென்றே
முனிவ ரானோர் முழங்க எழுந்தனர்!

மாளிகை மாடம் மறைவிட மானதால்,
தோளில் சாய்ந்து தொடமுடி யாத,
கோபுரக் கலசக் கோல தரிசனம்
நித்தம் நடத்திய தெத்தனை உண்மை!

நத்திய தெல்லாம் நடந்த பின்னரும்
பத்தும் பெற்றுப் பாதி நரைத்ததும்
தத்துவ வாணிப மொத்த விற்பனை,
கத்தி வீற்றிடக் களர்நிலம் முனைவதோ?

புவியில் ஏய்ப்பர் புதுவடி விதுவோ?
குப்பையாம், குழியாம் அப்பளக் குழவிகள்
செப்பிடும் ஞானச் சிந்தனை வித்தில்,
ஓட்டையும் உள்ளொரு புழுவும் நெளிவதைப்
பாட்டுத் துறையினர் பார்க்க மறுப்பதோ?
மலிவுப் பதிப்பில் மயங்கிய வேளையில்
வலிந்தே உச்சிமேல் வைத்தே ஏற்றலும்,
நரம்புத் தளர்ச்சி நாள்வந் துற்றதும்,
பரவிய பாவையைப் பாபமென் றெள்ளிப்
பாவை படித்துப் பக்தி வளர்க்கும்
சேவையில் உலகைச் சேர்க்க முனைவதும்,
என்ன கொள்கையோ? எவரிதன் தந்தையோ?

நாளுக் கொன்றும், மேலுக் கொன்றும்,
ஆளுக் கொன்றும், நூலுக் கொன்றும்,
வாழ்க்கையி லொன்றும், வார்த்தையி லொன்றும்,
காழ்ப்பி லொன்றும், களிப்பி லொன்றும்,

கொள்கையாய்க் கொண்டவர், 'கொல்கை'
கொண்டவர்
வெள்ளரிப் பிஞ்சில் விளங்கும் கசப்பினம்!
கொழுத்த நாளில் அழுத்தம் பார்ப்பதும்
பழுத்தே உதிரும் பக்குவம் வந்ததும்
'பாபம்' என்றே பாட மோதலும்
சாபக் கேட்டின் சரித்திரம் போலும்!

பெண்ணைப் பெண்ணெனப் பேசுதல் நீதி!
பெண்ணைப் பேயெனப் பிதற்றுதல் பீதி!
பெண்சுகம் காணும் பேரா சையினால்
பெண்ணைப் பெரிதாய்ப் பேசலும் தீதே!

## எண்ண ஏழைகள்

ஓர்பொருளைக் கீழிருந்து பேருந் துள்ளே,
ஒப்படைக்க உயர்கூலி கேட்டே திட்டும்
பேர்வழிகள் ஏழைகளாய் இருப்ப தாலே,
பேசுவதோ அவர்பக்கம் நியாயம்? ஆமாம்,
வேர்தடுத்து வீழ்ந்திட்டால் மகிழ்வா? நன்கு
விளைந்தகிளை இடித்தால்தான் துயரா? ஏதோ
பேர்விளங்கும் என்பதற்கே எளியோர் தீமை
பேசாமல் மறைப்பதிலே பெருமை
கொண்டோம்;

சிறுபான்மை செல்வந்தர் என்ப தாலே,
சீறுகிறோம் அவர்கொடுமை சாடு கின்றோம்;
குறுமாந்தர் பெருங்கூட்டம் என்ப தாலே
கூடியவர்பெருந்தொல்லை தந்தால் கூடச்
சிறுபாட்டும் அதையெதிர்த்துப் பிறப்ப தில்லை;
செய்வினையில் நடுநிலைமை காண்ப தில்லை!
வெறும்பாட்டு வேகத்தைக் காட்டு தற்கு
விலங்கிட்டோம் நேர்மைக்கு, வெட்கம்!
வெட்கம்!!

குடிப்பதற்கே கொள்ளையடிப் பானும் ஏழை!
கொடியவிலை அங்காடிக் காரன் ஏழை!
நடிப்பதனைக் காட்டுகின்ற காட்சிக் கூட
நற்சீட்டுத் தரகரெலாம் ஏழை! ஏழை!!
அடிப்பதற்கோ ஐந்து, பத்து வாங்கிக் கொண்டே
அடையாளம் கேட்பவனும் ஏழை! அந்தோ!
கடிதான நெருக்கடியில் கொள்ளைக் கூலி
கழற்றுகின்ற ஏழைக்கேன் பரிவுப் பாடல்?

4. நம்பிக்கைத் துரோகத்தை ஏழை செல்வதால்
நற்பண்பாய் ஆகிடுமோ? நமது கண்ணைத்
தம்பிக்கை குத்துதெனில் மகிழ்வோ? எங்கும்
தகராறு, தடியன்கள் குழப்ப மெல்லாம்
கும்பிக்கே இல்லாதார், அதை மறந்து,
கொடிபிடிக்கும் காரணத்தா லன்றோ? ஏதோ
வம்புக்கு நானிவற்றைச் சுட்ட வில்லை
வரிக் கவிதைக் காரர்காள் சிந்தி யுங்கள்!

5. ஏழையருள் நானுமொரு ஏழை என்றே
என்னினத்தார் குறைகளைநான் மறப்பேனா னால்
கோழையருள் நானுமொரு கோழை என்றே
குறியற்ற பட்டாளி யாவேன்; எண்ண
ஏழைகளை உயர்த்தாமல் பொருளா தார
ஏற்றத்தை மட்டுந்தான் விரும்புகின்றோம்!
கூழைகளாய் மனவளர்ச்சி குன்றிப் போகும்!
கொடுமைக்குப் பொதுவுடைமைக் கொள்கை எங்கே?

6. வாக்குக்கே வர்க்கத்தை வளர்க்க லானோம்;
வாழ்வுக்கோ நெறி, நேர்மை பேச்சொழித் தோம்!
மூக்குக்கே இரு துளைகள் என்ற போதும்,
முகர்கின்ற உணர்வொன்றே; ஏழை செல்வன்
நோக்குக்குப் பொருளொன்றே மூல மென்றால்
நூல்புகட்டும் அறத்திற்குக் களந்தான் யாதோ?
தேக்குக்குக் கறையானா எதிரி? வாழ்க்கை
தேய்வதெலாம் மனம், பிழைப்பு, நடந்தை யாலே!

●●

# செவ்வாய்ச் சிந்தனை

1. ஆவடிக்கு வாராமல் ஆமை ஏட்டில்
அமர்ந்துள்ள பாவலர்கள்! இன்றுங்கூடக்
காவலுக்கு இமயமெனக் கதைய ளந்து,
காலத்தைத் தள்ளாதீர். கன்னிக் கண்ணின்
ஏவலுக்கே ஏங்காதீர்! இமைக்கும் முன்னே.
ஏகிவிடும் விண்கோளின் ஆற்றல் விட்டுச்
சேவலுக்கும் பெட்டைக்கும் காத லென்ற
செய்திக்குக் கவியெழுதி ஓயவேண்டாம்.

2. இயற்கைக்கும் கவிஞனுக்கும் தொன்று தொட்டே
இருந்துவரும் உறவினையாம் மதிப்போம்; ஆனால்
இயற்கைதனை ஆய்கின்ற மனித னாற்றல்
ஏன்கோற்றப் படவில்லை நம்மால்? ஏதோ
செயற்கரிய செய்தாற்போல் யார்யாரையோ
சிந்தித்துப் பாடுகின்ற கவிஞர் கூட்டம்
வியக்கின்ற 'வைக்கிங்' கை விட்டார் தம்மை
விழைந்தேற்றிப் பாடாத விந்தை ஏனோ?

3. ஆடுமகள் கோடுதனம்; அரையின் கீழே
அருகம்புல் திரைபோட்ட உதடாம்; அந்தோ
பாடுமகள் நாப்பேழைக் கதவைப் பற்றிப்
பாடாத பாவலர்கள் உண்டா? நெற்றிக்
கோடுகளில் வரலாற்றை எழுதி, எங்கும்
வினாக்குறியை உலவிடும் விஞ்ஞானத்தின்
பீடுதனைப் பாடாமல் மாதர் செவ்வாய்ப்
பெருமைதனைப் பாடுகிறீர் இன்னு மேனோ!

4. இழிவான எச்சிலுக்கு வேலி யான
இதழ்ப்பெருமை எத்தனைபேர் பாடி னீர்கள்?
பழிப்படலம் போர்ப்பெருமை பாடிப் பாடிப்
பழிதீர்த்துக் கொண்டீரே! பிழைப்புக் காக
மொழிப்புகழும் அங்கங்கே அளந்தீர்! இன்று
மூச்சடங்கிக் கிடக்கின்றீர்! உங்கள் பாட்டோ
அழிந்துவிடும்; அழியாத விஞ்ஞா னத்தின்
அருமைதனைப் புதுமைதனைப் பாடாவிட்டால்

5. செவ்வாயில் தேனெடுத்துச் சுவைத்த தற்குச்
சிந்துபல பாடியது போதும். வைக்கிங்
செவ்வாயில் மண்ணெடுத்தே ஆய்வு செய்து.
செய்திதரும் பெருமைதனைப் பாட வாரீர்!
ஓவ்வாத உரையாற்றி ஊரை ஏய்ப்போர்
உயர்வுதனைப் பாடாதீர்! சிந்தைக் கெட்டாச்
செவ்வாயை ஆராயும் விஞ்ஞா னத்தின்
சீர்பாடிப் பேர்பாடி மகிழ்வோம் வாரீர்.

●●

## நெஞ்சே! நெஞ்சே!

இருப்புக் கணக்கெழுதி என்றென்று மிங்கே
இருப்பார்போல்பேசி இயங்குகிறோம்; உள்ளவரை
ஆர்ப்பாட்ட ஆணைகளும், ஆவேசப் பேச்சுகளும்
போர்க்கோல மெல்லாமே பொய்ச்சரக கெண்பதனை
எண்ணி இரங்காமல் இங்கலையும் பேர்வருகாள்!
கண்ணீரைக் கண்டு களிக்கின்ற கல்மனமும்
எட்டடிக்கு மேலேறி எட்டுஅடி வைக்காதே!
கொட்டி முழக்கிக் குரலெடுத்துப் பேசாதே!
உள்ளவரை நல்லவராய் ஒப்புறவு தான்பேணிக்
கள்ளமின்றி வாழ்ந்தால் கறையின்றிச் சென்றிடலாம்.
பாவ வரவதிலே பங்குதர ஆலயத்தை
ஆவலுடன் நாடிதினம் ஆரா தனைசெய்தால்
ஊர்மயங்கும்; குற்றஞ்செய் உள்மனமும் தான்மயங்கும்;
யார்மயங்கி என்னபயன்? நாம்விதைத்த தீமையெலாம்
நாளை முளைத்தோங்கி, நன்றாய்க் கிளைத்துற்ற
வேளையிலே வந்தமர்ந்து வேதனையைத் தாராதோ?
முத்தெடுக்க வந்தவர்கள், மூச்சடக்க மாட்டாமல்
கத்தளையைக் கையேந்திக் காக்கையுடன் போராடல்
என்ன செருக்கையா? ஏனிந்தக் கீழ்நிலைமை?
பின்னமுறும் ஆசைகளால் பேதுறுதல் தான்பீடா?
தண்ணீர் குடித்தால்தான் தாகம் தணியுமன்றி
எண்ணெய் குடித்திட்டால் என்னாகும்? வாய்ப்புளதால்
இல்லாரை ஏய்த்தும் எளியோரை வாட்டிதினம்
செல்வம் குவிப்போரைச் சிந்தித்துப் பாருங்கள்!

எல்லார்க்கும் சாண்வாயிறே! எண்ணந்தான் ஏராளம்!
இல்லானும் உள்ளானும் ஓடுவதும் ஓரிடந்தான்.
யார்நினைத்துப் பார்க்கின்றார்? யானென்ற
ஆணவத்தால்
தேர்திரும்பும் நாள்வரையில், ஊரடக்கப் பார்க்கின்றார்;
எத்தனையோ பேரிங்கே ஏதேதோ சொன்னார்கள்
அத்தனையும் கேட்டவர்க் காலயங்கள் கண்டதன்றி
வாழ்வில் கடைப்பிடிக்க வாங்கிவைத்த தொன்றுண்டா?
பாழ்மனத்தர் மேடைக்கே பாடமாய்க் கொண்டார்கள்
என்பதுதான் கண்டபலன், என்பதனை நாமறிவோம்
என்றாலும் ஏதோ எடுத்துரைத்தோம்; கேளாரை
நான்நோவப் போவதிலை; ஏன்நோக வேண்டும்நாம்?
ஆன்றோர் வழியில் அடிதொட்டு நாம்நடந்தால்
நன்மை கிடைக்குமென நம்புவதால் நானுரைத்தேன்
என்று திருந்துவ தெண்ணு!

●●

# அறிவு 6-5-4

ஆறன்றோ நாங்களெலாம், யாரெமக்கு நேரென்றே
கூறத் துணிந்தோரே! கூன்மனத்துப் பாவலர்காள்!
வாலில் வினாக்குறியை வைத்தலையும் குக்கலெலாம்
நாலிரண்டைக் கற்றதனால் நாப்பிழைப்பு செய்வதிலை!
ஊட்டி வளர்த்தார்பால் உள்ளன்பு கொண்டதனைக்
காட்டத்தான் வாலைக் கனிவுடனே ஆட்டுதய்யா!
ஆறெங்கே? ஐந்தெங்கே? ஐயன்மீர்! அற்பகுணம்
வேறெங்கே? உங்களிடம் வேர்விடுதல் காணீரோ?
போர்ப்புரவி போன்றமுகக் கார்நிறத்து வெளவால்கள்
ஆர்வத்தோ டுண்ணும் இலுப்பைப் பழவித்தை
ஒத்த அலகுடைய ஒப்புரவு காகத்திற்
கெத்தனையோ? நாளன்றோ! இங்கிரண்டு மேல்பெற்றும்
என்ன நடப்பய்யா? எங்கே பெருந்தன்மை?
பொன்னுருக்கும் தீயணைத்தால் பொய்மனம்போல்
போகாதோ

வீட்டிற் கொருகவிஞன், வேடிக்கைப் பட்டங்கள்!
நாட்டிற் கவிஞனெனில் நாலைந்து பேர்தானே!
சொல்லடுக்கிக் காட்டுதற்கே சூத்திரங்கள் கற்றவர்கள்
எல்லாம் கவிஞரென எண்ணுவது பேதைமையே!
நீதிக்குப் போராடி நேர்மையுடன் வாதாடிச்
சாதிப்ப தெல்லாமே சந்ததிக்கே என்பதுடன்
எண்ணிப் பணங்கொடுத்தால் எல்லாமே நீரென்று
பண்ணிசைக்கும் பண்புடையோன் பாதகனா? பாவலனா?

நாக்குப் புரட்டருக்கு நாடுதரும் பாராட்டு
பூக்கள் பெறும்வாழ்வே! போகுங்காண் குப்பைக்கே!
நாட்டை நினைத்தோரே! நாளுமிவண் வாழ்கின்றார்;
வீட்டை நினைத்தோர் விறகோடு போனார்கள்;
ஓட்டைப் புரட்டியவ ரெல்லா மறிந்தவரா?
சேட்டைகளை நூல்படித்த சின்னவரே செய்கின்றார்.
ஆடுபவர் ஆட்சிக் கலைவதுவும் அன்னார்பின்
பாடும் பரம்பரைகள், பட்டங்கள் சுற்றுவதும்
எண்ணெழுத்தைக் கற்றாலே எல்லாம் வருமென்றே
எண்ணாதீ ரென்றே எடுத்துரைக்கும் சான்றன்றோ?
வாதத் திறமைக்கு வாழ்த்துகள்; நீர்படைக்கும்
ஏதமிலா பாட்டிற்கெம் பாராட்டு; ஐயன்மீர்!
ஊராரை ஏய்க்கும் உரையொழித்து நீருழைத்தால்
பேராளச் செய்திடலாம், பின்னும்நீர் வாழ்ந்திடலாம்
நும்சுற்றம் நட்பொன்றே நும்பெயரைப் பேசுவது.
இம்மா நிலந்தன்னி லெத்தனை நாள்? ஆகையினால்
நன்றே நினைப்பீர், நடத்தையிலும் நாணயத்தை
என்றென்று மேற்பீ ரினிது.

●●

## பாடும் பரம்பரையே!

என்னருமை நண்பர்காள்! என்று மிருப்போரே!
நன்றி உணர்வுக்கு நாற்றுவிட்ட நல்லோரே!
கொன்றன்ன செய்து, குழிதோண்டிக் காத்திருந்தே
என்றுவரும் வாய்ப்பென்றே ஏங்கிக் கிடப்போரே!
கன்று வளர்ந்துவிடில் காராம் பசுவதனைக்
கொன்றுவிடப் பார்ப்பதிலை! கூடி இருந்தவரைத்
தின்றுவிடும் தீச்சிலந்தி தீயமனம் மாறட்டும்!
ஆயிரந்தான் பேசுங்கள்! ஆழ்குழி தோண்டுங்கள்!
பாயிரந்தான் பாடியெனைப் பாராட்டிப் பாடுங்கள்!
எப்போதும் நான்நான்தான்! என்கொள்கை மாறாது!
குப்பன் பெயர் மாற்றிச் சுப்பனென ஆனாலும்
அப்பா! அடையாளம் அப்போது மாறாதே!
மந்தி மரமேறித் தந்திதனைப் பார்த்தவுடன்,
அந்தோ பரிதாபம்! எவ்வளவு குள்ளமிது
என்றே தருக்குதல்போல் இன்றிங்கே நீட்டாதீர்!
இன்றெவரை ஏய்த்திடதாம் என்னநலம் பெற்றிடலாம்
என்றேங்கித் தாழ்செயலை என்றும் புரியாதீர்!
அன்றாடம் நெஞ்சகத்தில் ஆசைபயிர் செய்யாதீர்!
மேகம் கலைந்துவிடும்! மோகம் மறைந்துவிடும்
வேகம் குறைந்தாலும் வேங்கை வெள்ளாடாமா?
எல்லாரும் இன்புறவும், ஏற்றங்கள் கண்டிடவும்,
பொல்லாங் கொழித்தே பொதுநோக்கில் ஒன்றாவீர்!
நில்லாப் பதவிக்கும், நீர்த்துவிடும் வாழ்வுக்கும்,
ஒல்லா தனச்செய்தால் இல்லாமற் போய்விடுவீர்!

ஆட்டிப் படைப்பாரும், காட்டிக் கொடுப்பாரும்,
போட்டி பொறாமையினால் பொய்ச்சூது செய்வோரும்,
ஓட்டி விடம்பிடிக்க ஏங்கித் தவிப்பாரும்,
காட்டிவிடம்பிடிக்கும் காலந்தான் வாழ்ந்திருப்பார்.
முன்னேற்றி விட்டு முழமேறா ஆசான்போல்
குன்றா இலக்கியத்தால் நின்றிருக்கும் வள்ளுவன்போல்
நாமிருக்க வேண்டாமா? நாமுழைக்க வேண்டாமா?
தாமிரத்திற் கேங்கிக்கைத் தங்கத்தைத் தள்ளாதீர்!
ஆக்கந் தரும் சக்திக் காதரவு நாம் தருவோம்;
தாக்குகின்ற சக்திகளைத் தாங்குகின்ற சக்திதனை
ஏக்கமிலா நெஞ்சுதனில் ஏந்திடுவீர் ஆக்கத்தை
நாட்டிற் பொதுவாக்கி, நன்னெறியை நெஞ்சேற்றிக்
காட்டும் பொதுநெறி காண்.

## தொண்டும் தொழிலும்

1. இனப்பற்றும் மொழிப்பற்றும் இல்லார்க் கிங்கே
இருப்பதெலாம் வயிறொன்றேயாகும்; செந்தீ
அனற்பட்டே உருகிவிடும் மெழுகைப் போலே,
அழகுடலை அவர்பெற்று விளங்கினாலும்
கனத்துலந்து கை, கால்கள் முனைகு லைந்து,
கருவேலன் மரப்பட்டை உடலைப் பெற்றோர்
மனத்துதிக்கும் மொழிப்பற்றின் முன்னால், மாறும்
மானிடரின் அழகினையா மதிக்கக் கூடும்?

2. திரும்பாமல் நாற்புறகும் நடக்க வல்ல
திணையரிசி சினைவயிற்று நண்டைப்
போன்றோர்
விரும்பாமல் தமிழ்குரலை காட்டு கின்றார்
வினைவணிக மேடையொலி செய்யும் மாக்கள்
துரும்பாலே தூலந்தான் செய்து வைத்தால்
தோகையையும் தாங்காதே! துருப்பி டித்த
இரும்பாலே போர்வாளா? காச டிப்போர்
இயக்கத்தால், பேச்சாலே தமிழ்தான் தேயும்.

●●

3. ஆங்கிலத்தால் ஆண்டவர்கள் அகன்றே இன்றோ
ஆயிற்று மாமாங்கம் மூன்றாம் ஆனால்
ஆங்கிலத்தைக் கலக்காமல் பேசு தற்கோ
அரும்பாடு படவேண்டும் யாரும், மேலும்
ஏங்கிவரும் இழிகலையை இழுத்து வந்தே
இரு என்றே மடிமீத மர்த்திக் கொண்டு,
தீங்குதனை விலைகொடுத்து வாங்கி வைத்தே
திண்டாடும் கடையரென ஆனோ மன்றோ!

4. தமிழ் மலையார் தகுதியினால், உழைப்பால் பற்றால்
தனித்தமிழை வளர்த்தார்கள், தொடர்தல் விட்டே
உமிழ்நீரில் குளிப்பவர்கள், இரத்த புஷ்பம்
உண்டாக்கி விற்றார்கள், வாங்கிக் கொண்டோம்!
உமியளவும் நம்மிடத்தில் மொழிமேல் பற்றோ
உருவாகி வளர்ந்திருந்தால் கிறுக்க ரெல்லாம்
தமிழாலே தம்வயிற்றைக் கழுவு தற்குத்
தளமமைத்துக் கொடுத்திருக்க மாட்டோ மன்றோ?

5. தாமரையின் மொட்டைப்போல் நீண்டு நின்று
தருமொலியைப் பெருக்கின்ற கருவி தன்னை
நாமணக்கத் தமிழ்த்தொண்டு புரியு தென்றால்
நம்புதற்கும் ஆளுண்டா மிங்கே. ஆமாம்
காமணத்தல் காகத்தின் எச்சத் தாலா?
கவின்மலரின் இதழாலே அல்ல அன்றே
ஆமணக்கு வேடித்தாற்போல் பேச்ச விழ்த்தே
ஆர்ப்பரிப்பார் பலருண்டாம் அந்தோ ஈண்டே!

6. குறிஞ்சிமலர் கொண்டுவந்தே சூடச் சொல்லிக்
கோலமயில் காத்திருக்க ஆளன் ஓடி
நெருஞ்சிமலர் தனைப்பறித்து வந்து நின்றே
நேரிழையே திரும்பென்றாற் போலே இங்கே,
அறிஞரெலாம் தமிழ்வளர்ப்பார் காப்ப ரென்றே,
அப்பாவிப் பாமரர்கள் நம்பி நிற்க,
வறிஞரவர் வாழ்வுவளம் தேடிச் சென்றே,
வண்டமிழைத் திண்டாட விட்டார் கண்டோம்!

7. உடுக்கையிலாக் காலத்தில் மொழிமேல் பற்றோ
உண்டாகா திருப்பதிலே குற்ற மில்லை!
அடுக்கடுக்காய் மாளிகைகள் கட்டிக் கொண்டிங்
கலங்கார மாயுடுத்தி வாழும் நாளில்
எடுத்துவர வெண்டுமொரு சொல்தா னென்ற
இல்லாமை இல்லாத மொழிமேல் பற்று,
கொடுத்துவர வேண்டுமென எண்ண லாமா?
குருதியிலே கலந்தன்றோ தமிழ் மேல் பற்று!

●●

## இளையோர்க்கு!

1\. வளைவழி வாய்க்கால் நீர்போல்
  வளர்ந்திடும் சமுதா யத்தில்
இளையவர் ஆற்றல் போனால்
  எதிர்வரும் காலம் கானல்!
தளைதனைத் தகர்த்த பின்னர்த்.
  தமிழ்நலன் காக்க ஆர்த்தார்;
கிளையிலாத்தருபோ லின்றோ
  கிடக்கிறார் இளையோ ரென்னே!

2\. துடிப்புடன் வினைக ளாற்றும்
  தொண்டுள இளையோர் தம்மைப்
படிப்புடன் சமுதா யத்தைப்
  பக்குவப் படுத்தும் பாட்டில்
நடிப்பிலா ஒழுக்கம் கொண்டோர்.
  நயவுரை ஆற்றி ஈர்த்தே.
அடிப்படை அமைப்ப தற்கோ
  அருகதை பெற்றோ மில்லை!

3\. தொண்டரைத் தூயர் தம்மைத்
துணையெனத் தொட ராப்போக்கால்,
கண்டிலம் மேன்மை இங்கே!
கடுவனின் கீழாய் ஆனோம்!
வண்டுகள் மலத்தை மொய்த்தால்
வளர்செடி இனப்பெ ருக்கம்
கண்டிட இயலுங் கொல்லோ?
கலியுகம் இருள லாமோ?

4\. ஆட்படுத் திடுவா ரில்லை;
ஆட்படு வாரு மில்லை!
வாட்படுத் திட்ட பின்னர்!
வளருமோ வீர மங்கே?
நாட்பட விட்ட வித்து
நாற்றென ஆவ தில்லை!
வீட்டுளே இளையோர் சோர்ந்தால்
விளைவது பதரே யாகும்!

□□

## பணிவு

1. கத்தியை இழந்த பின்னர்க்
கைப்பிடி விதவை யாகும்!
கொத்தியே பயிரி டாத
குறுநிலம் கரம்பாய்ப் போகும்!
பத்திய மிலாது போனால்
பச்சிலை பகையு மாகும்
வித்தகர் ஒழுக்கம் கெட்டால்
விளைவது பழியே யாகும்!

2. அறிவியல் பயின்று தேறி,
ஆக்கமே கண்ட போதும்,
பொறியியல் நுட்பங் கண்டு,
புதுமைகள் துலக்கி னாலும்,
வறியவா கண்ணம் போலே,
வாழ்க்கையில் அடக்க மின்றேல்
குறியிலான் கட்சி போலே
குழப்பமே மிஞ்சுங் கண்டீர்!

3. உடலினைத் தூய்மை யாக்கி,
ஒப்பனை செய்த போதும்,
கடல்நுரை போலே தூய,
கவினுடை தரித்த போதும்
தொடலிலை பொய்யை என்ற
துறவினை மேற்கொள் ளாக்கால்,
மடலவி ழாத மொட்டாய்
மனநலன் கருகிப் போகும்!

4. கல்வியில் கூர்மை செல்வக்
கவர்ச்சியில் மிடுக்காம்; ஆளும்
சொல்லினில் நயங்கள்; வெற்றிச்
சூழலும் அமைந்த போதும்,
நெல்மணிக் கதிர்கள் முற்றி
நிலத்தினை நோக்கு மாப்போல்
இல்லையேல் பணிவு யார்க்கும்
இறுதியில் இழிவே சூழும்!

□□

## பழுப்பும்—பராமரிப்பும்

1. இரையெடுக்கும் கோழியைப்போல் பரப ரப்பாய்
இயங்குகின்ற உலகத்தில் பந்த பாசம்
திரைவிழுந்த அரங்கத்தை விட்டே மக்கள்
திக்கெட்டும் விரைந்தோடி மறைதல் போலே
புரையோடிக் கிடக்கின்ற உள்ளம் விட்டுப்
போவதனைப் பார்க்கின்றோம்;
பெற்றோ ரையும்
அரைக்கம்பக் கொடியாக்கி விடுவோ மந்தோ!
அலமந்து போகின்றார் முதியோ ரேனே!

2. ஆளாக்க அவர்பட்ட அல்லல் தன்னை
அந்தோநாம் நினைப்பதிலை! மாறாய்ச்
சொல்லை
வாளாக்கி அவர்நெஞ்சைப் பிளப்போம்; நொந்து
வாழ்வெதற்காம் இனிநமக்கென் றெண்ணச்
செய்வோம்!
தேளாக்கி விடுவோம்நாம் முதுமை யுற்றால்
தேவையிலாப் பொருளாவார் பெற்றோர்;
அந்தோ
தூளாகி விட்டமரச் செப்பைப் போலே
துரத்தி லொதுக்கிடுவோம் என்னே பாசம்!

3\. அறிவூட்டி மொழிகாட்டி வளர்த்த வர்க்கே,
அந்திமத்தி லறிவில்லை என்று சொல்வோம்!
நெறிகாட்டி நீணிலத்தில் உயர்த்தி யோரை,
'நீ போபோ, உனக்கொன்றும் தெரியா
தென்போம்!
குறியோடு பொருளீட்டிக் குடும்பங் காத்துக்
குலம்விளங்க உழைத்தவரை மதிக்க
மாட்டோம்!
வறிதான வாழ்க்கையடா! வயது முற்றி
வருமானம் குறைந்திட்ட முதியோர்க் கிங்கே!

4\. பொலிவில்லை தோற்றத்தி லென்ப தாலே
புழங்குமிடம் அவர்வரவே கூடா தென்போம்!
எலிகளுக்கும் உரிமையுண்டாம் உலவ: இல்லில்
ஈன்றவர்க்கு இலையந்த உரிமை என்னே!
நலிந்தார்க்குச் சேவையென ஊரைச் சுற்றும்
நாயகியர் மாமிதனை மதிப்ப துண்டா?
அலியிடத்தில் ஆண்மையென மூத்தோ ரிங்கே
அவமானப் படும்போது பெருமை எங்கே!

5\. பயனுண்டாம் என்றால்தான் பந்த பாசம்;
பணவருவாய் உண்டென்றால் பற்றே ஓங்கும்;
அயலவரே ஆனாலும் ஆக்கம் எண்ணி,
அன்பொழுகப் பழகிடுவோம், கொள்ளும்,
புல்லும்
முயலாக ஓடுகின்ற குதிரைக் கன்றி
முடமான குதிரைக்கா தருவோம்? வாழ்க்கைச்
செயலாக்கம் தன்னலத்தின் அச்சு மீது;
செப்புகின்ற பிறயாவும் நிழலே யாகும்!

□□

# இன்றைய தேவை

1. பொங்காத நேரத்தில் அலையைத் தொட்டுப்
பூவையரும் ஆடிடுவர் பொங்கும் வேளை
நங்கூர நாவாயும் நடுங்கும்; காலை
நனைப்பதற்கும் அஞ்சிடுவர் மாந்தர்; ஆர்வம்
பொங்காத இளையோரின் ஈட்ட மிங்கே,
பொழுதோட்டும் பொய்க்கலையில் நாட்டங் கொண்டால்
இங்கேது புதுப்புரட்சி? இலங்கை போன்ற
எச்சிலுக்குள் மூழ்கிவிடும் நாடும் துள்ளும்.

2. அறிவுக்கும் ஆற்றலுக்கும் பஞ்ச மில்லா
ஆட்பலத்தைப் பெற்றிருந்தும், ஆட்ப டுத்தும்
நெறிநிற்கும் நற்றலைமை இன்மை யாலே,
நெஞ்சமுக்கே தலைமுறையின் சேமிப் பாச்சு!
குறிகெட்டே அலைகின்றார் இறையோர்; கண்கள்
குருடானோன் எய்திட்ட அம்பா யானார்!
தறிபட்ட நூல்தானே ஆடை யாகும்;
தன்னடக்கம் இருந்தால்தான் உயர்வு கூடும்!

3. தேவையெலாந் ஒழுக்கமுடன் கட்டுப் பாடு!
திசைமாறா நன்னோக்கு நடத்தை! கற்கும்
பூவையர்க்கும் காளையர்க்கும் பொறுப்பு வந்தால்,
புதுப்பொலிவு நாட்டுக்குள் புகுந்தி டாதோ?
சேவையென வெறும்பேச்சுப் பேசு வார்பின்
செல்லாத மனத்தெளிவும், உழைக்கும்
நோக்கும்,
தேவையிப்போ திளையோர்க்கு? திருந்தி வந்தால்
திருக்குறள்போல் உலகேற்ற உயர லாமே!

4. அரசியலே பெருந்தொழிலா யான தாலே,
அறிவியக்கம் படுத்ததிவண்; ஆடும் கூட்டம்
விரசத்தை விருந்தாக்க முனைந்த தாலே,
விஞ்ஞானச் சிந்தனைகள் வீழ்ந்த திங்கே!
தரங்கெட்டோர் தனவந்த ரான தாலே,
தலைமுறைக்குத் தவறுகளே தரும மாச்சு!
உரங்கொண்ட இளையோரே! உணர்வு பெற்றே
ஒழுக்கமுள சமுதாயம் படைக்க வாரீர்!

5. வெறும் பேச்சில் நேரத்தை வீண டித்து
விளையாட்டாய்க் காலத்தைக் கடத்தி விட்டே
எறும்பாக இல்லாத காலம் எண்ணி
ஏங்குகின்ற பின்புத்தி தவிர்த்தல் வேண்டும்!
நறும்பாலே ஆனாலும் மாசு பட்டால்
நாமருந்த உதவாது முறிந்தே போகும்!
அரும்பான இளையோரே! அகந்தைவிட்டே
ஆன்றோரை மதியுங்கள்; ஆக்கம் காண்பீர்!

○○○

## நிலைகெடுக்கும் கலைகள்

1. ஒழுக்கத்தைப் பேணாமல் பொருளா தார
   உயர்வுக்கே பாடுபடும் உலகீர்! சூழும்
இழுக்கத்தில் எதைக் கொண்டு போவீர்? நெஞ்ச
   இறுக்கத்தை எவண்சென்று தளர்த்திக்
      கொள்வீர்?
பழுக்காத பலாச்சுளைபோல் பலன்தான் என்ன?
   பனிபெய்தா நெல்வளரும்? ஒழுக்கங் குன்றி
அழுகிவரும் குமுகாய வீதி தன்னில்
   அலங்கார முழக்கங்கள் போலி தானே?

2. வருத்துவது பண்பல்ல என்ற எண்ணம்
   வலுக்காமல் வலுவற்றோ மென்ப தாலே,
கருக்கதவைச் சாத்த டவே முயலு மாட்சி
   கணக்கெல்லாம் கையாளும் பொருளா தாரம்.
பருத்துவரும் தேவைதனைக் குறைக்கச் சொல்லப்
   பயங்கொண்ட ஆட்சியினர் மணம்செய்வார்க்கே
அருகதையாய் வயதுலரம் புரைத்தார், காதல்
   அலைகளுக்கு அதில்விலக்குத் தந்தார் ஏனோ?

3. பணநோக்கில் பதினாறும் நிரம்பாப் பெண்கள்
படுக்கையறைக் காட்சிகளில் தோன்றும் போது
மணல்மீது விட்டசிறார் போல ஆசை
மனங்கோண ஆடுவதைத் தடுக்கா ஆட்சி.
மணவினைக்கே வயதுவரம் புரைக்கும் சட்ட
மடைகட்டி என்னபயன்? கலையின் பேரால்
குணம்கெடுப்பார், பணம்பறிப்பார், தொண்ட
ரானார்!
குடிமக்கள் பரிதவிப்பார் சட்ட மெங்கே?

4. திரைப்படத்தில் பொய்யெனினும் காதல் செய்வோர்
தேர்ந்தவய தினராதல் வேண்டு மென்றே
உரைக்கின்ற மட்டமிலை என்ற போது
உளங்கிளறி இளையோரைக் கெடுப்போர்க்
காட்சி
திரைமறைவில் துணைபோக லாமா? மக்கள்
தெளிவற்றோர் என வெண்ணிக்கற்றோர் கூட
விரைவாக மோசடிகள் செய்தே நேர்வில்
வினையொன்று, சொல்லொன்று மாகின்றாரே!

5. பணம்படைத்தோர்க் கஞ்சுகின்ற சட்டம், ஏழைப்
பாமரன்மேல் பாய்வதிலே குறைச்சலில்லை!
குணங்கெடுக்கும் திரைபடத்தால், பாட்டால்,
நெஞ்சில்
குடியேறும் கீழ்மைகளோ கோடி! கோடி!
தணல்மீது மணல்கொட்டி அணைத்தல் விட்டே,
தளிர்களையே போடுகிறார் விந்தை, இங்கே
மனைவினைக்கே வயதுவரம் பென்றால், காட்சி
மாக்களது காதலுக்கும் பொருந்த லென்றோ?

●●●

## பத்திரிகை + அதர்மம் = ?

1. அறிவியலின் ஆக்கத்தால் அகத்தூய் மையை
அதிகரிக்க முயற்சியெதும் மேற்கொள் ளாமல்
வறியவரின் கீழுணர்ச்சி தன்னைத் தூண்டி
வருவாயைத் தேடுகிறார் பலபேர், அச்சுப்
பொறிவளர்க்கும் ஏடுகளால் ஒழுக்கப் பண்பு
பொல்லாத வழியிழுக்கப் படுதல் கண்டும்,
வறியவனின் கொடையெண்ணம் போலே ஆள்வோர்
வக்கற்று நிற்பதனால் வளரும் தீமை!

2. கொலை, கொள்ளை, கற்பழிப்புச் செய்திக் கிங்கே
கொடுக்கின்றார் முதலிடத்தைக் கொடுமை! ஏடு
விலைபோக வேண்டுமெனும் விருப்ப மோங்க
வீழ்த்திட்டார் ஒழுக்கத்தை, பண்பை, மேலும்
நிலைகெட்ட கலையுலகச் செய்தி என்றே
நீச்சலுடை படம்போட்டுக் கெடுப்பா ரிங்கே.
விலைமாதர் தமைமேலோ ராக்கு கின்ற
வினைதேர்ந் தோர் கைகளிலே ஏடு என்னே!

3. அறிவியலுக் கிடம்சிறிதே தருவார், கெட்ட
அழகிகளின் செய்தியினைப் பெரிதாய்ச் சொல்
வார்;
நெறிபுகட்டும் இலக்கியத்தை நெருங்க மாட்டார்;
நீட்டாண்மை அரசியலை நிறையச் சொல்வார்;
பொறியியலை, புதுமைகளை எழுத மாட்டார்;
புறம்போக்குச் சவாலுக்கு எட்டும் ஈவார்;
குறிகெட்ட குடிகேடர் கையில் ஏடு!
கொலுவிருப்போர்க் காதரவாம்; என்னே நாடு;

4. கதையளக்க வந்திருக்கும் பெண்கள் கூடக்
கட்டிலறைச் செய்திகளைப் புனைகின் றார்கள்!
கதையளக்கும் வருணனையே கதையின் ஓட்டம்?
சரா சரிக்கும் கீழேதான் சுவைஞர் கூட்டம்!
விதைபழுதாய்ப் போனதன்பின் விளைச்சல் பற்றி
வேதனையை வெளியிட்டிங் கென்ன லாபம்?
எதைப்பற்றிக் கவலையுற்றோம்? ஏட்டின் கீழ்மை
எல்லாமே வியாபாரம், திருந்தல் என்றோ?

5. விண்வெளியை ஆராய்ந்து மீண்டு வந்த
வித்தகரின் படம்போட மாட்டார்; கெட்ட
பெண்படத்தைப் பெரிதாகப் போட்டு விட்டுப்
பேட்டிகளும் கண்டிடுவார்; இளையோர்க் காக,
எண்ணெழுத்தில் தேர்ந்தாரைப் பேட்டி கண்டிங்
கெழுதாமல் திரையுலகச் செய்தி சொல்வார்!
கண்கெடுக்கும் ஏடுகளே மலிந்த நாட்டைக்
காப்பாற்ற எவர்பிறப்பார்? கலங்கும் கண்ணே!

○○○

## எதிர்காலத்தின் பங்கு

1. ஆக்கத்தை வளர்க்காமல் அவர வர்கள்
ஆசைகளை, தேவைகளை வளர்த்துக் கொண்டோம்;
ஊக்கத்தோ டுழைப்பதற்குப் பதிலாய் நாளும்
ஊழலிலே புதுமைகளைக் கண்டு வந்தோம்!
நாக்காலே உற்பத்தி கண்டோம்; ஆலை
நாடிபல ஒடுங்குதை ஏற்றுக் கொண்டோம்!
வாக்காலே கெட்டதடா நாடு, நம்மின்
வரலாற்றில் நுழைந்தடா கேடு மந்தோ!

2. சேமிப்பியக்கங் கள்கண்டோம்; தேனீற்
செய்தன்னைப் படிப்பினையாய்ப் பகருகின்றோம்!
சேமித்த ஈக்களினை விரட்டி விட்டுச்
செயல்தீமைக் கிரங்காமல் தேனெடுப்போம்!
சேமிப்புத் தத்துவத்தில் பொதுமை இல்லை!
சிந்தனையில் தொலைநோக்குச்சிறப்பு மில்லை!
நாமிருக்கும் நாளுக்கே எல்லா மென்ற
நஞ்சான கொள்கையிலே திளைத்தோ மென்னே!

3. கனிவளத்தைச் சுரண்டுகிறோம், நாளும்; மேலும்
காடுகளை அழிக்கின்றோம், நமது முன்னோர்
இனிவருவோர்க் கிருக்கட்டும் என்று வைத்த
இயற்கைவளம் தனைமுற்றும் தீர்த்து விட்டால்
முனியாரோ பிற்கால மக்கள்? நம்மின்
முறைநீதி தனைஎள்ளி நகையார் கொல்லோ!
இனிதாக இங்குரைக்கும் இசங்க ளெல்லாம்
எதிர்கால சந்ததிக்கே இல்லை போலும்!

4. விதைநெல்லை வேகவைப்பார் தம்மை யாரும்
விவேகியென விதந்துரைக்க மாட்டோம்; மண்ணில்
புதைந்துள்ள செல்வத்தை முற்றும் தீர்த்தல்
பொறுப்பற்ற முறையென்போம், நமது பங்காய்க்
கதையளந்து வைப்பதுவா எதிர்காலத்தைக்
காப்பாற்ற உதவிவிடும்? கனிவளத்தில்
எதையும் நாம் இனிதுய்க்க உரிமையில்லை;
ஏற்றத்தைச் செயற்கைவழி காண வேண்டும்!

5. பங்கீட்டு முறையில்நாம் நிகழ்காலத்தைப்
பார்ப்பதுபோல் பரிவோடெதிர்காலத்தை
இங்கிதமாய் எண்ணிடுதல் வேண்டும்; பேசும்
இசங்களுக்கு முழுவடிவம் தருதல் வேண்டும்!
பொங்கிவரும் கடல்நீரின் நுரையைப் போலே
போவதுவா பங்கீட்டுக் கொள்கை? என்றும்
தங்கம்போல் மங்காத கொள்கை வேண்டும்!
தகரம்போல் நாம்வாழ்ந்தால் பழிதான் கூடும்!

○○

## சாதீ...

1. சனநாய கமமென்றொன்றே இந்த நாட்டில்
சத்தோடே உலவுவரை சாதி நோயை
இனங்கண்டே ஒழிப்பதுபோல் பேசக் கூடும்
இதயத்துள் சாதியதன் வேரே ஓடும்!
அனல்பறக்க மேடையிலே பேச்சவிழ்த்தே
ஆர்ப்பாட்டம் செய்தாலும், வாக்குச் சேர்க்க
இனம்வேண்டும், சாதியதன் உதவி வேண்டும்;
என்பதனால் சாதிமனம் உணர்வைத் தூண்டும்

2. சாராயச் சண்டைக்கு ஆளைக் கூட்டச்
சாதியவன் தவறாமல் முன்னே நிற்கும்!
தீராத காமத்தால் பெண்ணைத் தீண்டித்
தேகத்தில் வடுப்பெற்றால் சாதி யங்கே
ஆராய மனமின்றிக் கம்பு ஏந்தி,
அடிதடிக்கே ஆள்திரட்டும்! இந்த ஆற்றல்
வாராதே வேறெதற்கும்; அதனா லிங்கே
வளர்சாதி ஒழியாதே, ஒழிக்க மாட்டோம்!

3, தீயணைக்க வேண்டுமெனப் பேசிக் கொண்டே,
தேடியதில் மண்ணெண்ணெய் வார்ப்பார்
போலே,
தாயகத்தில் சாதிவெறி கூடா தென்றே,
தலைவரெலாம் பேசுகிறார்; வீட்டுக் குள்ளே
வாயசைத்துக் கலப்புமணம் காண்பா ரானால்,
வரலாறு சாதிக்கே இறந்த காலம்!
ஆயகலை நாமறியோம்; ஊரை ஏய்த்தல்
அக்கலையின் ஒரு கிளையே போலும் என்னே!

4. கூரையெலாம் எரிகிறது! கொடுமை கேட்டுக்
கும்பியெலா மெரிகிறது! சாதி மட்டும்
ஆரையெனப் படர்கிறதே! அவ்வப் போதில்
அடிதடிகள், கொலைகொள்ளை அட்ட காசம்
ஊரையெலால் அச்சுறுத்து கின்ற தய்யோ!
உப்புதனை ஏரிக்குள் பதுக்கு மாட்கள்
கூரையிலே கொள்ளிதனைச் செருகி வைத்தே
குறளாய்வு செய்கின்றார் விந்தை என்னே!

5. அச்சத்தால் வள்ளியவள் கிழவன் றன்னை
அணைத்தாற்போல் அப்பாவி மக்கள் கூட,
இச்சையின்றிச் சாதியிடம் சேர்கின் றார்கள்;
இதைப்போக்க முன்வந்தால் சாதி சாயும்!
நச்சுப்பல் பிடுங்காமல் பாம்பின் ஆட்டம்
நயக்கின்றார் சிலதலைவர், அவர்க ளென்ன
குச்சுக்குள் வாழ்வோரா? குடிசை வாழ்வோர்
குறிகெட்டுப் போகாமல் விழிக்க வேண்டும்!

OOO

## நீதி என்று ஒன்று

1. நீதியென ஒன்றில்லை நிலையாய்! எந்த
நிகழ்வுக்கும் இருபக்க முண்டு; நன்கு
வாதிக்க வல்லார்தம் வார்த்தை தானே
வழக்கிலுள்ள நீதிக்கு நீரும் வேரும்!
ஆதிக்கம் பெற்றவரின் செயலே நீதி!
அதைச்செய்யும் பாமரனோ குற்ற வாளி!
நாதியற்றுக் கிடப்பதிந்த நீதி! ஆமாம்
நம்பிக்கை நாமிழந்தால் தெரியும் சேதி!

2. காவலிலே வைத்தொருவன் புடைக்கப் பட்டால்
கடமையெனக் கருதுகிறோம்; கண்முன்
பெண்ணின்
தாவணியைப் பிடித்திழுத்தான் தன்னை அண்ணன்
தாக்கிவிட்டால் குற்றமெனத்தண்டிக்கின்றோம்!
ஆவணியில் சூல்கொள்ளும் மேகம் போலே
அலைகின்ற நீதிக்கே உருவ மேது?
கோவலன்றான் கொலையுண்டான் ஊழால் என்றால்
குற்றமற்றான் பாண்டியனே? இதுதான் நீதி!

3. பிறநாட்டைத் தாக்குங்கால் வீர மென்று
 பெரிதாகப் புகழ்கின்றோம்; பூரிக் கின்றோம்;
திறங்காட்டப் பிறர் நுழைந்தால் தீய ரென்றே
 திட்டுகிறோம்; ஆக்ரமித்தார்? என்போம், மெச்சி
மறமென்போம், அறமென்போம் நாம்செய் யுங்கால்;
 மற்றவர்கள் செயக்கண்டால் கீழ்மை என்போம்'
நிறம்மற்றும் சுவைமாறும் நிலத்திற் கேற்ப
 நீரொக்கும் நீதிநிலை நினைத்துப் பாரீர்!

4. ஆள்பவர்கள் சூதாலே வெற்றி கண்டால்,
 அது அரசு தந்திரமாம், ஆனால் இல்லா
ஆள் மட்டும் கீழறுப்பால் வெற்றி பெற்றால்,
 அதைக்குற்ற மென்கிறோம், இந்த நீதி
வெள்ளாட்டின் கண்போன்ற கோலி கொண்டு
 விளையாடும் சிறுவனுக்கும் நகைப்பை நல்கும்
துள்ளுகின்ற சட்டத்தின் தோற்ற காலத்
 தூய்மையெலாம் கெட்டதன் பின் நீதி ஏது?

5. நம்செயலுக் கொருதீர்ப்பு, மாற்றார்க் கொன்று!
 நடுநிலைமை என்பதெலாம் வெற்றுப் பேச்சு?
செம்மைக்கும், செயலுக்கும் மதிப்பில் லாத
 சீர்கேட்டை அனுமதித்திங் கேற்றுக் கொண்ட
அம்புவியார் அலங்கார நீதித் தேரை
 அவரவர்க்கே ஏற்றபடி இழுக்கும் போது,
கொம்பொடிந்த மாட்டுக்குக் கொப்பு செய்யும்
 கோணங்கித் தனந்தானே நீதிப் பேச்சும்!

## தாய்மொழியா? வாய்மொழியா?

1. தமிழ்நாட்டில் வாழ்வதற்கும், வளர்வ தற்கும்
தமிழைப்போ லுதவுமொழி உண்டோ வேறு?
தமிழ்நாட்டின் ஆட்சியிலும் தமிழே என்ற
தகுதிதனை ஆள்பவர்கள் தந்த பின்னும்
தமிழ்நாட்டில் தெலுங்குருது கன்ன டத்தைத்
தாய்மொழியாய்ச் சிலரிங்கே பேணல் ஏனோ?
தமிழ்நாடே தாய்நாடாய் ஆன பின்னர்,
தண்ணீரை நீலுஎனல் தேவை தானா?

2. மல்லிகையும் மருக்கொழுந்து மிருக்கும் போது
மஞ்சத்தில் பனம்பூவைப் பரப்ப லாமா?
நெல்லரிசி கலம்கலமாய் நிறைந்திருக்க
நீருலைக்குப் புல்லரிசி தேட லாமா?
வில்லிருக்க அம்பிருக்க எய்வதற்கு
விறகுதனைத் தொடலாமா? தமிழர் நாட்டில்
சொல்லினிக்கும் தமிழொதுக்கித் தெலுங்கில் பேசும்
சுற்றத்தைத் திருத்துவது எந்த நாளோ?

3. தலைமுறைகள் பலகண்டு தமிழர் நாட்டில்,
தங்கிவிட்ட தெலுங்கர்காள்! சுற்றும் நீங்கள்!
இலைமறைவாய், காய்மறைவாய் தெலுங்கில் பேசி
எதற்காகத் தனித்துவத்தைக் காட்டு கின்றீர்?
அலைமேலே செல்வதற்குக் கலந்தான் தேவை.
ஆறுபரி பூட்டுரதம் அங்கென் செய்யும்?
கலைமலிந்த தமிழகத்தில் வாழு வோர்க்குக்
கன்னடமும் களிதெலுங்கும் உருதும் வீணே?

4. உருதேனும் மதத்தொடர்பாய் இருத்தல் கூடும்
உள்ளபடி தெலுங்கெதற்கு? சாதிச் சான்றா?
குருவின்றிக் கற்கின்ற மொழியை இங்கே
குலமொழியாய்க் கைக்கொண்டீர் தேவை
தானா?
எருவின்றேல் பயிர்குன்றும் நீங்கள் பேசும்
இனத்தெலுங்கை விட்டொழித்தால் என்ன
மோசம்?
தெருவெல்லாம் தமிழ்முழக்கம், வீட்டுக் குள்ளே
தெலுங்குறவு என்றானால் தெளிவும் எங்கே?

●●

தாரத்தை ஒதுக்கிவிட்டு மாற்றுப் பொண்ணைத்
தழுவுவதை ஒழுக்கக்கே டென்போம்! அன்பாம்
ஈரத்தை உலர்த்திப்பின் ஈகை என்றால்
இலக்கியங்கள் ஏளனந்தான் செய்யும் ஐயா!
வாரத்தின் முதல்நாள்போல் வளங்குன் றாத
வண்டமிழின் துணையிருக்க மாற்றும் ஏனோ?
நேரத்தில் நினைவூட்ட எழுதுகின்றேன்
நிலைத்திங்கே வாழ்வோர்க்குத் தமிழே
போதும்!

6. தனித்தமிழை வலியிறுத்தும் சிலபேர் வீட்டில்
தமிழுக்கு முதலிடமே தருவ தில்லை!
தனித்தமிழை ஏட்டிற்குள் கொணரு முன்னர்!
தமிழுக்கு வீட்டுறவை கிடைக்கச் செய்வீர்!
பனித்துளியால் பயிர்வளர்வ தில்லை! இங்கே
பழகுதற்குத் தெலுங்குமொழி தேவையில்லை!
இனித்தமிழர் நாட்டுக்குள் எவரா னாலும்
இயற்றமிழைப் புறக்கணித்தால் எதிர்ப்பே
மிஞ்சும்.

●●

## நல்ல குடும்பம்

1\. அப்பன்மார் மதுக்கடையில், அடக்கம் விட்ட
 ஆத்தாமார் கொட்டகையில், சுகத்துக் காகத்
தப்பாமல் இவர்பெற்ற பிள்ளைச் செல்வம்
 தன்னடக்கம் கெட்டூரைச் சுற்றும்! வீட்டுள்
எப்படியோ தங்கிவிடும் பெண்கள் கூட
 ஏடுகளை மேய்ந்திருப்பர்; பெறுப்பில் லாமல்
இப்படித்தான் பலகுடும்பம்; இந்த நாட்டில்
 ஏற்றத்தை எவர்கொண்டு வருதல் கூடும்!

2\. தவறுதனைக் கண்டவுடன் கண்டிக் கின்ற
 தகுதிதனை இழந்துவிட்டால் கீழே உள்ளோர்
தவறுகளை உரிமையுடன் செய்வர், இந்தத்
 தரங்குறைந்த காரணத்தால் தானே நாட்டில்
தவறுகளே தகுதியாச்சு! யார்க்கும்
 தைரியமும் அதிற்கூடிப் போச்சு! என்றும்
தவறுசெய அஞ்சிடுவோர் வாழும் வீடே
 தலைசிறந்த ஆலயமாம் அறிக நாடே!

3. கூடங்கள், மடங்கள் உயர்ந்திட் டாலும்,
குறிப்போதும் பட்டங்கள் தொங்கி னாலும்,
சூடத்தைச் சுடர்விளக்கை ஏற்றினாலும்,
சொல்லெடுத்துச் சிலரேற்ற வாழ்ந்த போதும்,
கேடறியா அறப்பண்பைப் அகத்தில் தேக்கார்
கேளிக்கை விளம்பரத்தால் ஊரை ஏய்த்துப்
பாடறியாப் பயன்துய்த்தால் இழிவே மிஞ்சும்!
பழுதான படகைப்போல் புகழும் மூழ்கும்!

4. சொற்குடும்பம் கவிதையென மாறும்; ஆறு
சுவைக்குடும்பம் விருந்தாகும்; வெப்பம் தந்த
கற்குடும்பம் மலைத்தொடராம்; கற்றுத் தேர்ந்த
கவிக்குடும்பம் அறிவியக்க மாகும்; தூய
பற்குடும்பம் முறுவலென முகப்பைக் காட்டும்;
பண்பார்ந்த மனைமக்கள் தம்மைக் கொண்ட
நற்குடும்பம் நாடேற்றும் கல்வி கேள்வி
நல்கிடுபல் கலைக்கழக மாகுங் கண்டீர்.

5. பாமரரைத் தோற்கடிக்கும் வண்ண மின்று
படித்தவர்கள் பலருள்ளார். பண்பு கெட்டுத்
தாமரையில் தண்ணீர்போல் தத்த ளித்துத்
தடம்விட்டே நடக்கின்றார்; அன்னார் கற்ற
தூமறையாம் இரண்டோடு நாலு மைந்தும்
தோற்கின்ற கல்விக்கே தூணாம் என்றால்
ஆமவர்கள் குடும்பத்தைஆலின் கீழே
அமைந்திட்ட சிறுபள்ளி என்றே சொல்வோம்!

6. கட்டுப்பா டுள்ளவனே தலைவன்; நெஞ்சில்
கனிவுமிக உடையவளே தலைவி; என்றும்
துட்டுக்கே அலையாமல் பெற்றோர் சொல்லைத்
தொடர்பவரே சரியான பிள்ளை; பற்றால்
ஒட்டியுற வாடுவதே சுற்றம்; நாளும்
உத்விடவே முனைவது நட்பு; யாரும்
வட்டித்தா எனக்கேட்டு வாரா வீடே
வளமான வாழ்வறிந்த குடும்ப மாகும்!

★

## சிதம்பர லிங்கம்

1\. ஆதிசிவன் அம்பாளின் அங்க மென்றே
அடியார்கள் நம்புகின்ற சிவலிங்கத்தை
நீதிநெறி பிறழ்ந்தவரும் சுற்றி வந்தே
நிம்மதியை வேண்டிதினம் வணங்கு கின்றார்;
ஏதிலரும் ஏழைகளும் கூட எண்ணி
எதிர்ப்பட்ட சிலைவணங்கிச் செல்லு மாப்போல்
நாதியற்ற நம்நாட்டின் விடுத லையை
நாடியவர் நினைவுளதோ நமது நெஞ்சில்?

2\. தன்னலத்தைப் பேணிடவும், தவறு செய்தால்
தண்டனைக்குத் தப்பிடவும் இறையை வேண்டிச்
சின்னமிட்டுச் சிவநாமம் முணுமு ணுத்தும்
சேவிக்கும் மாந்தரினம், உதைத்த மேலோர்
இன்னலினைக் கணமேனும் நினைத்துப் பார்க்க
எண்ணுவது மிலையிதனைச் சென்னை வந்தே
சென்றவர்கள் உணர்ந்திடலாம்; அரசுத்
தோட்டச்
செக்கிருக்கும் நிலையறிந்தே அழலாம் கண்டீர்!

3. அழகான கட்டடங்கள், ஆளை ஈர்க்கும்
அங்காடி, காட்சியகம், அமைச்சர், நெஞ்சில்
நிழலாடும் திரைமாந்தர், சதுக்கம், கோட்டம்
நீட்டாண்மைச் செயலகத்தைப் பார்க்கும்
மாந்தர்
உழவார அப்பர்போல் பொதுத்தொண் டாற்றி
உதைபட்ட சிதம்பரனார் இழுத்த செக்கைக்
குழலாடும் மாதர்கள் மாமி யாரைக்
குறிப்பாக ஒதுக்குதல்போல் ஒதுக்க லாமா?

4. சொத்துசுகம் இழந்திந்த நாட்டு மக்கள்,
சுதந்திரத்தை நுகர்ந்திடவே பாடு பட்டு
நித்தநித்தம் செத்தவர்கள் பலபேர்! வேர்வை
நிலம்நனைக்கச் செக்கிழுத்த செம்மல் நம்முன்
நித்திலமாம் சிதம்பரனார் இழுத்த செக்கை
நினைவாக வைத்துள்ளார் தோட்டந் தன்னில்
எத்தனைபேர் அதைச்சென்று பார்த்தார்? பார்க்கும்
ஏற்பாட்டைஎவர்செய்தார்? நன்றிகெட்டோம்!

5. வரலாற்று நினைவுகளைப் பிஞ்சு நெஞ்சில்;
வளர்க்காத கல்வியினால் என்ன நன்மை?
திரளாகக் காட்சிக்கும் விழாக்க ளுக்கும்
தேவையின்றிப் பிள்ளைகளை அழைத்துப்
போவோம்!
அரசாங்க விழாக்களிலும் ஆடவிட்டே
அரும்புகளை வாடவைப்போ மன்றிச்சான்றோர்
குரல்கேட்க வைப்போமா? கொள்கை பேணும்
குறிப்புரைக்கும் சான்றுகளைக் காட்டு வோமா?

★

## வேர்ப் புழுக்கள்

1. தேர்வுதனில் முதலிடத்தைப் பெண்கள் பெற்றே
திறமைதனை வெளிப்படுத்திப் பெருமை
கொண்டார்!

ஆர்வமுடன் தம்மக்கள் கல்விக் காக
ஆனதெலாம் செய்பெற்றோர் மகிழ்ந்த போதும்
வேர்விட்ட மரக்கிளையில் ஒன்று பட்டு
விளைந்ததொன் றெனும்நிலைமை காணும்
போது,

சோர்வுவரல் இயற்கைதான். இளைஞர் மட்டில்
ஏன்முதன்மை பெறுவதிலை? என்னவேண்டும்?

2. பொறுப்புணர்ச்சி இல்லாமை, பொழுதைப்
போக்கும்
புறவினையில் பெருநாட்டம், ஆசான் மாட்டுக்
குறும்புதனைச் செய்வதுடன் மதியாப் போக்கு,
கூட்டுறவில் பிழைசேர்க்கை, எதிர்கா லத்தில்
அறுவடைநாம் இதற்கெல்லாம் காண்போ மென்ற
அறிவின்மை, மாணவர்க்கே சொந்த மானால்
பெறுவதெங்கே முதலிடத்தை? கல்விக் கூடம்
பொழுதுபோக்கு மன்றமென எண்ண லாமா?

3. பெண்களைப்போல் பொறுப்புத்னை உணர்ந்தா
லன்றிப்
பிற்காலம் இளையோர்க்கு இருண்ட தாகும்!
கண்களெனக் கல்விதனைக் கருதா விட்டால்,
கணக்காயர் தமைப்பெரிதாய் மதியா விட்டால்,
விண்மீன்போல் மாணவர்கள் ஆவார்; பெண்கள்
விரிகதிராய், வெண்ணிலவாய்த் திகழ்வர்,
நாளை
உண்மையிலே அவர்கள்தாம் ஊராள் வார்கள்.
ஒழுக்கமிலா மாணவர்கள் உயரார் கண்டீர்!

4. ஆட்சியிலும் காட்சியிலும் மாண வர்க்கே
ஆர்வத்தை உண்டாக்கி விட்ட பின்னர்
மாட்சிபெற அவருழைக்கப் போவ தில்லை!
மதிநலத்தை நாடியவர் படிப்ப தெங்கே?
மீட்சிபெற வேண்டுமெனில் கல்விக் கூடம்
மிகக்கட்டுப் பாட்டுடனே இயங்க வேண்டும்!
காட்சியினர், ஆட்சியினர் அவரை ஈர்க்கும்
காரியத்தைக் கைவிடவோர் சட்டம் வேண்டும்!

5. தரந்தாழ்ந்தோம் மாணவர்நா மென்றே ஏங்கித்
தவிக்காத மனப்போக்கை மாற்றா விட்டால்,
நிரந்தரமாய் அவர்கீழே போவார்; பெண்கள்
நிமிருங்கா லிவர்குனிய நேரும்! கண்கள்
இரண்டுந்தாம் ஒளிபெறுதல் வேண்டும்; ஒன்றி
கிருண்டதெனில் எவர்க்குமது வருத்தந் தானே!
குரல்கெட்ட பின்பாட்டுப் பயிற்சி என்றால்
குறிகெட்டோ மெனும்பெயரே நிலைக்கு
மந்தோ!

□□

## மதுவுக்கு மரண மிலையோ?

அழுக்கு மேகம் அழுதால் பூமிப்
புழுக்கம் தணியும்; பூந்தளிர் துளிர்க்கும்!
அழுக்கா டைகள் அளிக்கும் வாக்கும்
கொழுக்கும் பதவியைக் கொடுக்கு மென்பதால்.
அழுக்கைச் சேர்க்கும் அவலக் குடியை
இழுத்து வைத்தே "இரு, எனச் சொல்வதோ?
குங்குமம் அழித்து மங்கள வாழ்த்தா?
தங்கம் கொடுத்தா வெண்கல மாற்றம்?
விதையே விற்றே வெண்ணெய் வாங்கும்
கதையைப் போலே கட்குடி பழதிக்
காசு சேர்க்கும் காரியம் நன்றோ?
ஏசு, புத்தர், மாசிலா காந்தி
படத்தை வணங்கிப் பாடம் மறப்பது,
குடத்தை உடைத்தபின் குடிநீர் பிடியெனும்
இரக்கம் போல்வதே எண்ணுக பெரியிர்!
பரம்பரை உயரப் பயன்படு மாயிது?
நஞ்சும் கஞ்சியும் நல்கிடும் கொள்கை
செஞ்செய லாமா? நெஞ்சில் நிலைக்குமா?
வேரைப் பறித்தபின் வேலி தேவையா?
ஊரை எறித்தபின் ஊர்வலம் போவதோ?
விதைக்கும் தீய விளைவை அறுக்க
சதைஎளும் பானோர் சாகா திருப்பரோ?
பிழையின் பலன்கள் பின்வரு வார்க்கென
இழைப்பதோ தவறு! ஏனிவண் மதுக்கடை?
மயக்கும் மதுதான் மரண மடைந்தால்
பயக்கும் நன்மை! பணியும் சிறக்குமே!

●●

## தன்னல மாந்தரே தமிழ்ப் போர்வை நீக்குக!

இறந்த நெருப்பாம் இதயத் தோரே!
கறந்த பசுவின் கால்பிணைப் போரே!
உடைந்த வீணையின் உதிரியைக் கூட்டிக்
கடைவிரிப் போரே! கதைபடைப் போரே!
ஏணி மழைமேல் ஏறி விண்ணொளிர்
தோணி நிலவைத் தொடநினைப் போரே!
திறந்த மார்பின் திரட்சியில் உலகை
மறந்து கிடக்கும் மதம்பிடித் தோரே!
இருப்புக் கணக்கில் இறப்பு கணக்கை
இருக்கும் வரையில் எண்ணா தோரே!
இன்றுமட்டுமே இருக்கும் நீங்கள்
என்று மிருக்கும் இயல்புள் ளோரை
எண்ண மறந்தீர்; என்றா லுங்களை
எண்ணிட எவர்தம் இதயம் விழையும்?
நெருப்புத் துண்டை நீட்டிக் கிளியை
அருகில் இழுக்க ஆவலா அந்தோ!
கோவைப் பழமும் கொள்ளித் துண்டும்
தீவைப் போரே! தீர்ப்பி லொன்றா?

ஏச்சு மேடையில் பேச்சுப் பிழைப்பில்
மூச்சாய் மொழியை முன்வைக் கின்றீர்!
குறுமுயல் வாலின் குஞ்சம் கொய்ய
அறுவடை வயலில் உறுபடை செலுத்துவீர்!
ஈச்சஞ் கொட்டை ஈர இதழின்
பேச்சில் அமுதும், பிடிகை உறுப்பில்
விழியிலை எண்ண வித்தினை ஊன்றிப்
பழிநிலை வளர்க்கும் பாவ மனமுள
ஓ ஓ! மானிடா உனக்கொரு செய்தி!
ஊ ஓ ஆமா? ஓடும் பொருளில்
நாட்டமும் ஈட்ட நரித்தன முயற்சியும்,
காட்டிக் கொடுக்கும் காரியம் நன்றோ?
யாப்பில் ஒற்றென மூப்பில் மாறும்
காப்பிலா வாழ்வில் கண்ணியக் குறைஏன்?
தன்னல உடலைத் தமிழ்ச்சொல் லங்கியால்
இன்றும் மறைந்தே ஏய்த்திட கலையும்
காலக் காற்றில் கோலங் கலையும்
ஞாலம் ஒருநாள் நியாயம் கேட்குமே!

●●

## வாகைக்கு வழி

1. பாளையிலே விடுகின்ற பிஞ்சி யாவும்
பருத்துக்காய் ஆவதில்லை; உதிர்த லுண்டு
சூளையிலே அடுக்கியகல் முற்றும் வெந்து
சுவராவ தில்லை; சில்வேகா மற்போம்
வாளைத் தொட்ட வீரரெலாம் வென்று காட்டி
வரலாறு படைத்ததிலை; உறுதி ஊக்கம்
வேளையறிந் தாற்றுவினை வென்ற போதும்
விரும்பாத தோல்விசில நேரம் வாய்க்கும்!

2. ஒருபோகம் பொய்த்ததென ஆய்ந்தொ துங்கி
ஒருபோதும் வேளாளன் சோர்வ தில்லை
ஒருநாளில் வியாபாரம் இல்லை என்றே
உளச்சோர்வு கொல்வதிலை வணிகன், நாளை
வரும்நேரம்; வரும்படிதான் என்றே நம்பி
வழக்கம்போல் பணிதொடர்வான் வளர்ச்சி காண்பான்;
வரும்தோல்வி தனைப்படியாய்க் கொண்டு வெற்றி
வரலாற்றை உருவாக்க உழைக்க வேண்டும்!

3. காற்றடித்துக் கூடுபிய்ந்து போன தென்றே
காகங்கள் கவலையினால் மாய்வ தில்லை!
ஆற்றலுண்டு தனைநம்பி மறுநாள் கூட்டை
அளவறிந்து கட்டிவிடும் பான்மை போலே
தோற்றவர்கள் மனத்தளர்ச்சி கொண்டி டாமல்
தொடர்ந்தும்போ ராடுவதைத் தொடர்தல் வேண்டும்
ஆற்றலுக்கும் வெற்றிக்கும் தொடர்புண் டானால்
அதுகூட பொய்ப்பதுண்டாம்; அறிக நெஞ்சே!

4. இலக்குதனை அடைவதற்குச் சோர்ந்தி டாமல்
இயங்குவதே வெற்றிக்கு வேரும், நீரும்!
கலக்கிவிடும் தோல்விதனை ஒதுக்கித் தள்ளிக்
காலெடுத்து முன்வைக்கும் துணிவு வேண்டும்!
நிலத்தடிநீர் மேற்கொணரும் முயற்சி போலே
நினைந்துழைத்தால் வெற்றிதனை ஈட்டக்கூடும்
இலவங்காய் தனைமுட்கள் காப்ப தில்லை
இடர்தோல்வி, வாகைக்கு வேலி யாமோ?

5. உடையழுக்கை அடித்துவெளுப் பதுபோல் தோல்வி
உண்டானால் உழைப்பாலே மாற்ற வேண்டும்!
அடைகாக்கும் பெட்டைகளும் குஞ்சைக் காக்க
ஆண்மையுடன் போராடும்; இலக்கை எய்தத்
தடையெதுவோ அதைத்தவிர்க்க முனைக! என்றும்
தகாவழியில் செல்லாதீர், தவறு செய்தே
அடைகின்ற வெற்றியினும் தோல்வி மேலாம்!
அதனாலே நெறிநின்றே போரா டுங்கள்!

●●

# பழுதை விதைக்காதீர்

1. நெல்விளையும் நஞ்சையிலே நெருக்க மாக
நீண்டுயர்ந்தே புல்வளரும் தன்மை போலே,
பல்வளரும் பிள்ளைக்குப் பாலர் பள்ளி,
பட்டிதொட்டி எல்லாமே பல்கக் கண்டோம்;
அல்வளரும் ஆசையதன் அறுவ டைக்கே
அறிவூட்டும் எண்ணத்தை விடவும், அன்னார்
இல்லிருந்தால் தொல்லையென எண்ணும் மாதர்
இங்கனுப்பி ஆங்கிலத்தைக் கற்கச் செய்வார்!

2. காசடிக்கும் பெருந்தொழிலாய்க் கல்வி தன்னைக்
கருதுநிலை வந்தபின்னர் இந்த நாட்டில்
மோசடிகள் வளரத்தான் செய்யும்; நேர்மை
முளைவிடத்தான் இடமுண்டோ வேறு?
பிள்ளைப்
பாசத்தைத் தமிழ்வழியே பெறமாட் டாத
பெற்றோரைத் தாங்குகின்ற தமிழ் மண்ணில்
கூசத்தான் வேண்டும்நாம் பிறந்த தற்கே
குழந்தைக்குத் தாய்மொழியில்
புகட்டாப் போது!

3. காலுறையும் கழுத்திலொரு பட்டைக் கட்டிக்
கவர்கின்ற வண்ணத்தில் ஏடுந் தூக்கி,
நாலெழுத்துப் படிப்பதற்குக் குழந்தை சென்றால்,
நம்மவர்க்கு மிகப்பெருமை! அடடா! வீட்டில்
பாலிருக்கப் பசுவிருக்கத் தென்னங் கள்ளைப்
பாலகர்க்கே ஊட்டுவதா பெருமை? இந்த
மாவிருக்கும் வரைக்கும்நாம் வளர்வ தேது?
மங்கிவரும் தமிழுணர்வைத் தூண்ட லென்றோ?

4. ஆங்கிலத்தைப் படிக்காத சப்பான் பிள்ளை
அறிவின்றி ஆக்கமின்றி தவிப்ப தாக
ஈங்குள்ளோர் எண்ணிடத்தான் கூடுங் கொல்லோ?
எவரவர்போல் முன்னேற்றங் கண்டார் பாரில்?
தூங்கிக்கொண் டிருப்போர்க்கிங் காங்கி லந்தான்
தூக்கிவந்தா கொடுத்துவிடும் அறிவாக் கத்தை?
ஏங்குவதும் அறிவுக்கே என்றால் நம்மின்
இயற்றமிழே அதைக்கொடுக்கக் கூடுங் கண்டீர்!

5. இனவுணர்வும் மொழியுணர்வும் இளமைக் கல்வி
ஏற்படுத்தும் உயர்பண்பாம்; இதையெண்
ணாமல்,

அனலருகே மலர்வைத்தே அழகு பார்க்கும்
அறியாமை தனிலுழலும் பெற்றோ ரெல்லாம்.
தனவந்தர் பிள்ளைக்கு நிகர்நா மென்னும்
தவறான போலிமைக்கே இரையா னாற்போல்
மனம்போன போக்கிலவர் பிள்ளை நெஞ்சில்
மாசடையும் செயல்நேர்ந்தார்; மாற்ற
லென்றோ?

6. அம்மைநோய் போலெங்கும் பாலர் பள்ளி!
அருந்தமிழுக் கெதிரான அணிவ குப்பு.
பொம்மைகளைக் கொலுவைத்துப் பார்ப்ப
தைப்போல்
பொறுப்பின்றிச் சிறப்பென்றே அதில்சேர்க்
கின்றோம்;
செம்பவளம் தனையொதுக்கிச் செங்கற் சில்லைச்
சேர்க்கின்ற செயலிதனை ஒடுக்க வேண்டும்;
தும்மலுக்கும் தடைபோடத் தயங்கா ஆட்சி.
தவறிதனைத் தடுக்காது தூங்க லாமோ?

□□

## சிந்தனையும் செயலும்

சிந்தனைத் தெளிவிருந்தால்,
செயலினில் வலிவி ருக்கும்;
வெந்ததை உண்டால் தானே
வேறிடர் விலகி நிற்கும்?
தந்தியை வென்றால் தானே
தந்தமும் கிடைக்கும்; என்றும்
புந்தியைத் துலக்கி னாலே
புதுமைகள் விளையும் நாட்டில்!

பொற்றொடி ஆசை நெஞ்சில்
புகுந்திட விட்ட பின்னர்
நெற்றியில் குறியைத் தீட்டி
நிட்டயி லமர்ந்தா லென்ன?
பற்றுடன் பறந்தா போகும்?
பனியிலா நெருப்புப் பற்றும்?
வெற்றுரை பாவ னையால்
விளையுமா நாட்டில் தூய்மை?

பொருள் வழி ஆசை வைத்தோர்!
பொதுநலத் தொண்ட ராகார்!
மருண்டிடும் மனத்தர் வெற்றி
மழையிலே நனைய மாட்டார்!
இருள்வழி தேர்ந்தார் மாட்டோ
இன்னலே துணையாய் நிற்கும்!
கருவிலே வளர்ந்த பண்பே
கருத்தினில் நிலைக்குங் கண்டீர்!

அறிவியல் ஆக்கம் தாக்க
அணுவெடி ஒன்றே போதும்!
பொறியியல் புதுமை வீழ்த்தப்
பொறுப்பில்லார் இயக்கம் போதும்!
நெறிகளை அழிப் பதற்கு
நிலவிடும் கட்சி போதும்!
குறியிலா மக்கள் போதும்
குறையிவண் மலிவ தற்கே!

காப்பிலாத் தோட்டம், நுண்மை
கற்றிடார் ஆட்டம்; கல்வி
மூப்பிலார் தேட்டம் நேர்மை
முனைப்பிலார்த் தலைமை, தேர்ந்தால்
நாப்பழு தானோர் பேச்சை
நயந்தவ ராவோம்; நாட்டை
ஆப்பமாய் எண்ணு மாட்கள்
அறிமுகம் விடுதல் வேண்டும்

●●

## வீரம்

அரையடி நிலத்திற் காக
    அடிதடி செய்யு மாளும்,
அரையடி உறவுக் காக
    அடுதுயர் எதிர்கொள் வாரும்,
அரையிடர் நீக்க வேண்டி
    அறநெறி பிறழு வாரும்
அரையெனக் கருத லன்றி
    அவர்வினை வீர மாமோ?

எச்சிலால் ஈரம் செய்தா
    ஏக்கரில் விளைச்சல் கூடும்?
மொச்சிலால் தூற்றித் தானா
    மூட்டைகள் வண்டி ஏறும்?
கொச்சைகள் கூடி வந்தா
    குறளினை நூலாய் மாறும்?
மொச்சைமுந் திரியா யாமோ?
    முரடரா வீர ராவார்?

---

அரை = பாதி; இடை; வயிறு; அடிமரம் = முண்டம்

தன்னல மெண்ணி டாது,
தகுநெறி பிறழ்ந்தி டாது,
பின்னலில் கூந்தல் போலே
பிணைப்பினை அறுத்தி டாது,
சன்னதில் ஆசை வைத்துச்
சஞ்சலங் கொண்டி டாது,
மன்னிய கொள்கைக் காக
மரிப்பவன் வீர னாவான்.

நாட்டையே உயிரின் மேலாய்
நத்திடும் நல்லார் வீரர்!
வீட்டையே மறந்து, தொண்டால்
வேதனை பட்டோர் வீரா!
கேட்டையே கண்டொ துங்கிக்
கிடந்திடார் வீரர்; தீயர்
பேட்டையில் வாழ்ந்த போதும்
பிழைபுரி யாதோர் வீரர்!

5. அறத்தினைப் பேணித் துன்பம்
அனுபவித் திடுவோர் வீரர்!
மறத்திலும் கருணை காட்டும்
மனவளங் கொண்டோர் வீரர்!
துறத்தலின் தூய்மை பேணித்
துய்த்திட மறுப்பார் வீரர்!
நிறத்தினால் பேதங் காணா
நெஞ்சினர் வீர ராவார்!

6. பரத்தையர் பக்கம் பார்வை
பதித்திடாத் தூய்மை வீரம்
தரத்தினைத் தாழ்த்தி டாத
தகைமைசொற் காத்தல் வீரம்!
வரத்தினில் ஆர்வங் காட்டி
வழிபிழை யாமை வீரம்!
உரத்தினில் குன்றி டாமல்
உண்மைபால் நிற்றல் வீரம்!

7. எதிர்த்திடார் தம்மைத் தாக்கல்
எவ்வழி வீர மாகும்?
எதிர்வரா தொளிந்து கீழ்மை
இயற்றுதல் துரோக மாகும்!
கதிர்விடாப் பயிர றுத்தா
களஞ்சியம் நிரம்பக் கூடும்?
எதிர்ப்பென எளியர்க் கின்னல்
இயற்றுதல் வீர மன்றே!

## மங்கள முகாரி

சல்லிக்கு மானத்தைச் சந்தியிலே விற்பவர்கள்
முல்லை தனைமுகர முன்பணந்தான் கேட்கின்றார்;
மான உணர்வுதனை மங்கவிட்ட ஆட்களிடம்
ஈன உணர்வே இடம்பிடிக்க முந்திவரும்!
தன்னுழைப்பில் வாழத் தகுதி இலார்க்கிங்கே
இன்புறரும் இல்லறத்தில் இச்சை எதற்கய்யா?
உள்ளாடை தொட்டும் உலாவா கனமீறாய்
எள்ளி நகைக்க இரக்கின்ற ஆடவாக்(கு)
ஆண்மை தனைவிற்றிங் காதாயம் தேடுகின்ற
மாண்பிலார்க் கேனோ மகட்கொடையும் மற்றவையும்?
ஆடவர்க்கு நாளும் ஆடையிலா மெய்யளிக்கும்
கூடல் மகளிர்க்கோக் கொச்சையாய் வேசிபட்டம்
மொத்தமாய்த் தன்னையே முன்வந்து விற்றுவிடும்
எத்தர்க்கேன் மாப்பிள்ளை என்னும் உயர்பட்டம்?
தன்னையே விற்பவர்கள் தாரத்தைக் காப்பாரோ?
பொன்வரவை முன்வைத்துப் பெண்வரவை நாடுபவர்
நெஞ்சுறவைப் பேணி நினைப்பதெங்கே பின்நாளில்?
பஞ்சுப் பொதியடுக்கிப் பட்டறைக்குக் காப்பென்றால்

அல்லிக் கெருமைகளே அத்தான் எனவாகும்?
வல்லிக்கு வெள்ளாடே வாழ்க்கைத் துணையாகும்!
பண்புயர்வை விட்டுப் பணக்கணக்குப் பார்ப்பவர்க்குப்
பெண்தந்த பின்னரிவண் பேச அறமுண்டா?
பெற்றவளின் தூண்டுதலே பேசுங் கொடுமைகளுக்
குற்றமுதற் காரணமாம்; உண்மைதான், ஊரெங்கும்
பேசுகின்ற பேரத்தின் பின்னிருந் தாட்டுபவர்
ஆசுமன அம்மாக்கள், அக்காமார் தங்கைமார்
பெண்ணின் கொடுமைக்குப் பெண்ணினமே மூலமெனில்
எண்ணி வியப்பதற்கோ என்னவுண்டு பூவுலகில்?
வான்பார்க்கும் எண்ண வளமிருந்தால் தாய்க்குலந்தான்
தான் பெற்ற துன்பத்தைத் தந்தா மருமகளை
வாவென் றழைப்பார்கள் வாழ்வின் முதற்படிக்கு?
காவென்று வந்தவளைக் கண்ணீரில் ஆழ்த்துவதோ?
இல்லை பெருந்தன்மை ஏராள மானவர்க்கு!
இல்லை மனவுறுதி இங்குள்ள பெண்களுக்கும்!
காசுக்குக் கைப்பிடிக்கும் காளையர்க்கு மாலையிடக்
கூசும்நாள் வந்தால் குறையொழியு மன்றியிவண்
வெற்றுரைகள், சட்டங்கள், விம்மல் அழுகைகள்
முற்றும் மணத்தரகின் மூலவேர் கொய்யாவே!
எல்லோரும் பேசுகிறோம் என்றாலும் இக்குறைதான்
இல்லாத வீட்டி லிருப்பவர்கள் எத்தனைபேர்?
பெற்றோரும் பிள்ளைகளும் பேசும் மனக்கொடையைச்
செற்றமென எண்ணுவ தென்று?

●●

## யாரடா கவிஞ னிங்கே?

அறிவாற்றல் மிக்கவரை அறிந்து போற்றும்
ஆர்வமிலாத் தமிழகத்தில் பிறந்த தாலே
செறிவான புலமையுடன் திறமை பெற்றோர்
சிந்தையிலே பிழையெண்ணம் நுழைய லாச்சு!
முறியாத வேலெறிந்து வேழம் வீழ்த்த
முயலாமல் முள்ளெடுக்க முனைய லாமா?
அறியாமை வளர்ப்பதிலே தங்கள் பங்கை
ஆற்றிடவோ படத்துறைக்குக் கவிஞர்போனார்?

பெருமிதத்தில் நிமிர்கின்ற கவிஞ னென்றும்
பிழைப் பெண்ணிப் பேடிகளை நத்தான் நாளும்
வரும்போகும் செல்வத்தைப் பொருட்டாய் எண்ணி
வரலாற்றில் புழுதிபடப் பொறுக்க மாட்டான்.
இரும்பில்தான் துருப்பிடிக்கு மன்றித் தங்கம்
என்றேனும் துருப்பிடித்தே உலுத்த துண்டா?
எருமைகளும் பசுவினமும் ஒன்றா? நாட்டில்
எழுதுபவன் எல்லாமே கவிஞன் தானா?

விளம்பரத்தைப் புகழென்று நம்பு மாட்கள்
விபரீத ஆசைகளில் திளைக்கின் றார்கள்!
களமடிக்கக் கதிர்வரவைக் கருதல் விட்டுக்
கற்றாழைக் கட்டுவரக் களிக்க லாமா?
குளம்புள்ள தெல்லாமே குதிரை என்று
குருடுகளும் நம்பாத காலந் தன்னில்
விளம்பரத்தில் பூரிக்கும் கவிஞர் கட்கு
விளக்கந்தான் தேவையெனில் காலம்சொல்லும்?

4. படத்துக்குப் பாட்டெழுதித் தானா நம்மின்
பாரதியை புகழ்வந்து தேடிற் றிங்கே?
குடந்தளும்பும் நீருறித் தானா பூமி,
குளிர்ந்தூற்றுப் பெருக்கெடுக்கும்? அடடா
தேரின்
வடம்பெருத்த தானாலும் தாலி நூலே
வாழ்த்துக்கிங் குரித்தாகும். ஊர றிந்த
படக்கவிஞர் பலர்மறக்கப் பட்ட தன்றிப்
பாவியங்கள் படைத்தாரை மறந்தா போனோம்?

6. தரங்கெட்டோர் தமையண்டி வாய்ப்புக் கேட்டுத்
தவங்கிடக்கும் காரணத்தால் ஊனமுற்றே
உரங்கெட்ட வேங்கைதனை ஊன நாய்கள்
ஒறுப்பதற்குத் துணிதல்போல் எள்ளு கின்றார்!
பரலற்ற சிலம்புதனைப் பார்த்துச் சொத்தைப்
பல்லிளிக்கும் கொடுக்காய்போல் ஆடுங் கூட்டம்
சிரம்கொய்த சேவலெனக் குதிக்கக் கண்டும்
சினங்கொல்லான் கவிஞனெனில்வெட்கந் தானே?

●●

# II

# மறதியின் மறுபக்கம்

# தேசீயத்தில் தமிழ்

## மூக்கண்ணாச்சாரியின் முதல் முயற்சி

1. பரங்கிய ராண்ட போது
   பயின்றிடும் மொழியாய்ப் பள்ளி
அரங்கினில் ஆங்கி லத்தை
   ஆக்கினர், அதனை ஏற்றுப்
புரந்தனர் பார தத்தார்
   புகுந்தது மொழியா திக்கம்!
நிரந்தர அடிமைச் சின்னம்
   நெஞ்சுளே அச்சா யிற்றே!

2. இனத்தினால் தமிழ ரானோர்
   ஏறினார் மேடை என்றால்
புனலென ஆங்கி லத்தில்
   பொழிவதே அந்நாள் மாண்பு!
இனவுணர் வில்லா ரன்றே
   இந்திய நாடு முற்றும்
கனங்களாய்த் திகழ்ந்த தாலே
   கட்சியில் பெரியோ ரானார்!

3. பேராயக் கட்சிக் கூட்டப்
பேச்செலாம் ஆங்கி லத்தில்
வாராதாம் தமிழில் பேச்சு
வரிசைகள் பெற்றோர்க் கன்று!
நீராடும் தமிழ கத்தில்
நெற்றியுள் அழுக்கைச் சேர்த்தோர்
கூரான ஆயுதம் போல்
கொண்டனர் ஆங்கி லத்தை!

4. காங்கிர சாரின் மேடை
களப்பிரர் ஆட்சி போலே!
வீங்கிய யானைக் காலாய்
விளங்கிய தன்று! பேச்சை
ஆங்கிலம் ஆண்ட தாலே
அம்மொழி அறியார் பேதை!
ஈங்கிவர் இயக்கம் ஏழை
எவரையு மீர்க்க வில்லை!

5. படித்தவர், பட்டம் பெற்றோர்
பாங்குடன் வளர்த்த கட்சி
அடித்தள மக்கள் தேவை
அறிந்திடா திருந்த காலம்!
வெடித்திடும் புரட்சி எண்ணம்
வேர்விடா எண்பத் தேழில் [1887]
நடித்தவர் ஆளும் நாட்டின்
நகரிலோர் மாநா டன்று!

6. ஆங்கில மறியா தோரும்
அழைத்திடப் பெற்ற பற்றி
சங்கிதே பெற்ற தென்றால்
இதுவொரு சிறப்புத் தானே?
காங்கிரஸ் மாநாட் டுள்ளே
கைவினைக் கலைஞர் சார்பில்
பாங்குடன் நுழைந்தார் தஞ்சைப்
பகுதிமூக் கண்ணாச் சாரி!

7. பண்ணாடை நரம்பைப் போலே
பஞ்சைகள் எலும்பு தோன்ற
விண்ணாளும் பிறைவ யிற்றால்
வேதனைப் பட்ட ஏழை
கண்ணீரைத் துடைப்ப தற்குக்
கனத்தொழில் உதவு மென்று
கண்ணீரே விவசா யத்தால்
கண்டவர் களிக்கச் சொன்னார்!

8. கரும்பெனத் தமிழில் பேசக்
கற்றவர், உலோக நீக்ரோ
இரும்பினை விற்று வாழ்ந்த
இவர்நக ரவையின் அங்கம்!
தரும்படி கேட்கும் பட்டம்
தன்பணித் திறத்தைக் கண்டே
வரும்படி வாழ்ந்து காட்டி
வளர்ந்தவர் இயக்கத் தொண்டர்!

9. ""ஒருசிலர் பதவி பெற்றால்
உயருமா நாடு? ஏற்றம்
வருவது தொழிலா லிங்கே
வளர்ச்சியை அதிலே காண்போம்!
கருவிழி பழுதாய்ப் போனால்
காட்சியால் பயனுண் டாமோ?
வரும்படி தொழிலுக் கெங்கும்
வளர்பொருட் காட்சி காண்போம்!''

10. அருமையாய்த் தீர்மா னத்தை
அலசியே உரையாற் றிட்ட
திருமூக் கண்ணாச் சாரி
தெளிபொரு ளுரையைக் கேட்டோர்
உருவிலாத் திரையில் பின்னர்
ஓவியம் கண்டாற் போலே
மருவிலா உரையீ தென்றே
மகிழ்ந்துமே புகழ லானார்!

11. பொருட்டெளி வோடு பேச
புகழ் தமிழ் உதவு மென்றே
மருட்டிய ஆங்கி லத்தார்
மயக்கமே தெளியச் செய்தார்!
இருட்டிலே ஊசி தேடி
எடுப்பதே தமிழ்ப்பேச் சென்ற
குருட்டினைக் களைந்தார் சாரி!
குலமொழிக் குயர்வே தந்தார்!

12. பேராயக் கட்சி கண்ட
பெருமைகொள் மாநாட் டில்தன்
கூரான வாதந் தன்னைக்
குளிர்தமிழ் மொழியில் வைத்த
சீராளர்; முதல்வ ரென்ற
சிறப்பினைச் சிலர்ம றைத்தார்!
பேராளர் வரிசையெ ழுத்தில்
பெருமையைக் குறித்துள் ளாரே!

13. முதற்றமிழ்க் குரல் கொடுத்த
மூக்கண்ணாச் சாரி பேரை
இதமுற எடுத்தி யம்பி
இங்கொரு சிலைவைத் திட்டால்
பதவியால் பெருமை பெற்ற
பதர்களின் நினைவு நீங்கி
சுதந்திரம் பெற்ற காட்சி
சொற்றமிழ்ப் பற்றுத் தேர்வார்!

●●●

## இலக்கிய ஏடு-அரசியல் அலையில் வ. உ. சி

1. கப்பலை ஓட்டிக் கோடிக்
    கணக்கிலாப் பொருளைச் சேர்த்தாய்?
அப்பழுக் கில்லாத் தொண்டால்
    ஆளுநர் பொறுப்பா ஏற்றாய்?
ஒப்பிலா தியாகந் தன்னை
    உணர்ந்தவர் அருகும் போதிங்
கெப்படி ஐயா மக்கள்
    இன்றுனை நினைத்துப் பார்ப்பார்?

2. ஈட்டிய பொருளை யெல்லாம்
    இழந்தனை தேசத் தொண்டில்!
வாட்டிய வறுமை யோடு
    வாழ்ந்தனை இறுதி நாளில்!
ஏட்டிலே நிலைத்த போதும்
    எவருனை நினைக்கின் றார்கள்?
ஊட்டிய கன்றைப் போலே
    உறவினை மறந்தார் மாந்தர்!

3. சொத்தெலாம் இழந்தாய்; வாழ்க்கைச்
சுகமெலாம் துறந்தாய்; கொள்கைப்
பத்திய மிருந்து மேனி
பதறிடும் தொல்லைப் பட்டாய்;
சுத்தியல் கொத்தும் போதும்
சுடர்தரும் பொன்னைப் போலே
அத்த! நீ வறுமைக் குன்னை
அளித்துமே செம்மை காத்தாய்!

4. பதவியின் படிக்கட் டென்றே
பலரிவண் தொண்டு செய்வார்!
உதவியின் கிடைக்கு மென்றே
உயர்த்துவர் அவரைக் கீழோர்!
சுதவினைச் சாத்தி விட்டுக்
கர்ணனின் கதையைச் சொல்லும்
இதமுற வாளர் நாட்டில்
இரவி நீ! கறுப்பாய்ப் போனாய்!

5. உதையடி பாட்டாய் நாட்டின்
உரிமையை மீட்க வேண்டி;
சதையிலே பற்று வைத்தோர்
சந்தன விசிறி யுன்னைச்
சிதையிலே வீசி விட்டார்,
செயல்நலன் மறந்து விட்டார்;
விதையுனை வேக வைத்தோர்
விளம்பரம் மட்டில் செய்தார்!

6. சராயுள் தண்ட னைக்கே
இலக்கிய மான நீயோ
தீராத ஆவ லுந்தத்
தேசீயம் வளர்க்கப் பார்த்தாய்!
வாராத சுதந்தி ரத்தை
வாழ்விலே காண வேண்டிச்
சோராம லுதைத்த நீயோ
சொற்றமிழ் ஒற்றாய்ப் போனாய்!

7. அஞ்சிடா திலக ருக்கும்
அணுக்கமாய் ஆன நீயோ
கெஞ்சுத லறியாய்ப் பண்பால்
கிழக்கெனச் சிவந்து நின்றாய்
கஞ்சியில் உப்பைப் போல
கரைந்தவுன் வாழ்வை எண்ணித்
துஞ்சிட மறந்தே னுன்றன்
தொண்டுமுன் இமாமும் தெங்கே!

8. புழுக்களின் தியாகத் தாலே
பொலிவுறும் பட்டைப் பெற்றோம்!
அழுக்குநேர் மேகம் மோதி
அழுவதால் நீரைப் பெற்றோம்!
எழுத்தினில் எண்ணம் ஏற
இலக்கிய நூலைப் பெற்றோம்
இழுத்தனை செக்கை யன்று;
என்பதால் ஆட்சி பெற்றோம்!

9. நீபிறர் வாழ வாழ்ந்த
நெறியினால் வான மானாய்!
நீபிறந் திட்ட மண்ணை
நினைத்ததால் இசையே யானாய்!
நீபிறர் ஆட்சி தன்னை
நீக்கிட முனைந்த தாலே,
நீபிறந் திட்ட நாட்டின்
நெற்றியில் திலக மானாய்!

10. கோடியில் ஒருவ னுன்னைக்
கும்பிடக் கோயில் வேண்டும்!
கோடியில் உன்னை வைக்கும்
குடிலரை ஒறுக்க வேண்டும்!
ஆடியில் கீறல் போன்ற
அரசியல் பேடிக் கூட்டம்,
வாடிய உனைம றந்தே
வாழுநாள் குறைய வேண்டும்!

●●

## பிரிட்டனை மிரட்டிய பீரங்கி

## (எம்டன் செண்பகராமப்பிள்ளை)

1. கூடாரம் கொண்டுவந்த வெள்ளைக் காரர்
 கூடுமிடம் தனில்வணிகம் செய்தல்விட்டு,
நாடாளத் திட்டமிட்டு நம்முன் னோரின்
 நயத்தக்க குணக்குறையால் பகையை ஊக்கி,
ஆடாக்கி மோதவிட்டே, அவர்கள் சிந்த
 ஆறான குருதிதனைக் குடித்த பின்னர்,
ஓடளித்தும் ஓடவிட்டும், சிறைப்பி டித்தும்
 ஒண்டவந்தோர் ஊராளத் தொடங்கி னாரே!

2. கண்ணாடி விற்கவந்தோர் கையில், நம்மின்
 காவலர்கள் நாடுதனைப் பறிகொ டுத்தே,
பண்மிழற்றும் யாழெடுத்தே வேலி கட்டிப்
 பன்றிக்குக் காப்பளித்தார் பார தத்தார்!
சுண்ணத்தை வெற்றிலையில் தடவா தேனோ
 சுகமென்றே நெற்றியிலே தீட்டிக் கொண்டார்!
எண்ணத்தி லழுக்காறு; எனவே வெள்ளை
 எலிகளைத்தம் குதிருக்குள் நுழைய விட்டார்!

4. தாள்பிடித்துக் கூடாரம் போட்டுக் கொண்டு
தம்வணிகத் தொழிலதனைத் தள்ளி வைத்தே,
ஆள்பிடித்தார்; ஆண்டவர்க்கே உதவும் பாங்கில்
அவர்நாட்டைக் கைப்பற்றிக் கொடிநட்
டார்கள்;
தோள்கனத்த நம்மவர்கள் பொறாமை என்னும்
தோணியிலே ஏறியதால் கவிழ்ந்து போனார்;
தேள்பிடித்தே அங்கிக்குள் விட்டுக் கொண்டு,
தேகசுகம் காண்பாரோ? முனைந்தார்
முன்னோர்!

4. நெய்விளக்கை அணைத்துப்பின் ஏட்டை ஆய
நெடிசுருட்டின் ஒளிதேடிப் போவார் போலே,
பொய்விரித்த வெள்ளையரின் சதிக்கா ளாகிப்
புரவலர்கள் இரவலராய்ப் போனார் மாறி!
செய்வினையின் தரம்மறந்து சீற்ற மொன்றே
சிறப்பென்ற செருக்காலே மாற்றான் கையில்
எய்கின்ற அம்பாகத் தாமே மாறி
இனங்கெடுத்தே எதிரிக்கும் ஏற்றந் தந்தார்!

5. பண்டாண்ட நம்முன்னோர் விதைத்த கேட்டைப்
பலவின்னல் பட்டறுக்க நேர்ந்ததென்னே!
வண்டுண்ட மாங்கொட்டை தன்னை நட்டே
வருந்தியேநீர் பாய்ச்சிடுவார் போலே, இங்கே
ஒண்டவந்த வெள்ளையரைக் கோட்டைக் குள்ளே
உட்கார விட்டதனால் மண்ணின் மைந்தர்
புண்பட்டார்; போராடிச் சிறையும் பட்டார்;
புழுவாகி மாற்றான்கால் மிதியும் பட்டார்!

6. மண்ணுக்குச் சொந்தம்நாம், மாற்றான் நம்மை
மருட்டிடவும் விடுவதுவோ? என்றே எண்ணிக்
கண்ணியிலே பட்ட இளஞ் சிங்கம் சீறிக்
காடதிர முழங்கியது போலே தெற்கில்,
எண்ணியதோர் இளநெஞ்சம்; விஞ்ஞானத்தில்
இயங்குகிற போர்க்கலையில் தேர்ந்த டாக்டர்
செண்பகராமப் பிள்ளை என்னும் வீரர்
சாதனையை நினைத்தாலே சக்தி கூடும்!

7. உள்ளத்தில் விடுதலையின் வேட்கை யோடே
உலகெங்கும் வாழ்ந்திட்ட இந்நாட் டாரை,
வெள்ளத்தில் கலக்கின்ற ஓடை நீர்போல்
விழுந்திணையச் செய்தமைத்த இராணு வத்தின்,
வெள்ளிநிலா 'செண்பகராம்'! விண்மீன் போன்ற
வீரர்க்குப் பயிற்சியெலாம் தந்தார்; ஆண்ட
வெள்ளையர்க்குக் கொள்ளியென ஆன பிள்ளை,
விடுதலைப்போர் முதற்சேனைத் தலைவ
ராவார்!

8. சண்பகரா மப்பிள்ளை அமைத்த சேனை
சமருக்கு வாங்கிய போர்க்கப்பல் எம்டன்
வெண்கமுகை ஒத்தவரின் அரணை மீறி
இயக்கிவந்த நீர்மூழ்கிக் கப்பல் அன்று
கண்ணுயர்த்திக் கண்டிட்ட நீதி மன்றக்
கட்டடத்தைச் சென்னையிலே தகர்த்த தோடே
எண்ணெய்க்கி டங்குகளை எரிய விட்டே
இந்நாட்டார் உறக்கத்தைக் கலைத்துச்
சென்றார்!

9. தாய்நாட்டின் விடுதலையில் தாகம் கொண்டு,
தக்காரின் துணைநாடி நாடு சுற்றி,
ஓய்வின்றி உழைத்திட்டார்: காபூல் தன்னில்
ஏரரசை இவர் நிறுவிக் கொண்டார்; ஈன்ற
தாய்நாட்டின் தளை நொறுக்க என்றே ஆட்சித்
தளமமைத்து வெளியுறவுக் கமைச்ச ராகிக்
காய்விடுத்துக் கனிகொய்யக் காத்திருந்தார்;
கப்பலிலே ஆயுதமும் அனுப்பி வைத்தார்!

10 துணிவான முயற்சிக்குத் தோல்வி முன்னம்
துணைபோகு மென்பதுபோ லந்தக் கப்பல்
பிணியாக ஈண்டிருந்த பிரிட்டிஷ் காரர்
பிடிக்குள்ளே சிக்கியது, செர்மன் நாடும்
பணிந்திடுமோர் தோல்விதனைக் கண்ட தாலே,
பயனற்றுப் போனதிவர் முயற்சி! ஆனால்
அணில்கடிக்கா அஞ்சிவிழும் ஆலும் வேலும்?
அதைப் போலே தோல்வியிலும் நிமிர்ந்தே
நின்றார்!

11 நேருவுக்கும் அவர்தந்தை தனக்கும் பிள்ளை
நிகழ்வுக்கே அறிவுரைகள் சொன்ன துண்டாம்!
மேருவென நெஞ்சுயர்த்தி மிடுக்கோ டன்று
மீண்டுமொரு படைதிரட்டி வாகை கண்ட
சீருடைய சுபாசிவரைக் கண்டு பேசிச்
செயல்பட்ட துண்டென்றால் பிள்ளைச் சீரை
ஊருணர உரைவேறு வேண்டுங் கொல்லோ?
உப்புண்போர் இவர்பெயரை மறக்க லாமோ?

12 வெற்றிமுகம் கண்டிருந்த பிரிட்டனுக்கு
வேண்டியவர் போல்காட்ட, செர்மன் நாட்டில்
பற்றுடனே பாரதத்தின் விடுதலைக்குப்
பாடுபட்டோர் தமைத்தாழ்த்திப் பேச்ச
விழ்த்தான்
குற்றத்தை நெஞ்சுக்குள் குடிவைத் தன்று
கொடுங்கோன்மை புரிந்திட்டார் இட்லர்!
பிள்ளை
தெற்றெனவே இட்லரது கீழ்மைப் பேச்சைத்
தேயமதில் சாடியுரை நிகழ்த்தி வென்றார்!

13 செண்பகனார் உரைகேட்ட செர்மன் மக்கள்
சிந்திக்கத் தலைப்பட்டார்; இட்லர் பேச்சைப்
பண்ணறியான் பாட்டைப்போல் ஒதுக்கி விட்டுப்
பண்புடனே இந்தியரை ஆத ரித்தார்;
விண்ணெரியும் விளக்கணைக்க விழைந்து தோற்ற
விட்டிலென இட்லருந்தான் பணிந்து வந்தே,
செண்பகனார் மன்னிப்பைக் கோரிப் பெற்றான்;
செயலிதனைச் சரித்திரங்கள் மறைப்ப துண்டு!

14. பிறநாட்டுக் கலமெதிலும் பயணம் செய்து,
பெற்றளித்த தாய்நாட்டிற் கேடே னென்றன்
மறக்குலத்தோர் விடுகின்ற நாவாய் வந்தால்,
மண்மிதிக்க நான்வருவே னென்றார், பிள்ளை
இறவாத புகழுக்குப் பெயரைத் தந்தே
இன்னுயிரை விடும்வரையில் இந்தி யாவின்
சிற கொடிந்த நிலைமாற வில்லை; பிள்ளை
செர்மனியில் தன்னுடலை தீக்க ளித்தார்!

15. கடுமுழைப்பும், கலங்காத நெஞ்சும், நாட்டின்
கறைகழுவும் போராட்ட முனைப்பும், கொண்ட
தடுமாற்ற மில்லாத தலைவர்; பிள்ளை
தானியக்கி வந்தகலன் எம்டன் மூலம்
வடுச்செய்து வெள்ளையர்க்கே அச்சந் தந்த
வரலாற்று நாயகனின் சாம்பல் தன்னை
விடுதலைக்குப் பின்'டில்லி' கப்பல் மூலம்
விழைந்தெடுத்து வந்திங்கே நன்றி சொன்னோம்

□□□

## தழும்பில் பழுத்த தமிழ்க் கனி ஜமதக்னி

1. நிழல்களே சுட்ட நாளில்
நெருப்பிலே நடந்த தீரன்!
பழங்களே கசந்த நாளில்
பாதியைத் தின்று வாழ்ந்தோன்!
விழல்களே விளைச்ச லென்ற
வேளையில் உழவு செய்தோன்!
குழல்களே வெடித்த போதும்
குன்றென நிமிர்ந்து நின்றோன்!

2. தலைவலி வந்த தென்றால்
தைலமே போதும்; வாட்டும்
குலைவலி வந்த தென்றால்
குடித்திட மருந்து வேண்டும்;
அலைதொடும் பார தத்தில்
அந்நிய ராட்சி என்ற
நிலைதனை மாற்ற வேண்டி
நிலத்தையும் சிவக்கச் செய்தான்.

3. தடியடி பட்ட போதும்
தனையிடர் சூழ்ந்த போதும்
குடிதனை வளர்க்கும் கள்ளுக்
கடையெதிர் மறியல் செய்தே
இடியென முரடன் கத்தி
இவன்தலை பிளந்த போதும்.
முடிந்தது தொண்டு என்றே
முடங்கிடா தேச நேசன்!

4. துணிக்கடை முன்னே நின்று
தொண்டருள் தொண்ட னாகப்
பணிவுடன் மறியல் செய்யப்
பரங்கியர் ஏவல், காவல்
துணிதுவைப் பதனைப் போலே
தொண்டரைக் கலைக்க வேண்டி
அணியணி யாக வந்தே
அடித்தனர் குருதி கொட்ட!

5. தன்னிலை யிழ்ந்து வீழ்ந்த
தமிழ்மகன் தன்னைத் தீயர்,
பொன்னுடல் வணிகம் செய்யும்
பொதுமகள் வீட்டின் முன்னே
திண்ணையில் போட்டுச்செல்லத்
திடுமெனப் பார்த்த நங்கை
அன்னைபோல் பரிந்தெ டுத்தே
ஆவியைக் காத்தா ளன்று!

6. அன்பொடு மருந்து மூட்டி
அவனுடல் தேறச் செய்த
இன்முக நங்கை நல்லாள்
எண்ணமே மயங்கி ஓர்நாள்
தன்னுட லவனுக் கீயும்
தன்தொழி லெண்ணத் தோடே
இன்புற இரவில் வந்தாள்;
இவனதை மறுத்துச் சொன்னான்

7. "ஆவியைக் காத்த உன்னை
அன்னையாய் மதிக்கின் றேன் நான்;
தீவினை விடுத்துத் தேயத்
திருப்பணி செய்வாய் நீயும்!
காவினில் கண்ட பூவைக்
கசக்கிடக் கருதல் தீதாம்!
தூவினை தொடங்கு கென்றான்
தோகையும் சம்ம தித்தாள்.

8. அண்ணலின் கொள்கை ஏற்றே
அரும்பணி செய்த தூயன்,
பெண்ணுடல் கிடைத்த தென்றே
பிழைபடத் தொட்டா னில்லை;
மண்ணிலே புதையுண் டாலும்
மணிகளா மக்கிப் போகும்?
கண்ணிலும் கற்பைக் காத்தான்
காளையர் கோமான் என்னே?

9. தொழில்தனைத் தொண்டென் றேய்க்கும்
தொகையினர் பெருத்த நாட்டில்,
பழியிலாத் தேசத் தொண்டில்
பற்றினால் புகுந்த நேயன்;
வழியிலை வயிற்றுக் கென்றே
வாடிய நாளு முண்டாம்!
விழிநிகர் ஆக்கூர், நண்பர்
வெளியூரே போன போது!

10. உண்ணவோ உணவு மில்லை;
உதவுவா ரெவரு மில்லை;
எண்ணெழுத் தோதிப் பெற்ற
இரண்டொரு ரூபாய் கொண்டே
புண்ணியன் உயிரைக் காத்துப்
புலச்சுவை துறந்து வாழ்ந்தான்!
கண்ணியன் உண்ட தட்டோ
கசங்கிய செய்தித் தாளாம்!

11. வறுமையின் சிகரந் தன்னை
வாழ்க்கையில் கண்ட தீரன்;
வெறுமையால் மனந்து வண்டு
விலக்கிட வில்லை தொண்டை!
சிறுவரும் மனதி லேற்றுச்
சிறுமைசெய் அந்நி யர்போல்
வெறுப்புற, தேசீ யத்தை
விதைத்தனன் சோறி ழந்தும்!

12. வாழ்க்கையின் வசந்தந் தன்னை
வறுமையில், போராட்டத்தில்
பாழ்மன வெள்ளை யாட்சி
பதுக்கிய சிறையில் தள்ளித்
தாழ்விலா எண்ணத் தோடு,
தண்டமிழ் நூலுங் கற்று
வாழ்ந்தவன் கவிஞன், நெஞ்சை
வைரமாய் ஆக்கிக் கொண்டான்!

13. எழுதுவ தெல்லாம் போற்றும்
இலக்கிய மென்னும் கொள்கைப்
பழுதினை வளர்ப்பார் பல்கிப்
'பச்சை'யே நூலாம் நாட்டில்
எழுதிய காவி யத்தில்
இனியபா லுணர்வுப் பாக்கள்
விழுமெதன விளங்கக் கண்டே
விளைவினை எண்ணிப் பார்த்தான்!

14. ஆக்கூரார் படித்துப்
அருமையீ தென்று ரைத்த
பாக்களைக் கிழிக்கக் கண்டு
பதறினார் அனந்தாச் சாரி!
"ஆக்கிய அரும்பா ஏட்டை
அழிப்பதேன்?'' என்றார் நெஞ்சைத்
தாக்கிடும் இன்பப் பாக்கள்
தகிக்குமே இளையோர் கற்றால்...

15. "இன்புணர் வூட்டும் பாக்கள்
இதில்நிறைந் திருக்கும்போது
நன்மையா பயக்கும் நூலாய்
நாமிதைப் புழங்க விட்டால்?
புன்மைசெய் நூலை நாமே
பிழங்கிட விடுதல் தீமை
என்பதை விதைத்த குற்றம்
இளையோருக் கிழைத்தோ ராவோம்!"

16. தேவையா ஈதென் றெண்ணித்
தெளிந்ததால் கிழித்தே னென்றான்!"
பாவையர் எழுத்தில் கூடப்
பாலுணர் வூடே சேர்க்கும்,
சேவையைச் செய்யும் நாட்டில்!
செயல்சிந் தனையில் தூய்மை
தேவையென் றெண்ணி வாழ்ந்த
தீரனை மறந்தே போனோம்!

17. ஒன்பது வயதில் பெற்றோர்
உடன்வர மறியல் செய்த
கன்னியாம் லீலா தன்னைக்
கடிமணம் புரிந்த ஆளன்;
அன்றிலைப் போலே வாழ்ந்தான்;
அரசியல் பதவி தேரான்;
இன்றெவர் அவனைப் போலே
இன்புறு பதவி தேடார்?

18. இத்தனைப் பெருமைக் கெல்லாம்
எவனடா சொந்த மென்றே
புத்தியைப் புழுதி தீண்டப்
பொறுத்திடார் ஆய வேண்டும்!
இத்தரை மானங் காக்க
இயன்றதைச் செய்தே ஓய்ந்தோன்
நத்திடும் ஒழுக்கக் குன்று
நம்ஜம தக்னி தானே!

19. நாரதம் ஓட்டி னோரும்
நடிகராய் விளங்கி யோரும்
மாரதப் பதவி ஏறி
மகிழுலா வந்த பேரும்
பாரத மக்கள் நெஞ்சில்
பதிந்தனர், தியாகப் பூக்கள்
நாரறுந் துதிர்ந்தாற் போலே
நம்மவர்க் கானார் என்னே!

20. தொண்டரை மறப்ப திங்குத்
தொடர்நிலைச் செய்யுள் போலே!
குண்டரை மதிப்ப திங்கே
குற்றாலக் குளியல் போலே!
வெண்டிரை குதிக்க வந்த
வெண்ணிலா போலே, தொண்டர்
எண்டிசை எங்கும் எண்ணி
ஏற்றிடப் படுவ தென்றோ?

## விடுதலைக் குழைத்த வெள்ளை ரோஜா

நிவேதிதை

1. விழிப்பிலா மக்கள் வாழ்ந்த
வியத்தகு நாட்டை எல்லாம்
பழிப்பினைப் பொருட்ப டுத்தாப்
பரங்கியர் பற்றி யாண்டார்;
சுழிப்பிலே படகாய்ப் போனோர்
சுதந்திரப் போர்தொ டுக்க
விழிப்பதில் முந்திற் றன்று
வியந்திட ஐரிஷ் நாடே!

2. தூங்கிய நாளில் வந்து
தொடையிலே திரித்துக் கொண்ட
ஆங்கில ஆதிக் கத்தை
ஐரிஷ் நாட்டு மக்கள்
ஈங்குநாம் கிளர்ந்தாற் போலே
எதிர்த்திட 'சீன்-பீன்' என்னும்
பாங்குடை இயக்கங் கண்டு
பரப்பினர் தேசீ யத்தை!

(சீன்-பீன் என்ற ஐரிஷ் சொல்லுக்கு நாம் ஐரிஷ் மக்கள் என்று பொருளாம்)

3. அடிமைநா மென்ப தற்கே
ஆங்கில நாட்டா ரென்ன
படியளப் பவரா? நோயைப்
பரப்பிடும் உயிரி தானே?
விடியலை அழைத்த நாட்டின்
வித்துதான் மார்க்ரெட் நோபில்!
நெடியிலா ஆன்மீ கத்தின்
நிழலென வந்தா ரிங்கே!

4. குமரியில் அலைகள் தொட்டுக்
கும்பிடும் பாறைச் சொந்தம்
சமயமே தொண்டென் றேற்ற
சரித்திரப் புகழ்கொள் ஞானி
அமரராம் விவேகா னந்தர்
அரும்முதற் சீட ராக
நமதுநா டுற்றார் மார்க்ரட்
நறுமலர் நாடும் வண்டாய்

5. ஈர்த்ததிங் கான்மீ கந்தான்
என்றதால் மார்க்ரட் நோபில்
வேர்ப்பெயர் மாற்றிக் கொண்டு
விழைநிவே திதையா யானார்!
பார்புகழ் விவேகா னந்தர்
பணிகளில் ஒத்துழைத்தே
ஆர்வுடன் இந்தி யாவை
அன்னைநா டென்றேற் றிட்டார்!

6. சொந்தநா டதனில் கண்ட
சுதந்திர இயக்கம் 'சீன்—பீன்'
உந்திய உணர்வி னாலே,
உள்ளுறை ஆன்மீ கத்தைப்
பிந்திய தாக்கிக் கொண்டு
பெரியவர்க் குரைத்து விட்டிங்
கிந்திய விடுத லைக்கே
இயன்றதைச் செய்ய வந்தார்!

7. திலகரின் பக்கம் நின்று
தீவிர வாதி யானார்!
உலகினர் ஒப்பக் கொள்கை
உவந்தெடுத் தோதி வந்தார்!
துலங்கிய இந்து மன்றம்
தொடங்கியே பணிகள் செய்தார்!
நலங்கிளர் பெண்கல் விக்கும்
நாடியாய் இவரி ருந்தார்!

8. கரியிடைத் தங்கம் மின்னக்
கண்டதும் துலக்க வேண்டிப்
பரிந்தெடுக் கின்ற பத்தர்
பான்மையில் நிவேதி தைதான்
எரியிடை குழந்தை போலே,
இடர்ப்படும் இந்தி யர்க்கு
விரிகதிர் நீள்க ரம்போல்
விழைந்திவர் கைதந் தாரே!

9. குளித்தெடுக் காத முத்து;
குழியெடுத் தூன்றா வித்து;
தெளித்திடாக் கோலம்; நெஞ்சில்
தேங்கிடா வரலாற் றுண்மை;
களித்திடா ஆடல் பாடல்;
கவர்ந்திடாக் கன்னிக் கோலம்;
பளிச்சிடா ஆய்வின் உண்மை;
பயன்குறை காணுங் கண்டீர்!

10. இரும்பிடர்த் தலையா ரின்றேல்
இலையிவண் கரிகாற் சோழன்!
பெரும்படை அசோக னின்றேல்
பேசிடும் பௌத்த மில்லை!
பெரும்விஞ் ஞானி போசின்
பெருமுழைப் பாய்வின் மாண்பு
திருமகள் மார்க்ரட் டின்றேல்
திரையிடப் பட்டி ருக்கும்!

11. அறிவியல் மேதை வங்கம்
அளித்தநம் ஜகதீ சர்க்கு,
வறியவர் உதவி கேட்க
வழங்கிடா செல்வர் போலே,
நெறிபிறழ்ந் தாண்ட வர்கள்
நேரிய ஆய்வுக் கேனோ
அறிந்துமே உதவ வில்லை;
அகந்தையா லழுத்தப் பார்த்தார்கள்!

12. ஆண்டவ ருதவ வில்லை;
ஆய்வினை மதிக்க வில்லை;
பாண்டவர் புகழ்பெறா றுக்காப்
பழிவளர் துரியன் ஆனார்!
பாண்டியன் கொடிமீன் தன்னைப்
பருந்தெடுத் துண்ணப் போமோ?
வேண்டிய உதவி செய்ய
விரைந்தவர் நிவேதி தைதான்!

13. பிரிட்டனின் அமெரிக் காவின்
பெருமதி யாளர் மன்றில்
உரியதோ ரங்கீ கா ரம்
உற்றநற் புகழி னாரம்
பரிந்துரை செய்தே பெற்றார்
பண்புசால் நிவேதி தையார்!
விரித்தது போசின் ஆற்றல்
விளைவுவிஞ் ஞான ஆக்கம்!

14. காந்தியார் குருதே வென்றே
கனிவுடன் அழைத்த மேதை
சாந்திநி கேதன் கண்ட
சால்புடை தாகூர் கூடப்
பூந்தளிர்ப் பெண்ணுக் கேனோ
புகட்டுக ஆங்கி லத்தை
ஏந்திழை நீயே என்றே
இவரிடம் கேட்டுக் கொண்டார்!

15. கல்வியில் தேசீ யத்தைக்
காண்பதே முறையா மென்று.
மெல்லியல் தடுத்து ரைத்தே
மேதையை மறுத லித்தார்!
பல்வலிக் கிடம ளித்தால்
பரிந்துடன் தலைவ லிக்கும்;
இல்லைதாய் மொழியிற் கல்வி
என்றிடில் உணர்வு மங்கும்.

16. ஆழிநீர் கைக்கும் போதும்
அருவிநீர் சுவைப்ப தேபோல்
வாழிடம் கனன்ற போதும்
வழிநிலை குளிர்வ தேபோல்
மேழிகள் ஓய்ந்த போதும்
மண்புழு கிளர்வ தேபோல்
ஏழிசை தாகூ ருக்கோ
இவருவ மேய மானார்!

17. ஆர்கலி கடந்த வந்தே
அரும்பணி புரிந்த நங்கை
ஊர்மலி அறியா மையை
ஒழித்திட உழைத்த தங்கை!
பேர்மலி பேரா யத்தில்
பிரளய மான கங்கை!
சீர்மலி நிவேதி தையைச்
சிந்தையில் சிலையாய் வைப்போம்!

## பசியை ருசித்தவர் ஜதீந்திரதாஸ்

1. தாயுண்டு, தம்மக்கள், தார முண்டு;
   தனக்கும்மே லுலகத்தில் என்ன உண்டு?
பாயுண்டு நோய் நொடியுண் டென்றே வாழ்ந்து
   பாதையிலே பட்ட அடிச் சுவடாய்ப் போனார்!
வாயுண்டு, வயிறுண்டால்! அதுவே தங்கள்
   வாழ்வென்றே எண்ணியவர் கூளமானார்!
நாயுண்ட எச்சத்தை உண்பார் உண்டோ?
   நடைமுறையை மீறிசிலர் வாழ்ந்தா ரந்தோ?

2. வந்தேறி வாழ்க்கைவளங் கண்டோ ரிங்கே
   வரலாற்று நாயகராய் வளர லானார்?
இந்தியரின் இன்னுயிரைத் துச்ச மாக்கி
   இன்னலுக்கே வித்திட்டிங் காள லானார்!
சொந்தங்கள் அடிமைகளாய் மாற்றப்பட்டுச்
   சுரண்டவழி கண்டிட்ட வெள்ளை யாட்சித்
தந்திரத்தால் வேர்விட்ட தறிந்த மேலோர்
   தகர்த்திடவே போரிட்டார், உயிரும்விட்டார்!

3. கொடுமையையே பொழுதுபோக்காய்க் கொண்டி
ருந்த
கொலைக்கஞ்சா வெள்ளையர்க்குப் பாட மாக,
இடும்பைதரும் செயல்தேர்ந்தா ரெதற்கு மஞ்சா
இந்தியத்தாய் ஈன்றளித்த புரட்சி வீரர்!
நெடுவானில் ஒருபரிதி, இந்தி யாவில்
நிலப்பரிதி பலகண்டார் லாகூர் மக்கள்!
அடுப்படியில் வரலாற்றை முடித்துக் கொள்ளா
ஆற்றலரின் வாழ்க்கையதோ சிவந்த ஏடா!

4. இலாகூரைத் தலைமையிட மாகக் கொண்டே
இலட்சியப்போர்த் திட்டத்தைத் தீட்டியோருள்
பாகூறின் ஏரியைப் போல் பரந்த நெஞ்சு
படைத்தஜதீந் திரதாசும் பகவத் சிங்கும்
தாகூரின் மண்பிறந்த பிஜாய்க்கு மாரும்
தணலொத்த மகாவீர்சிங், சுகதேவ், ஆசாத்
பாகூரின் சீர்சொல்சின் காத்தர் மற்றும்
பகவதியும் ராஜகுரும் பங்கேற் றாரே!

ஆசாத்—சந்திரசேகர ஆசாத்

பகவதி—பகவதிசரண்

தாகூரின் மண்—வங்கம்

பாகூர்—புதுவை மாநிலத்திலுள்ள பெரிய ஏரி.

சின்காத்தர்;

5. சிங்கங்கள் சிறைப்படுத்தப் பட்டார்; கூண்டில்
சிக்கியத்தால் சிறுமைக்குள் ளாக்கப் பட்டார்;
வெங்கொடுமை விளைவுக்கா ளான போதும்
விடுதலைப் போர் வேள்வித்தீ யான தொண்டர்
தங்களது செயலுக்கும் தண்ட னைக்கும்
தரம்தாழ்ந்து மன்னிப்புக் கோர வில்லை
எங்களையும் பிறகுற்ற வாளி போலே
ஏன் நடத்த வேண்டுமென நியாயம் கேட்டார்?

6. வினைகளுக்கும் விளைவிக்கும் பின்னே நின்று
வேறுபடும் நோக்கத்தை உணரா மக்கள்,
சுனைநீரும் சாய்க்கடையும் ஒன்றே என்னும்
சமரசத்தைச் சிறைக்குள்ளே சாதித் தார்கள்!
பனைமுடியே பூவடிவம் பெற்ற போதும்
பங்கயத்தின் இனமாமா? தன்ன லத்தார்!
வினைகளுக்கு நிகராகத் தொண்டை எண்ணி
வெள்ளிக்கும் ஈயத்தின் விலையே வைத்தார்!

7. "அந்தமானில் சிறைக்குள்ளே அடைக்கப் பட்ட
அறம் சார்ந்த விடுதலைப் போர் வீரர் தம்மைக்
கந்தலெனக் கருதாமல் காஞ்சிப் பட்டாய்க்
கருதுவதே முறையாகும் என்றார்; நல்ல
சந்தனத்தைக் கழிப்பறையில் வைக்கும் போக்கோ
சரியில்லை என்பதனை ஏற்கா விட்டால்,
உந்தியெழு முணர்ச்சிதனை வெளிப்ப டுத்த
உண்ணாநோன் பிருந்தனை எதிர்ப்போ
மென்றார்!

8. தத்தருடன் பகத்சிங்கும் பிறரும் உள்ளே
தாமுரைத்த படியுண்ணா நோன்பி ருந்தார்!
"எத்தனைநாள் நீடிக்கும் பார்ப்போ" மென்றே
எண்ணியிருந் திட்டார்கள் ஆட்சி யாளர்!
பத்துமூன்று நாட்களிவர் பசித்தி ருந்தும்
பயனில்லை; ஜதீந்திரதாஸ் கருத்தைச்
சொன்னார்;
"எத்தரிவர், கோரிக்கை ஏற்கு மட்டும்
இறுதிவரை உண்ணாத ஒருவர் போதும்"

9. கோரிக்கை தனைவைத்துப் போராட் டத்தில்
குதித்தவர்கள் வெல்லாமல் முடித்தல் தீதாம்
ஏரிக்குள் மீன்பிடிக்க இறங்கு மாட்கள்
இடைநனையு தென்றஞ்சித் திரும்ப லாமா?
நாரிணைத்த மலருதிர்ந்தால் நாரே மிஞ்சும்
நடப்பிதுபோல் கோரிக்கை உதிர லாமா?
யாரிடத்தில் உரமுளதோ அவர்கள் மட்டில்
இறுதிவரை உண்ணாநோன் பிருப்போ
மென்றார்!

10. நெஞ்சுரத்தில் நிகரற்ற ஜதீனே உண்ணா
நோன்பிருக்க முன்வந்தார், முறிய டிக்க
அஞ்சுவதற் கஞ்சாது குற்றஞ் செய்தே
அச்சிறையி லிருந்தவரின் துணையைக் கொண்டு
நஞ்சுமனங் கொண்டவர்கள் வலுவில் ஊட்ட
நடவடிக்கை மேற்கொண்டு தோற்க லானார்!
கஞ்சாவில் மயங்குபவர் போலே ஆண்டோர்
கனிவின்றி கொடுமையினால் களித்தா ரன்னே

11. ஆளவந்தோ ரகங்காரப் பிடிவா தத்தால்
அணுஅணுவாய் உயிர்விட்டார்; தாசும்
மாற்றார்
தாளடியில் மண்டியிடா மறவர் பந்தம்
தன்பொறுப்பில் வெளியழைக்க மறுத்தார்;
ஆட்சிக்
கோளரியின் கோரிக்கை ஏற்றி டாமல்
குறுமதியால் ஒட்டாரம் கொண்டதாலே
தோளுயர்ந்த தொண்டரவர் ஒடுங்கிப் போனார்
தோல்வியிலை சாவெனக்கே வெற்றி என்றார்.

12. அறுபத்து மூன்றாம்நாள் தாசின் ஆவி
அடங்கிற்றே! அறிந்துலகம் கொதித்த தம்மா!
சிறுபொறியில் பெருந்தீதான் வளர்தல் போலே
சிவந்ததடா தேசபக்தர் கண்களெல்லாம்!
உறுதுணையை இழந்திட்ட புரட்சி வீரர்
உள்ளிருந்தே ஊ திரக்குரல்கொ டுத்தார்!
இறுதிவரை இலக்கெய்த நோன்பி ருந்தே
இன்னுயிரை நீத்தவரை மறக்கப் போமோ?

13. உயிர்நீத்து ஜதீந்திரதாஸ் மறைந்த பின்னர்
ஒப்பியது கோரிக்கை தன்னை ஆட்சி
பயிர்வேறு. களைவேறு என்னு முண்மைப்
பாடத்தை ஏற்றிடவும் முனைந்த தென்னே!
உயிர்க்கொள்கைப் போராட்டக் கைதி கட்கே
உயர்வகுப்பு வசதிகளைச் சிறையில் தந்தார்!
உயிர்தந்தே உரிமைதனை வாங்கித் தந்த
உறுதிமலை ஜதீந்திரரை மறந்தே போனோம்!

14. அரசியலில் ஈடுபட்டோர் போராட் டத்தை
அடக்காத ஆட்சியிலை! சிறையில் வைக்கத்
தரம்பிரித்து வகுப்பொதுக்கும் சிறைக்கோட்
பாட்டின்
தத்துவத்தாய் ஜிதேந்திரர்பேர் அறிந்தோ
மில்லை!
வரம்பின்றி வார்த்தைகளைக் கோத்துக் கொண்டு
கரம்புகளை வாழ்த்துகின்ற தொண்டர் கூட்டம்
இரங்காத வெள்ளையனை இணங்க வைத்த
இவர் பெயரை என்றேனும் நினைத்த
துண்டோ?

●●

## விடுதலை வாயினம்பாடி

(பிகாம்ஜி காமா)

1. பூவுக்கும் புடவைக்கும் பொன்ன ணிக்கும்
பொய்ய னக்கும் ஆடவரின் சுவைசொல் லுக்கும்
நாவுக்கும், நரம்புக்கும் களமாய்க் காணும்
நம்நாட்டுப் பெண்களுளும் பொதுத்தொண்
டுக்குச்
சாவுக்குச் மஞ்சாது முன்வந் தன்றே
சமதர்மக் கொள்கைக்கு நெஞ்சந் தந்து
பாவுக்குச் சுவைகூட்டும் உவமை போலே
பணிசெய்தார் பன்னாடு கண்ட காமா!

2. அழகான மயிலுக்கும் அஞ்ச வைக்கும்
அரவத்தைக் கொல்கின்ற ஆற்றலுண்டு!
பழமான காலத்தும் பனையை எந்தப்
பறவைவந்து கொத்திவிடக் கூடும்? வாழ்வில்
கிழமான காலத்தும் குமார சிம்மன்
கிளர்ந்தெழுந்து டன்பாரை வென்றாற் போலே
அழகுக்கே உடல்தந்த காமா அம்மை
ஆங்கிலேயர் ஆட்சிதனை எதிர்த்தா ரன்றே!

(குமாரசிம்மன் எண்பது வயதில் ஆங்கிலத் தளபதி டன்பார் என்பவனைப் போரில் தோற்கடித்த சிற்றரசன்)

3. பார்சிமதக் காரரிவர், பம்பாய் வாழ்ந்த
பத்திரிக்கை இயக்குநராம் ருஸ்தும் காமா
சீர் துணைவி, செயல்வல்ல பிகாம்ஜி காமா
சிந்தையிலே விடுதலைத்தீ வளர்த்த மாது!
ஊர் புகழ உதடசைத்தே உற்ற நேரம்
உள்ளோடிப் பதுங்காத புரட்சிப் பூவை!
ஆர்வமுடன் சோசலிசக் கொள்கைக் காக
அந்நாளில் உழைத்திட்ட சிவப்பு ரோசா!

4. பாரீசில் தளமமைத்துக் கொண்டு, நாட்டுப்
பற்றாளர் தம்மைத்தேடிப் பயிற்று வித்து,
மாரீச மனங்கொண்ட வெள்ளை யாட்சி
மடிவதற்குப் பாடுபட்ட மராட்டி யத்தாய்
காரீயம் வெப்பத்தில் அழுவ தேபோல்
காரிகையர் மனமுருகும்: ஆனால் காமா
பேரீச்சம் பழவித்தாய் உறுதி யோடு
பெண்சிங்கம் போலன்று வாழ்ந்து வந்தார்!

5. ஆயிரத்துத் தொள்ளாயிரத் தேழா மாண்டின்
ஆகஸ்டில் அனைத்துலகச் சமதர் மத்தார்
தாயில்லாப் பிள்ளைக்குத் தாதி யர்போல்,
தனையாக்கிச் கொண்டிருந்த செர்மன்
நாட்டில்,
வாயிறக்கும் சொல்லுக்கு ஸ்டட்கார் டென்னும்,
வளநகரில் மேடைதனை அமைக்க லானார்!
மாயிடையே மல்லிகைப்பூ மலர்ந்தாற் போலே
மாநாட்டின் தலைமைக்கா லிங்க ரேற்றார்.

6. இன்றிலங்கும் தேசியக் கொடியை அன்றே
இலட்சியத்தாய் முதன்முதலாய்ப் பறக்க
விட்டார்!
மன்றதனில் விடுதலைக் கோர்தீர்மா னத்தை
மலைத்திடவே முன்மொழிந்து வாதம்
செய்தார்.
என்றென்றும் அடிமைகளாய் எம்மை யாள
எத்தனித்தால் எரிமலையே வெடிக்கு
மென்றார்!
அன்றிலுக்கு மறுமணமா? இந்தி யாவை
ஆள்வதற்கு வெள்ளையரா? என்றார் காமா?

7. மாலைக்கே ஆசையெனில் பலி பீடத்தில்
மணிக்கழுத்தை நீட்டென்றே கூறு கின்றார்;
ஆலைக்குக் கரும்பூட்டல் போலே எங்கள்
அரும்மக்கள் உடல்பிழிந்தே களிக்கின் றார்கள்!
காலைக்கே ஆவலுறும் இந்தி யர்க்குக்
காட்டுகிறார் இருட்சிறையை என்ன நீதி?
சோலைக்குள் வெள்ளாடாய் எங்கள் நாட்டைச்
சுரண்டுபவர் வெளியேற வேண்டு. மென்றார்!

8. ஒருமனிதன் மற்றவனை அடிமை என்றே
உரைப்பதுவும், நினைப்பதுவும் கொடுமை
யன்றோ;
வரும்படிக்கு வழிதேடி வந்தோ ரெம்மை
வளைத்தடிமை யாக்கியதும் துரோகந் தானே?
இரும்படிக்க உயர்வெப்பம் தேவை! எங்கள்
உரிமைக்கும் புரட்சித்தீ கனிய வேண்டும்!
அரும்பெடுக்கும் கரங்களிலே ஆயு தத்தை
ஆங்கிலேயர் காணத்தான் விருப்பம் போலும்?

9. கனல்பரக்கக் கண்சிவக்கக் காமா அம்மை
கருத்துரைத்தார் மாநாட்டில், நியாயங்
கண்டே
இனமென்றும் எண்ணாமல் இவரின் பேச்சை
இந்துமனும் ஆதரித்தார், எதிர்த்தார் வேறாள்!
"வனவிலங்கா இந்தியர்கள்? வேட்டைக் காடா?
வந்தவர்க்கா ஒருநாடு சொந்தம்!" என்றே
மனந்திறந்து வரவேற்றார் சமதர் மத்தை
மதித்திட்ட இந்துமனோர் ஆங்கி லேயர்!

10. காமாவின் சொற்பொழிவைக் கேட்ட யர்ந்தோர்
கனியென்றார், காரமென்றும் சிலபேர்
சொன்னார்!
ஏமாந்த இனச்சார்ப்பாய் வாய்தி றந்தால்
எரிமலையாய்த் தெரியுமது, பிகாம்ஜி வாதம்
சீமான்கள் சிலருக்கே கைத்த ாதனால்
சீனியெனச் சுவைத்தார்கள் பலபே ரங்கே!
பூமான்கள் இல்லாத அரங்கில் கூடப்
பொதுநீதிக் கெதிர்ப்பென்றால் புன்மைதானே!

11. இந்தியாவின் விடுதலையில் நாட்டங் கொண்ட
இளையவர்க்கு வழிகாட்ட உணர்ச்சி யூட்ட
வந்தேமா தரமென்ற ஏடு கண்டார்
வரியெழுத்தை வாளாக்கி வீசி வந்தார்!
நந்தேச விடுதலைக்கும், நம்முன் னோரின்
நாகரிகப் பண்பாட்டைக் காப்ப தற்கும்
சிந்திடுவோம் குருதிதனைச் சீறா விட்டால்
சிறுத்தைதனைக் குறுமுயலும் சீண்டு
மென்றார்!

12 முதலுலப் போர்மூண்ட நேரம், காமா
முன்வந்தோர் விண்ணப்பம் வீரர்க் கென்றார்
"அதர்மத்தின் மேல்நின்றே ஆட்சி செய்யும்
ஆங்கிலேயர் சார்பாக இந்தி யர்கள்
உதவிடவே துப்பாக்கித் தூக்க வேண்டாம்
உற்றபகை நமக்கிந்தப் போரி லில்லை!
இதயமற்றோர்க் கெதிராகத் திரும்பி விட்டால்
இந்தியரின் தளை நொறுங்கும், செய்க!',
என்றார்.

13. இராணுவத்தைத் தூண்டிவிடும் எழுத்தைக்கண்டே
இரைகண்ட புலியானார் ஆள வந்தார்!
இராக்காலம் பார்த்திருக்கும் ஆந்தை போலே
இது நல்ல தருணமென பிரெஞ்சு நாட்டை
"இராணுவத்தைத் தூண்டிவிடும் பிகாம்ஜி தன்னை
எங்களிடம் ஒப்படையும் என்று கேட்டார்;
தாரதரத்தை மறக்காத பிரெஞ்சுக் காரர்
தகைசரன்ற நெறிநின்று மறுத்து விட்டார்!

14 உலகப்போ ரொப்பந்தம் இருநாட்டுக்கும்
உண்டாகி இருந்ததனால் இங்கி லாந்தின்,
பலமான கோரிக்கை மறுத்த போதும்,
பாதகமே இவரெழுத்தால் போருக் கென்றும்;
இலவங்காய் முத்தாக இருப்பீ ரென்றே
இம்மாதைச் சிறைக்குள்ளே அடைந்தார்;
வால்டேர்
குலப்புகழைக் குலைக்காதோர் போர்முற் றுங்கால்
கொள்கைவழி வளர்ந்தவரை விடுவித் திட்டார்!

15 நெருப்பால்தான் பொருள்வேகு மின்றி மேக
நிறப்புகையால் என்னாகும்? பயிற்சி பெற்ற
துருப்பால்தான் போர்வெற்றி கூடும், தாளம்
தொடைத்தட்டிப் போடுபவ ராலா கூடும்?
தெருப்புழுதி சுவராவ தில்லை! அஞ்சும்
தசைமலைகள் விடுதலைப் போர் புரிவதில்லை!
அரும்பொத்த அரிவையர்கள் எல்லாம் காமா
ஆற்றிட்ட அரும்பணிக்கு நிகரா! இல்லை.

16. கன்னத்தில் தான்செம்மை காணக் கூடும்
காரிகையர் பலரிடத்தில், ஆனால் காமா
எண்ணத்தில் எழுந்தொளிர்ந்த சிவப்பைக் கண்டே
(இ)லெனினிவரைத் தன்னாட்டிற் கழைத்தார்; ஜாரைப்
புண்ணுக்குப் புலமாக்கிப் புரட்சி செய்து,
புவியெங்கும் தொழிலாளர் வாழ்த்தைப் பெற்று
விண்ணுக்கும் சோவியத்தின் புகழைத் தந்த
வித்தகரின் அழைப்பேஓர் விருது தானே!

17. சமதர்மச் சின்னமெது? நோயே! காமா
சரித்திரத்தில் இதற்குமொரு பக்க முண்டாம்
இமமொத்த வாழ்க்கையிலே தொண்டு மட்டும்
இறப்பதில்லை, என்றாலும் சாவு மட்டில்
தமதென்றே உடல்பறிக்க வந்து தேடும்,
தருணமிது காமாவுக் குற்ற போது
தமதுடலை பாரதத்திற் சாய்க்க எண்ணித்
தள்ளாத அகவையிலே வந்தா ரிங்கே!

18\. வாழ்நாளை வெளிநாட்டில் கழித்து விட்டு,
வரலாற்றில் தன்பெயரை நிறுத்தி விட்டுப்
பாழ்பட்ட சமுதாயம் விழிப்புக் கொள்ளப்
பாடுபட்ட மூதாட்டி, பிறந்த மண்ணில்
வாழ்நாளின் முடிவுரையைத் தீட்ட வேண்டி
வருவதற்கே ஆண்டவர்கள் அனும தித்தார்!
வாழ்வாங்கு வாழ்ந்தவரோ எழுபத் தைந்தாம்
வயதினிலே தன்னுடலை மண்ணுக் கீந்தார்.

19\. உழைப்பதிலே பெண்களுக்கு நிகரே இல்லை!
உறுதியிலும் அவரொன்றும் குறைந்தா ரில்லை!
மழைக்கருணை மனவர்க்கே என்ற போதும்
மறப்பண்பும் மதிவளமும் குறைந்த தில்லை!
தழைக்கின்ற பாசத்தின் தளமாம் பெண்கள்
தனிச்சிறப்பை மறக்காத தன்மை எங்கே?
இழையோடும் மின்னலெனக் காமா போன்றோர்
எப்போதோ தோன்றிடினும் மறைவ தில்லை!

●●

## ஓம்கார் நீலகண்ட பிரம்மச்சாரி

1. மற்போரைக் காணும் போது,
மனதிலோர் தெம்பு தோன்றும்!
சொற்போரைக் கேட்கும் போது,
சுறுசுறுப் படையும் மூளை!
கற்பாரைக் காணும் போது,
கல்வியில் கருத்துண் டாகும்!
சொற்புயல் வங்கச் சிங்கம்
சொற்களால் வீரம் தோன்றும்!

2. பீரங்கி தோற்கும் வங்க
பிபின்சந் திரபால் சொல்முன்!
வீரந்தான் மிஞ்சு மன்னார்
விரிவுரை கேட்டார் மாட்டு!
காரந்தான் உணர்வி லூறும்
கயமைகள் மடிந்தே போகும்
நேரந்தான் வேண்டும் கேட்டோர்
நிகழ்வினி லிறங்கு தற்கே!

3. சென்னையில் பிபின் றன் பேச்சைச்
சென்றுகேட் டிட்டார் ஓம்கார்
இன்னுமா தயக்க மென்ற
எழுச்சியே தோன்றத் கண்டார்!
தன்னையும் புரட்சித் தாக்கம்
தகித்திடும் உணர்வு கொண்டார்!
தென்னகப் புரட்சிக் கேற்ற
தீரராய்த் தேர்வு பெற்றார்!

4. சரித்திர வரியில் நிற்கும்
சந்திரகாந் சக்ர வர்த்தி
அரித்திற நீல கண்டர்
அறிமுகம் நிகழ்வ தற்குப்
பரித்திறப் பாடற் கோமான்
பாரதி களம மைக்கத்
தரித்திர ஆட்சி தன்னைத்
தகர்த்திடும் இயக்கம் சேர்ந்தார்!

5. தென்னகம் முற்றும் சுற்றித்
தேசீயம் பரப்பி வந்தார்!
அன்னமாய் இளைஞ ருள்ளே
அஞ்சிடார் தம்மைத் தேர்ந்தார்!
அன்னியர் தமைவி ரட்டும்
ஆயுதப் புரட்சி காணத்
தன்னலத் துறவி யானார்
தமிழ்நில நீல கண்டர்!

6. உயிருட லனைத்து மீயும்
உறுதியில் மிக்காருக்சே
பயிற்சியும் நாட்டுப் பற்றும்
பாடமும் புகட்டி வந்தார்!
தயிரினைக் கடைந்தால் தானே
தாளித நெய்கி டைக்கும்?
வயிறுடல் பெரிதென் பாரா
வந்துபோர் புரிய நிற்பார்?

7. இந்தியப் புரட்சி யாளர்க்
கியன்றதைச் செய்வ தற்குப்
பந்தயக் குதிரை வேகப்
படைபல செர்மன் ஆட்சி
முந்தியே வந்த தன்று
மூண்டதும் முதற்போ, ரிங்கு
வந்திடும் ஆயு தங்கள்
வழங்கிடும் செர்மன் என்றார்!

8. ஆயுதம் வந்தால் மட்டில்
ஆகுமா ஆளில் லாமல்?
ஆயுதம் ஏந்த வல்ல
ஆர்வலர் தம்மைச் சேர்த்தே
ஆயுதப் புரட்சி யாலே
அன்னிய ராட்சி நோக்கின்,
ஆயுளை முடிப்ப தற்கும்
ஆள்பலம் தேட லானார்!

9. அறுவடை செய்வ தற்கே
ஆட்களை யழைத்தல் போலே
உறுபடை அமைப்ப தற்கிங்
குதவியைக் கோரக் கண்டு
நிறுவிடும் படையில் சேர
நெஞ்சுரங் கொண்ட வீரர்
மறுப்புரை உண்டோ என்றே
மகிழ்ந்துமே சேர வந்தார் !

10. ஆள்பலம் உதவு தற்கும்
ஆர்வுடன் முன்வந் தார்கள்
வாள்பல பரோடா மன்னர்
வடு விழைக் கம்ப ளத்தார்!
தோள்வலி வெள்ளைத் தேவர்
தூயபிச் சாண்டித் தேவர்
நீள்புகழ் பெரிய சாமி
நிலமிதை மீட்கத் தானே!

11. அவரையை ஊன்று தற்கும்
'ஆடி'யைத் தேடு கின்றோம்;
நவரையில் நடுவ தற்கும்
நாற்றிடக் காலந் தேர்வோம்;
உவந்தொரு தொழில் துவக்க
உரியநாள் பார்த்தல் போல,
தவறிடா வெற்றிக் காகத்
தகுந்தநாள் பார்த்திருந்தார் !

12. உண்டிடும் வேளை தன்னில்
உத்திரம் வீழ்ந்தாற் போலும்,
வண்டியி லேற்றி வந்து
வழிப்பறி தந்தாற் போலும்,
சாண்டியன் ஆசைக் கொன்று
சங்கடம் விளைத்த வாஞ்சால்,
உண்டியில் உடைத்தாற் போல
உருண்டது புரட்சித் திட்டம்!

13. ஒருகொலை செய்தே வாஞ்சு
உசுப்பினார் ஆட்சி தன்னை!
எருவிலா பயிருக் கிட்ட
இயலுரம் போலி தாச்சு!
குறும்பினால் பெரிய திட்டம்
குலைந்திடும் கலையைப் போலே
அரும்பிய புரட்சித் திட்டம்
அழிந்திட வழியுண்டாச்சு!

14. விடுதலைப் போராட் டத்தை
வீழ்த்திட ஏது தேடி,
நடுநிலை இல்லா ஆட்சி
நாயென அலைந்த போது,
கடுவனின் கையில் வீழ்ந்த
கனியென வாஞ்சு செய்கை
கெடுதலை வெள்ளை யர்க்குக்
கிடைத்தபின் விடுவார் கொல்லோ?

15. மடுவினில் பாய்ந்த வேங்கை
மண்ணுளே புதையுண்டாற் போல்,
விடுதலை இயக்கத் தாரின்
வினைவலி குலையச் செய்தார்!
துடுப்பிலா தோணி போலே
தொண்டரே வாட, ஆண்டோர்
விடுதலை வீரர்க் கெல்லாம்
விலங்கினைத் தேடித் தத்தார்!

16. கொலைநடந் திட்ட போது
குருசிலாம் நீல கண்டர்
சிலைமலி காசிக் கேனோ
சென்றிருந் தாராம்; ஆனால்,
கொலையிலே இவருங் கூடக்
கூட்டென நினைத்த ஆட்சி
இலைதனைக் காயென் றெண்ணி
இவரையும் தேட லானார்!

17. வெள்ளரி மேய்ந்த தென்றா
வேங்கையைத் தேடு வார்கள்?
வெள்ளைய ராட்சி இந்த
விந்தையைச் செய்த தன்று!
புள்ளியை மறந்து கோலம்
போட்டனர், ஓம்கார் தன்னைத்
தள்ளிடச் சிறையில் வாஞ்சு
தனக்கிவர் துணையென் றார்கள்!

18. ஆயுதப் போருக் காக
ஆயத்த மானோர் தம்மைக்
காயுள வெள்ளை ஆட்சி
கறைப்படுத் திற்றே! ஆஷை
நோயுறும் முன்னே வீழ்த்தி
நொறுக்கிய செயலில் சேர்க்க
ஓயுத லின்றிச் சட்டம்
உழைத்ததாம் கொடுமை என்னே!

19. அச்சிலே வந்த செய்தி
அறிந்ததும் நீல கண்டர்
மெச்சிடும் காசி விட்டு
மேல்நட வடிக்கை தேற
உச்சிகொள் போசைத் தந்த
உயர்கல் கத்தா சென்றே
அச்சமில் புரட்சி யாளர்
அறிவுரை கேட்க லானார்!

20. மூவழி தேர்ந்தா ரஃதுள்
முதல்வழி வெளிநா டேகல்!
நாவலந் தீவுக் குள்ளே
நம்மிடை மறைந்து வாழ்தல்,
காவலர் முன்னே சென்று
கைதியாய் ஒப்ப டைத்தல்
ஆவெதன் குற்ற மற்றார்
ஆய்ந்துமே கடையைத் தேர்ந்தார்.

21. காவலரை உடன ழைத்துக்
"கைதெனைச் செய்க?''
கோவலன் போலவே குற்றக்
குறியிலார் கைதி ஆனார்!
சேவலின் கொண்டை தன்னைச்
சுடரெனக் குற்றஞ் சாற்றி
கேவல ஆட்சி யாளர்
"கிட!' எனச் சிறையி லிட்டார்!

22. பெல்லாரி சிறையில் ஓம்கார்
பெருந்துய ரோடி ருந்தார்
இல்லைநாம் வெளியே என்றால்
எப்படிப் புரட்சி தோன்றும்?
வல்லவ ரெல்லா முள்ளே
வாடவோ என்றே எண்ணி
ஒல்லையில் வெளியே றத்தான்
உறுதியாய் முயல லானார்.

23. போர்தொடங் கிற்றே இந்தப்
பொழுதினி வாய்க்கப் போமா?
நேர்படு புரட்சி காண
நேரமே வந்த போது
ஊர்படுத் துறங்க லாமா?
உயிரினி எதற்கா மென்றே
சீர்பணிச் செம்மல் கம்பி
சிதைத்துமே வெளியே றிட்டார்!

24. தப்பியே வண்டி யேறித்
தர்மாவை வந்து சேர
அப்பொழு தங்கோர் கைதி
அறிந்திவர் பெயரைக் கூவத்
தொப்பிகள் பாய்ந்து வந்தே
தொண்டரைப் பிடித்துக் கொள்ளத்
தப்பிய குற்றத் திற்குத்
தண்டனை ஆறு மாதம்!

25. ஏழரை ஆண்டுக் காலம்
இடர்சிறை வாசம் செய்து
வேழமாம் நீல கண்டர்
வெளியிலே வந்த போது
தோழமை உணர்வு காட்டித்
தொண்டரை வரவேற் றேற்ற
மோழைகள் மலிந்த நாட்டில்
முதியவர் தந்தை நின்றார்!

26. தந்தையின் பாது காப்பில்
தங்கினார் நான்கு மாதம்!
தொந்தியை வளர்ப்போ ரானால்
தொடர்ந்திவண் வாழ்ந்தி ருப்பார்!
இந்திய விடுத லையே
இலட்சிய மாகக் கொண்டார்
தந்தையை விட்டு நீங்கித்
தலைநகர் சென்னை வந்தார்!

27. தன்னலங் கருதார் தம்மைத்
தமிழ்நிலம் இடறிப் போகும்!
ஒன்னலர் தம்மை நத்தி
உவந்திது பணிகள் செய்யும்
அன்றுநம் நீல கண்டர்
அன்னமில் லாது வாடி
நின்றிரா நேரம் பிச்சை
நீட்டியே பெற்றுண் டாராம்!

28 பசியினால் வாடி ஓர்நாள்
பாரதி வீட்டிற் கேகிப்
புசித்திட நான்க ணாவைப்
புலவரைக் கேட்டிட் டாராம்!
கசிந்தடும் கருணைப் பாட்டன்
காசுடன் தந்த னுப்பிப்
பசித்தவன் பால்ப ரிந்து
பாடலும் இயற்றி னாராம்!

("தனியொருவனுக் குணவிலை யெனில், ஜகத்தினை அழித்திடுவோம்" என்ற பாரதியின் பாடல் இந்த நிகழ்வினால்தான் எழுதப்பட்டதாம்)

29 வீட்டையே நினைத்த ஆட்கள்
வேந்தென வாழும் போது
நாட்டையே நினைத்த தொண்டர்
நடுத்தெரு வாசி யானார்!
ஊட்டமில் லாது வாழ்ந்தும்
உழைத்தவர், நீல கண்டர்
நாட்டினர் நெஞ்சில் வாழ்ந்தால்
நமக்கது பெருமை யாகும்!

30 எத்தனை இன்னல் பட்டார்?
இந்திய விடுத லைக்கே!
எத்தனை ஆண்டுக் காலம்
இடர்சிறை வாசம் செய்தார்?
எத்தரை ஏற்றும் மக்கள்
இவர்பெயர் நினைப்ப துண்டோ?
சொத்திவர் போன்றோர் பேரைச்
சொல்பவர் வாழ வேண்டும்!

## நெருப்பைச் சுட்ட நீல மலர்கள்

1. விடுதலைப் போர் வடதிசையில், வெகுண்ட ஆட்சி
 வித்திட்டோர் தமையொடுக்க விழைந்த போது
கொடுமனத்தன் துப்பாக்கிப் படைத்த லைவன்
 கொடும்படையோ டங்கழைக்கப் பட்டான், நெஞ்சாய்க்
கடும்பாறை தனைப்பெற்ற நீலன் ஆங்கே
 கணக்கற்ற இந்தியரைக் கொன்ற தோடு
கெடுமதியால் கிராமங்கள் தமையெ ரித்தும்
 கிளர்ந்தோரை'' அடக்கிடவே கொக்க ரித்தான்!

2. பொய்கையிலே புரள்கின்ற மேதிக் காங்கே
 பூத்திருக்கும் அல்லியொருபொருட்டோ? நாளும்
மெய்யழுக்கால் அரிப்பெடுத்துத் தேய்க்கும் பன்றி
 மிளிர்கலையின் சிலையழகை நினைப்ப துண்டோ?
நெய்குடித்த நாய்நரகல் நினைக்கு மாப்போல்
 நெஞ்சிறுக்கும் கொண்டலைந்த நீல னுக்குச்
செய்கொடுமை எல்லாமே இன்ப மாகச்
 சிறர்தொட்டு முதியோரும் கொல்லப் பட்டார்!

3. புயலோறுத்த பூங்கொடிகள் போலே பெண்கள்
 பொல்லாத வெள்ளையானால் பொசுக்கப் பட்டார்!
கயல்பிடித்த பூனையெனக் களித்த நீலன்
 காட்டாட்சி புரிந்திட்டான் வடக்கே, மக்கள்
அயலவனின் அகங்காரம் தனைய டக்க
 ஆர்ப்பரித்துத் திரண்டிட்டார், அவருள் ஓர்ஆள்
பயலிவனைப் பழிதீர்த்தார் லக்னோ மண்ணில்
 பாவிமகன் சுடப்பட்டே ஒழிந்தான் கண்டீர்!

4. பாஞ்சாலம் தனில்மக்கள் தம்மைக் கொன்ற
 பாதகனாம் டயருக்குப் பரிசு தந்த
மாஞ்சோலை மந்திகளே வெள்ளைக் காரர்!
 மாண்டொழிந்த நீலனுக்கு நன்றி காட்டும்

வாஞ்சையுடன் சிலைவடித்தே இங்க னுப்பி
வைத்திட்டார் சென்னையிலே, இந்தச் செய்கை
தீஞ்சுவைத்தேன் குடுவையிலே நஞ்சை விட்ட
திறம்போலே இருந்ததனால் நொந்தார் மக்கள்;

5. "பொன்னள்ளிப் போனதற்கு மாற்றா யிங்கே
பொரியள்ளிப் போட்டிட்ட புரட்டர் கூட்டம்
என்நாட்டு மக்களுக்கிங் கிடும்பை தந்தே
இருளாட்சி செய்வதற்குத் துணையாய் நின்றே,
அன்றலர்ந்த கிளர்ச்சிதனை அடக்கி, வீழ்ந்த
ஆங்கிலேய னுக்கிங்கே சிலையா?'' என்றே
தென்னாட்டுத் தொண்டருளங் குமுறி னார்கள்
திரண்டெழுந்தே சிலைநீக்கப் போரிட் டார்கள்.

6. கொடுமைக்குப் பெயர்பெற்ற வெள்ளைக் காரன்
கொலையுண்டு சிலையான கொடிய நீலன்!
கெடுமதிய னொருவனுக்கு நினைவுச் சின்னம்
கீழ்மைக்கோ ரடையாள மென்று நொந்தே
இடும்பைதரும் முள்ளதனை எடுத்தல் போலே
இவன்சிலையை அகற்றிடவே துடித்தெ ழுந்த
தடுமாற்ற மில்லாத தேச பக்தர்
தமிழகத்தின் தலைநகரில் அறப்போர் செய்தார்!

7. காலையிலே கைதாகிக் கதிரோன் மேற்கே
கவிழுங்கால் கைப்பிசைந்தே விடுத லையை
மாலையுடன் எதிர்பார்ப்பா ரின்று! பண்டோ
மனத்திடமும் தொண்டுணர்வும் கொண்ட வீரர்
ஓலைதனிலே எழுத்தாணி உழுதாற் போலே
உடலெல்லாம் அடிபட்டு வீழ்ந்த போதும்,
சாலைமரம் தனிற்பிணமாய்த் தொங்கும் போதும்
சாயாத உறுதிக்கே சான்றா னார்கள்!

8. நீலனது சிலைதன்னை நிறுவி ஆண்டோர்
நேர்முறையி லதையற்ற பறுத்த போதும்
ஓலமிட்டே ஒதுங்காமல் சிலையை நீக்க
உறுதியுடன் முனைந்தார்கள் சிலபேர்; கூந்தல்
ஆலமரப் பருமனுக்கே அஞ்சா வாள்போல்
ஆண்டவரின் அடக்குமுறைக் கஞ்சல் விட்டே
நீலனது சிலைசிதைக்க உளியெ டுத்தே
நெஞ்சுயர்த்திக் காமராச ரோடு வந்தார்!

9. உளி, சுத்தி யாலுடைக்க முனைந்தோர் தம்மை
ஊராண்டோர் சிறைப்பிடித்தார்; போரட்
டத்தை
எளிதாக எண்ணாமல் ஆட்சி யாளர்
என்செய்வா ரென்பதனை எண்ணித் தேர்ந்தே
தெளிவான மனம்படைத்தோர் தமைத்தி ரட்டித்
தீவிரமாய் அறப்போரைத் தொடர லானார்;
கலியாண ராமய்யர், நண்பர் ஆக்கூர்
களங்கண்டார், காந்தியண்ணல் ஆத ரித்தார்!

10. பொதுமக்கள் தமக்கின்னல் நேரா வாறு
போராட்ட முறைவகுத்தார்; தமிழர் நாட்டில்
அதுவரையி வில்லாத புதுமை யாக
அஞ்சலையும் பத்மாசினி அம்மை யாரும்
எதுவரினும் வரட்டுமெனும் துணிச்ச லோடே
இயக்கத்தில் பங்கேற்றுச் சிறைபு குந்தார்!
மதுமலர்கள் தீக்குளிக்கத் துணிந்த தென்னே!
மாதரிவர் தியாகத்தை மறக்கப் போமா!

11. அறப்போரில் பங்கேற்க ஆர்வங் காட்டி
அன்றுவந்த தோர்குடும்பம் தென்னார்க்காட்டில்
பிறந்தவராம் அஞ்சலையின் குடும்பந் தன்னைப்
பின்வந்தோர் மறந்தாலும் வரலா றுண்டே!

முறமேந்திப் புலியொறுத்த மங்கை. தங்கை
முருகப்பப் படையாட்சி மனைவி, பெற்ற
மறமகளாம் லீலாவும் அறப்போர் செய்தே
மாதாவைப் பிரிந்துசிறை ஏகினாரே!

12. சாவர்க்கர் தனலையெழுத் தாக்கிச் செய்த
சரித்திரமாம் 'எரிமலை'யைப் படித்தே நீலன்
ஏவலிட்டுக் கொலைபுரிந்த செயல றிந்தே
இளைஞர்கள் கொதித்திட்டா ரவர்க ளுள்ளே
ஆவலுடன் போராட முன்வந் திட்டார்
அருந்தொண்டர் ஜமதக்னி, ஆயு ளெல்லாம்
இவர்தொழிலே போராட்டம்; சிறைவா சந்தான்!
என்றாலும் இவர்பெயரை மறந்தே போனோம்

13. பெருந்தலைவர் பலரிந்தப் போராட் டத்தின்
பின்பலமாம் இருந்தூக்கி வந்த போதும்
பெரும்பான்மை யானவர்கள் போராட் டத்தைப்
பெரிதாகக் கருதாமல் ஒதுங்கி விட்டார்!
கருவேலன் மரம்சாய்க்கக் கத்தியின்றிக்
கையாலே குத்தியதைப் போலே, நன்றே
உருவான போராட்டம் ஓய்ந்த தந்தோ!
ஒரு சிலரின் உதிரத்தைக் குடித்த தோடே!

14. நல்வினைகள் நிரந்தரமாய்த் தோற்ப துண்டோ?
நடுவானில் எரிகதிர்தான் நிற்ப துண்டோ?
வெல்லாத அறப்போரும் உண்டோ? கால
விரயத்தால் உண்மைகிழ டான துண்டோ?
சொல்வல்ல ராசாசி அமைச்ச ராகிச்
சென்னையிலே பொறுப்பேற்றார், நீல னுக்கும்
இல்லையிடம் பொதுவிடத்தில் என்று கூறி
இவன்சிலையை நீக்கிடவே மகிழ்ந்தார் மக்கள்!